(நிராகரிப்பவர்களே!) நீங்கள் வெற்றி(யின் மூலம் தீர்ப்பைத்) தேடிக் கொண்டிருந்தால், நிச்சயமாக அவ்வெற்றி (முஃமின்களுக்கு) வந்து விட்டது இனியேனும் நீங்கள் (தவறை விட்டு) விலகிக் கொண்டால் அது உங்களுக்கு நலமாக இருக்கும்; நீங்கள் மீண்டும் (போருக்கு) வந்தால் நாங்களும் வருவோம்; உங்களுடைய படை எவ்வளவு அதிகமாக இருந்தாலும், அது உங்களுக்கு எத்தகைய பலனையும் அளிக்காது. மெய்யாகவே அல்லாஹ் முஃமின்களோடு தான் இருக்கின்றான் (என்று முஃமின்களே கூறி விடுங்கள்).

*அல்குர்ஆன் - அல்அன்ஃபால் 19*

# வைகறை வெளிச்சம்


**ஜனவரி 2012**
**ஹிஜ்ரி 1433 ஸஃபர்**

ஆசிரியர்:
**மு.குலாம் முஹம்மது.** M.A (Journalism & Mass Communication)
துணை ஆசிரியர்:
**கே.எம். இல்யாஸ் ரியாஜி**

**தனி இதழ் ரூ.15/-**
**ஆண்டு சந்தா**
**உள்நாடு ரூ.180/-**
**வெளிநாடு ரூ.1500/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**வைகறை வெளிச்சம்**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

எண்.52/1 மண்ணடி தெரு, 4வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை-1.

தொலைபேசி: 044-45566909
கைபேசி : 9444239594


## உள்ளே......


04 தரீக்குல் குர்ஆன்
*இல்லியாஸ் ரியாஜி*

07 முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?
*அஹ்மது ஜலாலுத்தீன் நத்வி*

10 தலித் அடையாளம்
*ஸ்டாலின் ராஜாங்கம்.*

17 முல்லைப் பெரியார் பிரச்சனையின் நதி மூலம்
*பெங்களூர் எம்.எஸ். கமாலுத்தீன்*

22 அல்குர்ஆனின் அறிவியல் அத்தாட்சிகள்.
*ரஹ்மத் ராஜகுமாரன்.*

24 மாபெரும் தீர்ப்பு மோடியின் ஆட்சியில் நடந்த கோரமான கொலைகள்
*மு. குலாம் முஹம்மது*

30 2001-2011 ஐரோப்பாவின் பெரும் போரும் எதிர்விளைவுகளும்
*மு. குலாம் முஹம்மது*

47 கஷ்மீரில் தொடரும் அவலம்.
*மு. குலாம் முஹம்மது.*

60 புதைக்கப்பட்ட மக்கள் மறைக்கப்பட்ட வரலாறு
*ஆங்ச்சுவீ.*

63 மயிலாடுதுறையில் நடந்தது என்ன?
*களஆய்வு*



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai Courts. Private Circulation to promote Original Issue.

# தானே-புயல் யாருக்கு சோதனை?

*டிசம்பர் 30 - ஆம் தேதி 2011.*

வட தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களைப் புரட்டிப் போட்டுவிட்டுப் போய் விட்டது புயல் காற்று.

விழுப்புரம், பாண்டிச்சேரி, கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டிணம் உள்ளிட்ட மாவட்டங்கள் பாதிப்புக்குள்ளாயின.

எனினும் கடலூர் மாவட்டம் பேரழிவுக்கு ஆட்பட்டுநிற்கிறது.

விஞ்ஞான உலகம் அந்தப் புயலுக்கு 'தானே புயல்' என்று பெயர் சூட்டியிருந்தது. புயலுக்கு என்ன பெயர் வைத்தாலும் அதன் தன்மை மாறப் போவதில்லையல்லவா? 'தானே புயல்' தன் வேலையை அந்தப் பகுதிகளில் கோரமாகவே காட்டி விட்டது.

*2004* டிசம்பர் *24* ஆம் தேதியன்று எழுந்த 'சுனாமி எனும் பேரலையால் வந்த பேரழிவுக்கு அப்புறமாகவும் அடுத்த படியாகவும் இப்படி ஒரு பேரழிப்புக்கு ஆட்பட்டு நிற்கின்றன தமிழகத்தின் வட மாவட்டங்களுள் சில.

அரசு கூறும் கணக்குப்படி, நாற்பத்து இரண்டு மனித உயிர்பலிகள். மூன்று லட்சம் வீடுகள் நாசம். மின்சார இணைப்பு, தொலைபேசி இணைப்பு துண்டிப்பு. விளை நிலங்கள் பயிர்கள் அழிவு. சாலைப் போக்குவரத்து பாதிப்பு. இவ்வாறாக மக்களின் அன்றாட வாழ்வோடு தொடர்புடைய அனைத்தும் பாதிப்புக்குள்ளாகி நின்றன.

சுமார் ஐயாயிரம் கோடிக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டிருக்கும் என மதிப்பிடப் பட்டிருக்கிறது.

புயலால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிட மத்திய உள்துறைச் செயலாளர் லோகேஷ்ஜா தலைமையில் பதினோறு பேர் குழுவை மத்திய அரசு தமிழகத்துக்கு அனுப்பியது. இந்தக் குழு சேதமதிப்பை அறிக்கையாக்கி மைய அரசிடம் சமர்ப்பிக்கும் முன்னரே முதல் கட்ட நிவாரண நிதியாக ஐநூறு கோடி தருகிறது மைய அரசு தமிழக அரசுக்கு.

ஏற்பட்ட இழப்பை ஈடு செய்திட *5249* கோடி நிதி உதவி தர வேண்டும் என்று மாநில அரசு நடுவண் அரசிடம் கேட்கிறது. இது பேரிழப்பின் அளவை நாம் தெரிந்து கொள்ள உதவும்.

## ஏனிந்தப் பேரிழப்பு:

"அப்பகுதியிலுள்ள மக்கள் செய் குற்றங்களுக்கா அல்லாஹ் அவர்களை தண்டிக்கிறான்" இப்படிக் கூறுவோர் அருள் மறையாம் திருக்குர் ஆனிலிருந்தே சான்றுகளைக் காட்டுகின்றனர்.

"ஆது, ஸமூது (இவ்விரு சமுதாயமும் மறுமை நாள் எனும் ) திடுக்கமுறச் செய்யும் நாளை பொய்ப்பித்தனர். எனவே ஆதுக் கூட்டம் பெரும் சப்தத்தால் அழிக்கப்பட்டது. இன்னும் ஆதுக் கூட்டம் பேரொலியுடன் வேகமாகச் சுழன்றடித்த சூராவளிக் காற்றால் அழிக்கப்பட்டனர். அவர்கள் மீது அதை ஏழு இரவுகளும் எட்டுப் பகல்களும் தொடர்ந்து வீசச் செய்தான். அது அந்த சமூகத்தினர் வேரோடு சாய்ந்து விட்ட பேரீத்த மரங்கள் போல் (பூமியில்) விழுந்து கிடப்பதை நீர்பார்ப்பீர்" *(69: 4-7)*

எல்லாம் வல்ல இறைவன் இப்படிக் கூறியிருப்பதால் இது போன்ற இயற்கைச் சீற்றங்களுக்கு ஆட்பட்டு நிற்போரெல்லாம் ஆது, ஸமூது கூட்டத்தினர் போல மனம் போன போக்கில் வாழ்ந்தவர்களே என்கின்றனர்.

இது நியாயமற்ற மனிதத் தன்மையற்ற கருத்து. அல்லல்களுக்கு ஆளாகி நிற்போரை மேலும் வேதனைப் படுத்தும் கருத்து இத்தகைய கருத்தை இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

## உண்மையைச் சொன்னால்...

இறைத்தூதர்களையும் வேதங்களையும் பெற்ற சமுதாயம் அவற்றைப் பயன்படுத்தி நேர்வழி காண்பதற்குப் பதிலாக தீய வழியிலேயே தொடர்ந்து பயணிக்கும் போது அவற்றுள் சிலவற்றை அல்லாஹ் இவ்வாறான அழிவுகளுக்கு உள்ளாக்கி இருக்கிறான் என்பது உண்மையல்ல.

எனினும் இப்போது நடக்கும் பேரழிவுகளை அந்த வரிசையில் சேர்ப்பது நியாயமே இல்லை. இறைத் தூதர்களின் வருகையும் வேதங்களின் வருகையும் முற்றாக முடிந்து போன பிறகு நபித்துவத்தின பணிகளைச் செய்திட வேண்டிய முஸ்லிம் சமுதாயம் அதை முறைப்படியும் முழு மூச்சாகவும் நிறைவேற்றாமலிருந்து கொண்டு, அல்லாஹ் என்றால் யார்? இறைத் தூதர்கள் யார்? வேதங்கள் என்பன என்ன? என்றெல்லாம் எடுத்துச் சொல்லாமல் வாழாவிருந்துவிட்டு "நீ என் அல்லாஹ்வை ஏற்கவில்லை. அவன் சொல்லும் நெறிப்படி வாழவில்லை அதனால் நீ அழிகின்றாய். இன்னும் அழிவாய்" எனப் பேசுவது சரியா? நியாயமா?

இதர சமுதாய மக்களுக்கு நல்வழிகாட்டவும் பொல்லாத போக்கிலிருந்து அவர்களை மீட்கவும் படைக்கப்பட்டதே முஸ்லிம் சமுதாயம். இதை செய்யத் தவறினால் "ஹைரஉம்மத்" சிறந்த சமுதாயம் என்று அல்லாஹ் நமக்குச் (கான்க குர்ஆன் 3:110) சூட்டிய பெயரை நாம் இழந்து விடுவோம்.

## யதார்த்தம் என்னவெனில்:

இது போன்ற பேரிழப்புகளுக்கு உள்ளாகி கையறு நிலையில் நிற்கும் மக்களை இறைவன் சோதிக்கின்றான் என்பதை விட இந்த இயற்கைச்சீற்றங்களால் எவ்வித பாதிப்புக்கும் உள்ளாகாத மக்களை இறைவன் சோதிக்கின்றான் என்பதே உண்மை.

பாதிப்புக்கு உள்ளாகி நிற்கும் மக்களுக்கு பாதிக்கப்படாதவர்கள் உதவிடுகின்றார்களா? அல்லது, அவர்கள் செய்தபாவத்திற்கு அவர்கள் அனுபவிக்கிறார்கள் நமக்கென்ன வந்தது. என்று ஒதுங்கிக் கொள்கிறார்களா? என்று இறைவன் சோதிக்கிறான்.

வாழப்பிறந்தவன் நான், வீழப்பிறந்தவன் நீ, வென்றவன் நான், தோற்றவன் நீ, என்று இறுமாப்புடன் எண்ணாமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதே இஸ்லாம் காட்டும் வழி.

இதில் சாதி, இனம், மதம், மொழி, என்ற பேதங்களை ஓரங்கட்டி ஒதுக்கி வைத்து விட்டு உதவிகளைச் செய்திட வேண்டும். இது போன்ற இயற்கைச் சீற்றங்கள், பசி, இவையெல்லாம் மதம், சாதி பார்த்து வருவதில்லை.

ஒருமுறை அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள் "நீங்கள் (பாதிக்கப்பட்டவர்கள் மீது) இரக்கம் காட்டாதவரை உண்மையான இறை நம்பிக்கையாளர்களாக முடியாது " இவ்வாறு நபி - (ஸல்) கூறியவுடன் நபித் தோழர்கள் "நாங்கள் அனைவருமே (சக மனிதன் மீது) இரக்கமுள்ளவர்களாகத் தான் இருக்கிறோம்?" என்று கேட்டனர். அதற்கு நபி (ஸல்) கூறினார்கள் "நீங்கள் உங்களுக்கு அறிமுகமானவர்கள் மீது காட்டும் அன்பை நான் குறிப்பிடவில்லை. மாறாக (அறிமுகமானவர், அறிமுகமில்லாதவர், உறவினர், அந்நியர் என அனைவர் மீதும்அன்பு காட்டவேண்டும் என்கிறேன்" **(நூல் : தப்ரானீ)**

சுனாமியால் ஏற்பட்ட பேரிழப்பின் போதும் அண்மையில் திருப்பூரை வெள்ளப் பெருக்கு உலுக்கிய போதும் முஸ்லிம்கள் ஆற்றிய சேவை வரலாற்றில் இடம் பெற்றது.

உண்மையான இறை நம்பிக்கையாளர்களின் குழு இப்படித் தான் களப்பணியாற்றி துயர் துடைப்புப் பணிகளில் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளுமேயன்றி வெட்டித் தத்துவம் பேசிக் கொண்டிருந்திடாது. அல்லாஹ் கூறுகிறான்: உங்களை நீங்களே பரிசுத்தவான்கள் என்று புகழ்ந்து கொள்ளாதீர்கள். யார் பயபக்தியுள்ளவர்கள் என்பதை அவன் நன்கறிவான். **(53: 32)**

தமிழக அரசின் சார்பில் இதற்காக நிதி திரட்டப்படுகிறது. அனைவரும் தமிழக அரசுக்கு முதலமைச்சர் நிவாரண நிதி அனுப்பி உதவும் படி கேட்டுக்கொள்கிறோம்.






# தரீக்குல் குர்ஆன்

மவ்லவி K.M.இல்யாஸ் ரியாஜி

وَظَلَّلْنَا عَلَيْكُمُ الْغَمَامَ وَأَنزَلْنَا عَلَيْكُمُ الْمَنَّ
وَالسَّلْوَىٰ ۖ كُلُوا مِن طَيِّبَاتِ مَا رَزَقْنَاكُمْ ۖ
وَمَا ظَلَمُونَا وَلَٰكِن كَانُوا أَنفُسَهُمْ يَظْلِمُونَ

**அத்தியாயம்:** 2

**வசனம்:** 57

, இன்னும், உங்கள் மீது மேகங்களை நிழல் தரச் செய்தோம். மேலும் மன்னு, சவா எனும் உயர்தர உணவுகளை உங்களுக்காக இறக்கி வைத்து "நாம் உங்களுக்கு வழங்கியுள்ள தூயவற்றை சாப்பிடுங்கள்" என்றோம். (அவர்கள் மாறு புரிந்தனர். இதனால்) அவர்கள் நமக்குத் தீங்கு செய்து விடவில்லை. மாறாக தங்களுக்கே தீங்கிழைத்துக் கொண்டனர்.

இஸ்ரவேலர்களுக்கு அல்லாஹ் வழங்கிய அருட்கொடைகளை முந்தைய வசனங்களில் பட்டியலிட்டது போலவே இவ்வசனத்திலும் அவர்களுக்குப் புரிந்த அருள்களைக் கூறுகிறான்.

ஃபிர்அவ்னின் கொடுங்கோன்மையிலிருந்து தப்பித்து செங்கடல் வழியாக அல்லாஹ்வின் உதவியால் வெளியேறிய இஸ்ரவேலர்களிடம் 'மூஸா' நபி (அலை) அவர்கள் கூறினார்கள்: "உங்களுக்காக அல்லாஹ் விதித்துள்ள புனிதமான (பைத்துல் முகத்தஸ் வீற்றிருக்கும் ஜெருசலம்) பகுதிக்குச் செல்லுங்கள். இதில் நீங்கள் பின் வாங்கினால் நஷ்டமடைந்தவர்களாவீர்கள்" என்று. அவர்களிடம் உள்ள நல்லோர்களும் இதை வலியுறுத்தினர். எனினும் அதனை அவர்கள் ஏற்கவில்லை.

அங்கே 'அமாலிகா' எனும் பலம்மிக்க கூட்டத்தினர் இருக்கின்றனர். அவர்களை எங்களால் எதிர்க்க இயலாது. அந்த அமாலிகாவினர் தாமாகவே அங்கிருந்து வெளியேறினால்தான், நாங்கள் அங்கே செல்வோம் என்று கூறிவிட்டனர். அந்த பூமியில் நீங்கள் நுழைந்து விட்டால் நீங்களே வெற்றி பெறுவீர்கள் என்று தன்னம்பிக்கையூட்டப்பட்ட போதும் அங்கே செல்ல பிடிவாதமாக மறுத்து விட்டனர் இஸ்ரவேலர்கள்.

இதனால் 'தீஹ்' எனும் பாலைவனத்தில் நாற்பது வருடங்கள் சுற்றித்திரிந்து தடுமாற வேண்டிய நிலைக்கு அல்லாஹ் அவர்களை ஆளாக்கி விட்டான். இதுபற்றிய விபரம் திருக்குர்ஆனில் *5:21-26* வரையுள்ள வசனங்களில் காணப்படுகிறது.

திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுகின்றனர்: எகிப்து (மிஸ்ரா) சிரியா (ஷாம்) ஆகிய நாடுகளுக்கு இடையே உள்ள 'தீஹ்' எனும் பாலைவனத்தில் தான் இஸ்ரவேலர்களுக்கு மேகம் நிழல் தந்தது. அமாலிகாவினருடன் யுத்தம் செய்ய இஸ்ரவேலர்கள் மறுத்தபோது நாற்பது ஆண்டுகள் பாலை வனத்தில் அலைந்தனர். பதினைந்து முதல் பதினெட்டு மைல் தூரத்துக்குள்ளேயே அவர்கள் தட்டழிந்து திரிந்தனர். பகல் முழுவதும் நடந்து, நடந்து ஓரளவு தூரம் வந்து இரவில் ஓரிடத்தில் தங்குவார்கள். காலையில் விழித்துப் பார்த்தால் நேற்று புறப்பட்ட அதே இடத்தில் இருந்து கொண்டிருப்பார்கள் என்றும் சில அறிவிப்புகளில் காணப்படுகிறது.

அவர்கள் எல்லோரும் பாலைவனத்தில் அலைந்து திரிந்தபோது 'மூஸா' நபியிடம் எங்களுக்கு யார் உணவு தருவது? எனக் கேட்டனர். அப்போது அல்லாஹ் மன்னு, சல்வாவை இறக்கி வைத்தான். எங்களுக்கு யார் நீர் தருவது? எனக் கேட்டனர். உடனே அல்லாஹ் மூஸா நபியிடம் உம் கைத்தடியால் கல்லில் அடியுங்கள் என்றான்.

அவர்கள் அவ்வாறே அடித்தார்கள். அங்கிருந்து நீரூற்றுகள் தோன்றின. பின்னர் இரவில். யார் எங்களுக்கு வெளிச்சம் தருவது? எனக் கேட்டனர். உடனே அவர்கள் இருந்த இடத்தின் நடுவில் ஒரு ஒளித்தூண் அமைக்கப்பட்டது. பிறகு பகலில், இந்த பாலைவனத்தில் யார் எங்களுக்கு நிழல் தருவது? எனக் கேட்டனர். அப்போது அல்லாஹ் மேகங்களைத் திரட்டி அவர்களுக்கு நிழல் தந்தான்.

பின்னர் யார் எங்களுக்கு ஆடைதருவது எனக் கேட்டனர். உடனே அவர்களுக்கு அழுக்கடையாத இற்றுப் போகாத ஆடைகள் வழங்கப்பட்டன. குழந்தை வளர்வது போல அவர்கள் வளர, வளர அந்த ஆடைகளும் வளர்ந்தன. அல்லாஹ்வே மிக்க அறிந்தவன்.

**(நூல்: குர்த்துபீ)**

உடலைப் பொசுக்கும் பாலை நிலத்தில் நிழல் கிடைக்கும் என்பதை கற்பனை செய்துகூட பார்க்க இயலாது. அமாலிகாவினருடன் போர் புரிய வேண்டும் என்ற மூஸா நபியின் கட்டளையைப் புறக்கணித்த பின்னரும் இஸ்ரவேலர்களுக்கு அருள் புரிய வேண்டும் என்றே அல்லாஹ் விரும்பினான். அதனால் பாலைவனத்தில் மேகத்தைக் குடையாக்கி அவர்களுக்கு நிழல் தந்தான்.

இறைத்தூதர்களுக்குத்தான் மேகம் நிழல் அளித்ததாக வரலாறு கூறுகின்றது. ஆனால் ஒரு சமுதாயத்துக்கு இந்தப் பேரருள் கிடைத்துள்ளது என்றால் அது இஸ்ரவேலர்களுக்கு மட்டும்தான் என்பதையும் வரலாற்றின் மூலம் நாம் புரிந்து கொள்கிறோம். இஃதோர் மகத்தான பேரருளன்றோ...!

## மன்னு:

மழையோ விவசாயத்துக்கு ஏற்றதாகவோ இல்லாத அந்தப் பாலைவனத்தில் உணவுக்காக இஸ்ரவேலர்கள் கஷ்டப்படக் கூடாது என்பதற்காக அல்லாஹ் அவர்களுக்கு நேரடியாக உணவையே தந்தருளினான். அந்த உணவுகளில் ஒன்றின் பெயர் மன்னு.

இது இனிப்பான பானம் என்றும் இனிப்பான உணவுப்பொருள் என்றும் இருவேறு கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன திருமறை விரிவுரைகளில்.

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் (ரழி) கூறுகின்றார்கள்: "இஸ்ரவேலர்களுக்காக மரங்களில் இறங்கி கொண்டிருந்த உணவுப் பொருள்தான் "மன்னு" ஆகும். காலையில் அங்கு சென்று அவர்கள் விரும்பிய அளவு உண்பார்கள். "ஹழ்ரத் கதாதா (ரழி) கூறுகின்றார்கள். "பாலை விட வெண்மையாகவும் தேனை விட மதுரமாகவும் இஸ்ரவேலர்களின் இருப்பிடங்களிலேயே பனியைப் போல இறங்கிக் கொண்டிருந்த பொருள் தான் மன்னு ஆகும்".

**(நூல்: இப்னு கதீர்)**

விவசாயம் செய்யாமல் கஷ்டப்படாமல் இஸ்ரவேலர்களுக்கு கிடைத்த உணவுப்பொருள் அல்லது பானம் என்று பொதுவாக 'மன்னு' என்பதற்கு பொருள் கூறலாம். இதற்கு பின்வரும் நபிமொழி ஆதாரமாக அமைகிறது. நபி (ஸல்) கூறினார்கள்: " சமையல் காளான் இஸ்ரவேலர்களுக்கு அல்லாஹ் இறக்கி வைத்த 'மன்னு' வகையைச் சார்ந்ததே. அதன் சாறு கண் நோய்க்கு மருந்தாகும்".

**(நூல்: புஹாரீ, முஸ்லிம்- அறிவிப்பாளர்: ஸயீத் பின் ஸைத் (ரழி)**


## இறைவனின் அழகிய வழிகாட்டுதல் அனைவருக்கும்!

### மனிதன் இந்த உலகில் எப்படி வாழ வேண்டும்?

இந்த வினாவிற்கு முழுமையான விடையே திருக்குர்ஆன். இதனை அறிந்திட வேண்டியது நமது கடமை.

**அறிந்திட விரும்புவோர் இலவசமாக திருக்குர்ஆன் தமிழ்மொழிபெயர்ப்பைப் பெற்றிட கீழ்க்காணும் முகவரிக்கு எழுதுங்கள்.**

**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேசன் டிரஸ்ட்**

**52/1, மண்ணடி தெரு,**
**கோனிகா கலர் லேப் பில்டிங்**
**4வது மாடி,அறை எண் 7.**
**மண்ணடி சென்னை-1**

**இந்த இலவச விநியோகம் முஸ்லிம்களுக்கு இல்லை.**

ஹழ்ரத் அபூ உபைத் (ரஹ்) கூறுகின்றார்கள்: விதை விதைக்காமல், நீர் பாய்ச்சாமல், உரம் போடாமல் வேறு எந்தச் செலவும் இல்லாமல் (முற்றிலும் இலவசமாக) கிடைக்கும் பொருளே சமையல் காளான். இஸ்ரவேலர்களுக்கு 'மன்னு' எனும் உணவு உழைப்பு, சிரமம் ஏதுமின்றிக் கிடைத்தது என்பதே இதன் பொருள்.

தினமும் வைகறை நேரம் முதல் சூரியன் உதிக்கும் வரை அவர்களுக்கு மன்னு இறங்கிக் கொண்டிருக்கும். அன்றைய ஒரு நாளுக்குத் தேவையான அளவுக்கு ஒவ்வொருவரும் அதை எடுத்துக் கொள்வர். (தினமும் மன்னு, சல்வா இறங்கிக் கொண்டிருக்கும் என்பதால் அதை சேகரிக்க வேண்டிய அவசியமும் இல்லை) மறு நாளைக்குச் சேர்த்து எடுத்து சேகரித்தால் அது கெட்டுப் போய்விடும். ஆனால் வெள்ளிக் கிழமையன்று இறங்கும் உணவை சனிக்கிழமைக்கும் சேர்த்து எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போது அது கெட்டுப் போகாது, ஏனெனில் சனிக்கிழமை உணவு இறங்காது. அது வணக்க வழிபாடுக்குரிய நாள் ஆகும்.

**(நூல்: குர்த்துபீ இப்னு கதீர்)**

## ஸல்வா:

காடை போன்ற ஒரு பறவையின் பெயர் தான் "சல்வா" என்று எல்லா விரிவுரையாளர்களும் ஒருமித்துக் கூறியுள்ளனர் என்கிறார்கள் இப்னு அதிய்யா (ரஹ்) அவர்கள்.

**(நூல்: குர்த்துபீ)**

ஹழ்ரத் கதாதா (ரழி) கூறுகின்றார்கள்: சிவப்பு போன்ற நிறமுள்ள ஒரு பறவை தான் சல்வா ஆகும். தென்றல் காற்று அப்பறவைகளை இஸ்ரவேலர்களிடம் கொண்டு வந்து சேர்க்கும். தங்களின் ஒரு நாள் தேவைக்கு ஏற்ப அவற்றைப் பிடித்து அறுத்து உணவாக்கிக் கொள்வார்கள். தேவைக்கு அதிகமாக எடுத்தால் இறைச்சி கெட்டுப் போய்விடும்.

**(நூல்: இப்னு கதீர்)**

ஆக இஸ்ரவேலர்களுக்கு எளிதாகவே அவர்கள் விரும்பும் சுவையான உணவை அல்லாஹ் பாலைவனத்தில் வைத்து வழங்கினான். எப்போது நினைத்தாலும் பேராச்சரியம் ஏற்படும் அளவுக்கு அதிசய உணவுகளை வழங்கிய அல்லாஹ் ஒரே ஒரு நிபந்தனை மட்டுமே விதித்தான். சேகரித்து வைக்கக் கூடாது என்பதே அந்த நிபந்தனை, ஆனால் அல்லாஹ்வின் மீது நம்பிக்கையில்லாமல் உணவை சேகரிக்க ஆரம்பித்தனர். இதனால் அந்த இறைச்சி நாற்றமடிக்க ஆரம்பித்தது.

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள் இஸ்ரவேலர்கள் (என்றொரு சமுதாயம்) இருந்திருக்காவிட்டால் இறைச்சி துர்நாற்றமடித்திருக்காது. ஹவ்வா (ஆதம் நபியின் மனைவி) இருந்திருக்காவிட்டால் எந்தப் பெண்ணும் தன் கணவனை ஏமாற்றியிருக்க மாட்டாள்.

**(நூல்: புஹாரீ, முஸ்லிம் 3330)**

சேகரிக்கக் கூடாது என்ற இறைக்கட்டளையை மீறி இறைச்சியை சேமித்தனர் இஸ்ரவேலர்கள். இதனால் அந்த இறைச்சி கெட்டுப் போய் நாற்றமடித்தது. அவர்கள் மட்டும் அவ்வாறு செய்யாமல் இருந்திருந்தால் இறைச்சி இப்போது கூட துர்நாற்றமடிக்காது. அது போல தடுக்கப்பட்ட மரக்கனியைத் தின்று விடும் படி ஆதம், ஹவ்வா (அலைஹிமா) இருவரையும் ஷைத்தான் தூண்டினான். ஹவ்வாவும் ஆதம் நபிக்கு ஊக்கமளித்தார்கள். அவர்கள் அவ்வாறு செய்ததால் அவர்களின் வழித் தோன்றல்களான மற்ற பெண்களும் தம் கணவன்மார்களுக்கு பேராசையூட்டுகின்றனர் என்பதே இந்த நபி மொழியின் கருத்து என்று விரிவுரையாளர்கள் கூறுகிறார்கள்.

**(நூல்: உம்ததுல்காரீ,**

**மிர்காத் ஷரஹ் மிஷ்காத்)**

அல்லாஹ்வின் மீது நம்பிக்கையின்மை நன்றி கெட்டத் தனம் ஆகிய துர்குணங்களைக் கொண்டவர்களே நாங்கள் என மீண்டும் ஒரு முறை நிரூபித்து விட்டனர் இஸ்ரவேலர்கள்.

"நாம் உங்களுக்கு வழங்கியுள்ள தூயவற்றை சாப்பிடுங்கள்" என்று அல்லாஹ் அனுமதியும் வழங்கியிருந்தான். எளிதாக இலகுவாகக் கிடைத்துக் கொண்டிருந்த பேருளை அனுபவித்துக் கொண்டு அதற்காக நன்றி செலுத்த வேண்டும் என்ற உணர்வே இல்லாமல் வாளாவிருந்ததோடு அல்லாஹ்வின் மீது அவநம்பிக்கை கொண்டு மாறு புரிந்தனர்.

இப்படி அவர்கள் அடுக்கடுக்காக புரிந்து வந்த அக்கிரமங்களால் அல்லாஹ்வுக்கு எந்த வித இடையூறும் ஏற்பட்டு விடப் போவதில்லை. தங்களுக்கே இவர்கள் அநீதி செய்து கொண்டனர். இதையே அல்லாஹ் இந்த வசனத்தின் இறுதியில் கூறுகிறான்.

மேகம் குடையாகி நிழல் தந்ததும். வானத்திலிருந்து உணவுகள் இறங்கி வந்ததும் பேருள்கள் மட்டும் அல்ல. அவை ஆச்சரியமான அதிசயங்களும் கூட. இந்த அற்புதங்களை நேரடியாக கண்கூடாக அவர்களே கண்டார்கள். மட்டுமல்ல, அவர்களே அவற்றின் அனுபவ உரிமையாளர்களாகவும் திகழ்ந்தனர்.

எனினும் இஸ்ரவேலர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்க முன்வரவில்லை. அவர்களின் 'கல்' நெஞ்சங்களில் இந்த அற்புதங்கள் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த வில்லை என்பது அவர்கள் எவ்வளவு கீழ்த்தரமான இனத்தினர் என்பதற்கு வரலாற்றுச் சான்றாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

அந்த நன்றி கெட்ட இனத்துக்கு தன் அருட்கொடைகளின் அணிவகுப்பை அத்தோடு நிறுத்திக் கொள்ள வில்லை அருளாளன் அல்லாஹ்.... தொடர்ந்து அருள் புரிந்தான். அவை....

**இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்...**

## முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?-6

# பாரசீக சமூகத்தில் நிலவிய ஏற்றத் தாழ்வுகள்:

**பேரறிஞர் : அபுல் ஹசன் அலீ நத்வி,**
**மொழிபெயர்ப்பு : அஹ்மது ஜலாலுத்தீன் நத்வி.**

ஆன்மீகக் குடும்பங்கள் சமூகப் பிரமுகர்கள் ஆகியோர் அறிவாலும், ஆற்றலாலும், பிறப்பாலும் சராசரி மனிதனைவிட மேலானவர்கள் என்று பாரசீக மக்கள் நம்பினார்கள். இதனால் அவர்களுக்கு எல்லையில்லா அதிகாரங்களை வழங்கினார்கள். முழுமையாக அவர்களுக்குப் பணிந்து கிடந்தார்கள்.

பேராசிரியர் அர்தஹர் கிறிஸ்டின் சீன் அவர்கள் தனது 'ஸாஸானியர் காலத்து ஈரான்' எனும் நூலில் கூறுகிறார்.

"பிறந்த குலம் செய்யும் தொழில் இவற்றின் அடிப்படையில் ஈரானிய சமூகம் பிளவுபட்டுக் கிடந்தது இந்தப்பிளவுகளை ஒட்டவைக்கவோ இணைக்கவோ முடியாத அளவுக்கு சமூகம் சிதறிக் கிடந்தது"

பிரபுக்கள் உயர் குலத்தில் பிறந்தவர்கள் ஆகியோரின் சொத்துக்களை குடிமக்கள் யாரும் விலைக்கு வாங்கக் கூடாது என்றொரு சட்டமே இருந்ததது".

"ஒருவன் எந்தப் பரம்பரையில் பிறந்தானோ அந்தப் பரம்பரையின் பாரம்பரிய முறைகளைக் கொண்டே திருப்தி அடைந்து கொள்ள வேண்டும் அதற்குமேல் உயர்ந்திட அவன் முயற்சிக்கக் கூடாது. எந்தத் தொழிலைச் செய்வதற்காக கடவுள் அவனைப் படைத்திருக்கிறாரோ அது தவிர வேறு தொழிலை அவன் செய்யக் கூடாது".

"பிற்பட்ட வகுப்பினரை ஈரானிய ஆட்சியாளர்கள் அரசுப் பணிகளில் நியமிப்பதில்லை. ஒவ்வொரு வகுப்பினருக்கும் தராதரங்களும் அதற்கேற்ற சமூக அந்தஸ்தும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதுவே சாசானியர்களின் அரசியல் சட்டம்".

**(நூல் சாசானியர் காலத்து ஈரான்)**

மனித குலத்தையே இழிவுக்குள்ளாக்கும் இந்த இனப்பாகுபாட்டை தலைவர்களும் பிரபுக்களும் வீற்றிருக்கும் அவையில் அப்பட்டமாய்க் காணலாம்.

பிரபுக்களுக்கு முன்னால் மக்கள் எப்படி நிற்பார்கள் தெரியுமா? நட்டு வைக்கப்பட்ட கல்போல் அடிப்பல் அசையாமல் நிற்பார்கள்.

உட்கார வேண்டிய நிலை ஏற்பட்டால் பிரபுக்களின் கண்ணில் படாதபடி கூனிக்குறுகி அமர்ந்து கொள்வார்கள்.



**பேரறிஞர் அபுல் ஹசன் அலீ நத்வி**

பாரசீக மன்னரிடம் முஸ்லிம்களின் தூதராகச் சென்ற நபித்தோழர் ஒருவர் அம்மக்களின் செயல் கண்டு ஆச்சரியப்பட்டார். இதோர் அடாத செயல் என அவர்களுக்கு உணர்த்தினார்.

பாரசீகர்கள் வாழையடி வாழையாய் தம் தலைவர்களுக்கு தாழ்பணிந்து கிடந்து அவமானத்தையும் இழிவையும் சுமந்து முடங்கிக் கிடந்த காட்சியையும் விளக்கும் ஒரு வரலாற்றுச் சம்பவம் இதோ..!

முஸ்லீம்களின் சார்பில் பாரசீகப் படைத்தளபதி ருஸ்தும்-ஐ சந்திக்கப் புறப்பட்டார் மூகீரா பின் ஷுஉபா(ரழி).

இருபகுதிகளையும் இணைக்கும் பாலத்தைக் கடந்து பாரசீகர்களை நோக்கிச் சென்றார் அங்கிருந்த மக்களிடத்திலே "படைத்தளபதி ருஸ்தும்-ஐ நான் சந்திக்க வேண்டும்" என்றார் மூகீரா(ரழி)யவர்கள்.

முஸ்லிம்களின் தூதராக வந்துள்ள மூகீரா (ரழி) வைச் சந்திக்க ருஸ்தும் அனுமதியளிக்கிறார். அங்கே ஆடம்பரங்கள் வியாபித்துக்கிடத்தன. அரசனும் அமைச்சர் பெருமக்களும் வீற்றிருக்கும் அவையில் அடியெடுத்து வைத்தார்கள் மூகீரா பின் ஷுஉபா (ரழி).

இவர்களின் மேனியின் நிறம் கருப்பு. (நீக்ரோ இனத்தவர்கள் தம் தலை முடிகளைப் பின்னி சடை போட்டுக் கொள்வதுண்டு) மூகீராவின் தலையில் நான்கு சடைகள். ஒட்டுப் போடப்பட்ட முரட்டுக் கம்பளித் துணிதான் அவர்களின் மேனியை மறைத்திருந்தது. கையில் ஒரு வாள்.

இவ்வாறான எளிமையான கோலத்தில் மூகீரா (ரழி) நுழைந்த இடம் "என்னைப்பார் என் அழகைப்பார்" என்று நிலை கொண்டிருந்த பாரசீக சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி வீற்றிருந்த அரண்மனையில்.

அங்கே ஒய்யாரமாய் தங்க இழைகளால் பின்னப் பட்ட ஆடைகள், மணிமகுடங்கள் பட்டுப் பீதாம்பரங்கள் நவரத்தினக் கம்பளங்கள் பட்டு விரிப்புகள் என படோடாபத்தில் பவிசாய் அமர்ந்திருந்தனர்.

அரசன் எல்லோரையும் விட ஆடம்பரமாய் கொலுவீற்றிருந்தான். அவனருகே சென்றிட வேண்டும் மென்றால் மதிக் கொண்ணா கம்பளத்தில் மிதித்து நடந்து சென்றிட வேண்டும்.

அங்கே நிலவிய எழிலுக்கும் ஏற்றத்துக்கும் சற்றும் சம்பந்தமில்லாத எளிய கோலத்தில் உள்ளே நுழைந்த மூகீரா (ரழி) தன் கையில் வைத்திருந்த வாளை ஊன்றி நடந்தார். அரசனை நோக்கிச் சென்றார்.

அவரின் கருநிறத்துக் கால்கள் பளபளப்பான பட்டு விரிப்புக்களை மிதித்தன, அவரின் வாள் முனைபட்டு மதிக் கொண்ணா விரிப்புக்கள் கிழிந்தன எதையும் பற்றிக் கவலைப்படாமல் நேராக அரசனின் அருகே அமர்ந்து விட்டார்கள் மூகீரா (ரழி).

முஸ்லிம்களின் தூதர் மூகீரா (ரழி) அமர்வதற்கு ஒரு ஏற்பாடும் செய்யாமல் அவரை அடிமை போல் நிற்கவைத்தே பேசி அனுப்பி விடலாம் இதன்மூலம் மூகீரா (ரழி)-ஐ மட்டுமல்ல, மொத்த முஸ்லிம்களையும் அவமானப்படுத்தி விட்டதாக அகமகிழ்ந்து போகலாம் என்ற மமதையானதொரு மனக் கணக்கைப் போட்டுக் கொண்டிருந்தவர்கள் திடுக்கிட்டனர்.

அகலமாய், உயரமாய் அலங்கரிக் கப்பட்டதாய் மின்னிக் கொண்டிருந்த பாரசீக சாம்ராஜ்ய சக்கரவர்த்தியின் சிம்மாசனத்திலேயே போய் அமர்ந்து விட்டார் மூகீரா (ரழி).

மன்னனுக்கு அருகில் ஒரு சாமான்யர் அமர்ந்திருப்பதை கற்னையில் கூட எண்ணிப் பார்த்திருக்காத பாரசீகர்கள் அதிர்ந்தார்கள்.

மூகீரா (ரழி)-ஐ நோக்கிப் பாய்ந்தார்கள் அவரை தரதரவென இழுத்தார்கள். கீழே போட்டார்கள். அப்புறப்படுத்திட வீறு கொண்டெழுந்தார்கள் பாரசீகர்கள்.பரபரப்பான அந்தச் சூழலில் பாரசீகர்களை நோக்கிக் கர்ஜித்தார்கள் மூகீரா பின் ஷுஉபா (ரழி).

**மனித குலத்தையே இழிவுக்குள்ளாக்கும் இந்த இனப்பாகுபாட்டை தலைவர்களும் பிரபுக்களும் வீற்றிருக்கும் அவையில் அப்பட்டமாய்க் காணலாம்.**

"பாரசீகர்களே... உங்களைப்பற்றி நாங்கள் எப்படியெல்லாமோ நினைத்துக் கொண்டிருந்தோம். இப்பொழுது தெரிகிறது நீங்கள் எவ்வளவு பெரிய மூடர்கள் என்று".

"நாங்கள் யார் தெரியுமா? அரபுக்கள் (முஸ்லிம்கள்) எங்களில் யாருக்கும் யாரும் அடிமையில்லை. அனைவரும் சமம். போரில் எதிர்த்து நிற்பவர்களைத் தவிர வேறு எவரையும் நாங்கள் அடிமைப்படுத்துவதில்லை.

எங்களிடம் நிலை கொண்டிருக்கும் மனிதப் பண்புகள் உங்களிடமும் இருக்கும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் நீங்கள் உங்கள் இனத்தவர்களுக்கே அடிமைகளாக இருக்கின்றீர்கள் என்பதை உங்கள் செயல்களாலேயே நிரூபித்து விட்டீர்கள்".

"இந்த அதிகாரம் ஆட்சி உங்களிடம் நிரந்தரமாக இருக்கப் போவதில்லை. நீங்களே என்னை அழைத்தீர்கள் வந்தேன்".

"இன்று எனக்கு நன்றாகப் புரிந்து விட்டது. உங்களின் சமூகச் சூழல் சீர்குலைந்து கிடக்கிறது. நீங்கள் அடக்கி வைக்கப்பட்டிருக்கிறீர்கள். இப்படிப்பட்ட இழிவோடும் அறியாமையோடும் வாழும் சமுதாயத்தை எவன் ஆண்டாலும் நியாயமாக நடந்திட மாட்டான்".

**(நூல்: திப்ரீ. அறிவிப்பாளர்: அபூஉஸ்மான் அந் நஹ்தீ)**

## பாரசீகர்களின் இனவெறி:

"உலகில் வாழும் இதர இனங்களை விட பாரசீக இனமே மேன்மையும் மகத்துவமும் மிக்கது. தம் இனத்துக்கென சில தனித் திறமைகளையும் ஆற்றல்களையும் கடவுள் வழங்கியிருக்கிறார். பாரசீக இனம் ஒப்பாரும் மிக்காரும் இல்லா இனம்". என்று கருதி வந்த பாரசீகர்கள் இதர மக்களை இழிவாக நினைத்தார்கள்.

பரிகாசமும் இழிவும் கொண்ட பட்டப் பெயர்களை இதர இனங்களுக்குச் சூட்டினர். இனவெறியில் இப்படி இன்பம் கண்டனர் பாரசீகர்கள்.

## கடவுள் கொள்கை.

பண்டைய காலத்தில் பாரசீகர்கள் அல்லாஹ்வை வணங்கி அவனுக்கு சிரம் பணிந்தனர். பின்னர் அக்கால மனித சமுதாயத்தினரைப் போல சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் வான்வெளிகளையும் போற்றிடத் தலைப்பட்டனர்.

பின்னர் பாரசீக மதத்தின் நிறுவனர் 'சவ்ராஸ்டர்' வந்தார். அவர் சிலைகளை அழித்து ஏகத்துவக் கோட்பாட்டின்பால் மக்களை அழைத்தார் என்று கூறப்படுகிறது.

"ஏக இறைவனின் ஒளி உலகில் உள்ள எல்லாப் பொருள்கள் மீதும் பட்டுப் படர்ந்து பிரகாசிக்கிறது எனவே தொழுகையின் போது சூரியன் நெருப்பு ஏதேனுமொன்றை முன்னோக்க வேண்டும் ஏனெனில் இவற்றின் வெளிச்சம் இறைவனை நோக்கிய ஒரு குறியீடு" என்றார் 'ஸெளராஸ்டர்'.

இஃதன்றி நீர், நிலம், நெருப்பு, காற்று ஆகியவற்றை அசுத்தப்படுத்தக் கூடாது என்றும் அறிவுறுத்தினார்.

இவருக்குப் பின்னர் ஸெளராஸ்டர மதத்தைப் பின்பற்றும் மக்களை செம்மைப்படுத்தி வந்த அறிஞர்கள் பல்வேறு வழிமுறைகளை அறிமுகப்படுத்தினார்கள்.

நெருப்பு புனிதமானது என்பதால் நெருப்புடன் சம்பந்தப்பட்ட எந்தப் பொருளையும் பயன்படுத்தக் கூடாது என்று தடை போட்டார்கள். இதனால் விவசாயம் வியாபாரம் தவிர வெறெந்தத் தொழிலும் செய்ய இயலாத நிலைக்கு பாரசீகர்கள் ஆளாயினர்.

இறைவனை வணங்கும்போது நெருப்பை (கிப்லாவாக) முன்னோக்கியதும் நெருப்பைப் போற்றியதும் நெருப்பு வணக்கத்தை நோக்கி அம்மக்களை மெல்ல மெல்ல நகர்த்தியது.

இறைவனின் ஒளியின் குறியீடாய் விளங்கும் நெருப்பை முன்னோக்கி இறைவனை வணங்குவதாகக் கூறிக் கொண்டிருந்த பாரசீகர்கள் இறுதியில் நெருப்பையே வணங்கத் தொடங்கினார்கள். அதற்கென ஆலயங்களையும் கோவில்களையும் கட்டிக் கொண்டார்கள்.

இதனால் அம்மக்களிடம் பூர்விகமாக இருந்து வந்த ஓரிறைக் கோட்பாடு அதன் வழிபாடு எல்லாம் மறைந்து நெருப்பு வணக்கம் மட்டுமே மிஞ்சி நின்றது. பூர்விக வரலாறு மறைக்கப்பட்டுப் போனது. உண்மை எவருக்கும் தெரியாமல் மண்மூடிப் போனது.

(நூல் தாரீஹ் ஈரான்.
ஷாஹுசின் மார்க்யூஸ். பக்:221-224).

இவர்கள் வணங்கிய நெருப்பு இவர்கள் வாழ வேண்டிய வழிகளைச் சொல்லித் தரவில்லை. நல்வழிகாட்டும் தூதரையும் அது அனுப்பி வைக்கவில்லை. இவர்களின் வாழ்க்கையில் எழுந்திடும் பிரச்சனைகளுடன் எந்தச் சம்மந்தமும் இல்லாமல் ஒதுங்கியே நின்றது. பாரசீகர்களின் கடவுளான நெருப்பு.

சுட்டெரிக்கும் அந்த நெருப்பு குற்றவாளிகளையோ, பாவிகளையோ, தண்டிக்கவில்லை இதனால் ஸெளராஸ்டிர மதம் என்பது ஆலயங்கள் எனப்படும் குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட நேரங்களில் கொண்டாடப்படும் சடங்குகளாகவும் சம்பிரதாயங்களாகவும் சுருங்கிப்போனது.

அவர்கள் ஆலயங்களை விட்டு வெளியே வந்து விட்டால் தம் வீடுகளிலோ, நிறுவனங்களிலோ, அரசியலிலோ, சமூகத்தளத்திலே, எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று வாழ்ந்தனர்.

கண்டதே காட்சி. கொண்டதே கோலம். என்று மனம்போன போக்கில் கட்டறுந்த காளைகளாய்ப் போனார்கள். உலகவரலாற்றில் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு நிலப்பரப்புக்களில் இணைவைப்பவர்களின் வாழ்க்கை எப்படி தறிகெட்டுப்போனதோ அப்படிப் போய்விட்டது பாரசீகர்களின் வாழ்க்கையும்.

இப்படித்தான் பாரசீக சமூகம் தம்மைத் தாமே பலியிட்டுக் கொண்டது.

ஆன்மாவைச் செம்மைப் படுத்தி, குணங்களைச் சீராக்கி, அலைபாயும் இச்சைகளை அடக்கி, இறையச்சத்தைத் திரட்டிக் குவித்து, அறப்பணிகளை நோக்கி உந்தித்தள்ளி, இல்லறம் எனும் நல்லறத்தை நிலைநாட்டி, குடும்ப வாழ்வை ஒழுங்கு படுத்தி, சமுதாய வாழ்வுக்கான சட்டங்களைத் தந்து, அரசியல் நெறிகளை உவந்தளித்து, ஆட்சியாளர்களின் அராஜகப் போக்கிலிருந்தும் அதிகாரிகளின் அக்கிரமங்களிலிருந்தும் மக்களைக்காத்து அநியாயக்காரர்களின் கரம்பற்றி நிறுத்தி, ஒடுக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கிக் கொண்டிருந்த பொன்னான மார்க்கமாம் இறை மார்க்கத்தை இப்படித்தான் பாரசீகர்கள் இழந்தார்கள்.

இதனால் அவர்கள் மார்க்கம் எதையும் ஏற்காத மதமற்றவர்கள் போல் ஆகிவிட்டனர்.

"வாழ்க்கையே ஜாலி. வாழ்ந்து பார்ப்பது தான் ஜோலி" என்று நம்புபவர்கள் போல திக்கற்று திசையிழந்து போயினர் பாரசீகர்கள்.

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி.**

# தலித் அடையாளம்: டி.எம். மணியின் நூல்களை முன்வைத்து.

ஸ்டாலின் ராஜாங்கம்

சில நாட்களுக்கு முன் நடந்த தலித் தொடர்பான கூட்டமொன்றில் நண்பர் ஒருவரோடு பேசிக் கொண்டிருந்தபோது "இக்கூட்டத்தில் வழங்கப்படும் சாப்பாட்டில் மாட்டுக்கறியெல்லாம் இல்லையே ! அதுவும் தலித் கூட்டத்தில் மாட்டுக்கறி இல்லாமல் சாப்பாடா?" என்றார். வேறொரு தருணத்தில் எழுத்திலும், பேச்சிலும் கொச்சையான சொற்களை கையாளும் எழுத்தாளர் ஒருவரைப் பற்றி பேசிக் கொண்டிருந்தபோது "அந்த எழுத்தாளர் தலித் அதனால் அவர் அப்படி பேசுவதுதானே சரியாக இருக்க முடியும்" என்றார்.

மாட்டுக்கறியும், கொச்சையாக பேசுவதும் தலித்துகளின் அடையாளம் என்பது இதன் பொருள். தலித் பிரச்சனையில் கரிசனம் காட்ட விரும்பும் இடது சாரிகள் குறித்து ஒரேவிதமான கருத்தினையே வெளிப்படுத்துகின்றனர். குடி, அழுக்கு போன்றவற்றையும் தலித்துகளின் அடையாளமாக பேசமுனைந்த அறிவுஜீவிகளும் இங்கிருந்தனர்.

ஆனால் இது குறித்து தலித் மக்கள் நினைப்பது என்ன? இவை தலித் அடையாளங்கள் தானா? என்பதே இக்கட்டுரை எழுப்ப விரும்பும் வினா. ஒருவகையில் சொல்லப்படும் இந்த அடையாளங்கள் யதார்த்தத்தில் நிலவுவைதான். சாதிரீதியாக தொழிலும், இருப்பிடமும், வாழ்முறையும் பாகுபடுத்தப்பட்டு திணிக்கப்பட்டுள்ளது. தலித்துகளுக்கென்று ஒதுக்கப்பட்ட அடையாளத்திலிருந்து மாறுபடுவது

சாதி மீறலாகும். அதை சாதிசமூகம் அனுமதிப்பதில்லை. விரும்பும் தொழிலை, உணர்வை, வாழ்முறையை தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான சுதந்திரத்தை சாத்தியப்படுத்துவதே சாதிய மறுப்பாக இருக்க முடியும்.

எனில் தலித்துகளிடம் நிலவும் இன்றைய அடையாளங்களை அவர்களுக்கேயுரியது என்று சொல்வது சாதி மறுப்பாகுமா? மாட்டுக்கறியோ, பறையடிப்பதோ அவர்களின் விருப்பமாக இருக்குமானால் அது பிரச்சினையில்லை. ஆனால் அதை அவர்களின் அடையாளம் என்று சொல்வதன் மூலம் இச்சமூகத்தின் பிற தளங்களில் அவர்களின் பங்களிப்பு மறுக்கப்படுகிறது. பொதுத்தளத்தின் மீதான அவர்களின் உரிமை மறுக்கப்படுகிறது. உண்மையில் தலித் மக்கள் அவர்களின் இன்றைய அடையாளங் களிலிருந்து விடுபட்டு சுயமரியாதை மிக்க வாழ்வை அடைய விரும்புகின்றனர். ஆனால் அத்தகைய புரிதலை உள்வாங்கி செயற்படும்



அமைப்புகளாக களமும், அரசியல் தளமும் இல்லையென்பது வருத்தமே.

இப்புரிதலை நம் சூழலில் பெறாமல் போனதன் காரணம் என்ன? தலித் மக்களின் விருப்பங்களிலிருந்தும், கடந்த கால இயக்கங்களின் தொடர்ச்சியிலிருந்தும் தலித் அடையாளத்தை யாரும் உருவாக்கிக் கொள்ளவில்லை.

கடந்த கால தலித் அமைப்புகளும், தலைவர்களும் பெரும் திரட்சியை சாத்தியப்படுத்தாவிட்டாலுங்கூட இத்தகைய புரிதலிலிருந்து செயற்பட்டனர். சாதியும், சாதிசார்ந்த கீழான அடையாளங்களும் தலித் மக்கள் மீது சுமத்தப்பட்டதன் தொடர்ச்சியாகவே அவர்களுக்கு உணவு, தொழில் இருப்பிடம் போன்றவை ஒதுக்கப்பட்டன. எனவே திணிக்கப்பட்ட தொழிலை, உணவை, மறுப்பதும். மறுக்கப்பட்ட அடையாளங்களை தங்களுக்குரியதாக பேசி மீட்டெடுத்தும் செயற்பட்டனர். அத்தகைய முன்னோடி முயற்சிகள் அறியப்படாமல் போனதின் அடிப்படையான பின்னணி எதுவெனில் தலித் மக்களின் போராட்டம்.

இயக்க வரலாறு போன்றவற்றை யாரும் அறிய மறுத்ததே ஆகும். ஒவ்வொரு இயக்கமும் தங்களின் வருகைக்குப் பின்னர்தான் இம்மக்கள்

கண்விழித்தனர். அதுகாறும் அடிமை நிலையிலேயே இருந்ததாக கருதுவதும் இதனால்தான் ஆனால் இத்தகைய எண்ணங்களை மறுக்கும் பதிவுகள் இப்போது எழுத்துகளாக வந்துக் கொண்டிருக்கின்றன. அத்தகைய பதிவுகள் குறித்து நிலவும் மௌனத்தை கடக்க இக்கட்டுரை முயற்சிக்கிறது.

தலித் எழுத்து, வரலாறு, பண்பாடு என்று நிலவி வரும் கருத்துக்களிலிருந்து முற்றிலும் விலகிய தலித் எழுத்தை அண்மையில் வாசிக்க முடிந்தது. டி.எம். உமர் ஃபாரூக் என்றழைக்கப்படும் டி.எம். மணி என்ற தலித் தலைவர் எழுதிய நூல்களே அவை. 1960கள் இறுதி தொடங்கி தஞ்சை மாவட்டத்தின் கும்பகோணம், திருப்பனந்தாள் வட்டாரங்களில் இயற்றப்பட்ட நீலப்புலிகள் இயக்கத்தின் தலைவர் அவர். அமைப்பாக நின்று இப்பகுதி கிராமங்களில் இயங்கியபோது எற்பட்ட அனுபவங்களையும், அதன் வாயிலாக பெற்றுக் கொண்ட கருத்தியல்களையும் 'சாதி ஒழிந்தது' 'செந்தமிழ் நாட்டு சேரிகள்' என்னும் இரண்டு நூல்களாக எழுதியுள்ளார்.

சாதாரண நடைமுறையாகி விட்ட தலித்துகளின் இழிவாழ்வு. அதற்கு எதிரான தொடர் போராட்டங்கள், சளைக்காத அர்ப்பணிப்பு என்று இயங்கியதால் தலித் மக்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களைச் சொல்வது இந்நூல்கள் 30 ஆண்டுகால ஆவணமாய் மாறிநிற்கின்றன. தலித்துகள் குறித்த பழமையான சித்தரிப்புகளோடு முரண்படாத எழுத்துக்களே 'தலித்வாழ்வாக' மாறிவிட்ட சூழலில் இந்நூல்கள் வாசகர்களுக்கு வேறொரு உலகை காட்டுகின்றன. இவ்வாறு காட்டப்படும் இப்பதிவுகளே எதார்த்தமானவை. தான் இழிவு படுத்தப்பட்டதை இப்பதிவுகள் மறைக்கிறது. என்பது இதன் பொருளல்ல, 'எதார்த்தமாகி விட்ட இழிவுகளுக்கு எதிரான போராட்டங்களையும் அதில் பெற்ற வெற்றிகளையும் இவை சொல்கின்றன என்பதே தனித்துவத்திற்கு காரணமாகின்றன'

இழிவுகளை மறுத்து, மறுக்கப்பட்ட கல்வி உள்ளிட்ட தன்மான வாழ்வுக்கான அம்சங்களைப் பெற முயற்சிக்கிற அப்போராட்டங்கள் சாதி இழிவுகளை சுயமானதாக கருதுவதில்லை இவ்விடத்தில் சாதி தங்கள் மீது திணிக்கப்பட்டவை தானே ஒழிய 'விரும்பி' ஏற்றக் கொண்டவை அல்ல

**சாதி தங்கள் மீது திணிக்கப்பட்டவை தானே ஒழிய 'விரும்பி' ஏற்றக் கொண்டவை அல்ல என்னும் புதிய உள்ளடக்கத்தினையும் அவர்கள் உருவாக்குகின்றனர்.**

என்னும் புதிய உள்ளடக்கத் தினையும் அவர்கள் உருவாக்குகின்றனர். அதனால்தான் இழிவை சுமத்துவதைக் காட்டிலும், அதற்கு எதிரான போராட்டத்தில் கடுமையாக நடந்து கொள்கின்றனர் ஆதிக்க வகுப்பினர். ஆனால் பெறவிருக்கும் விடுதலையுணர்வுகளுக்கு முன்னால் போராட்டத்தின் வலி தலித்துகளுக்கு லேசாகிப்போகின்றன. தலித் விடுதலைக் கருத்தியலுக்கு இத்தகைய புரிதலை இந்நூல்கள் தருகின்றன.

சுய அனுதாபத்தை வேண்டாமல் எழுதப்பட்ட தலித் எழுத்துக்கள் மிகக் குறைவே, தலித்துகள், தவிர்த்தமற்ற எழுத்தாளர்கள் யாரும் தங்கள் முன்னோர்களும். வகுப்பினரும் நடத்திய சாதிநடைமுறைகளைக் குறித்து வெளிப்படையாக எழுதவே இல்லை. ஆனால் உலகத்தின் எந்த பாகுபாடுகளுக்கும் குறையாத சாதிப்பாகுபாடு இங்குதான் நிலவுகிறது. இக்குறைகளைத் தவிர்த்த தலித் அனுபவத்தை தரக்கூடிய நூல்களாக இவை மாறியிருக்கின்றன. எழுதுவது இந்நூலாசிரியரின் முன்கூட்டிய திட்டமோ, முழுநேர வேலையோ, அல்ல, நான் இலக்கியவாதியோ எழுத்தாளனோ இல்லை என்று அறிவிக்கும் அவரின் அசாதாரண எழுத்து நடை இது.

அடர்ந்த காடு, இருண்ட சூழ்நிலை, உடைந்த மனம், பதுங்கி முடங்கிக் கிடக்கிற அற்பமான வாழ்க்கை ஏன் இந்த அவலம்? எதை வாரிக்கட்டிக் கொள்ள இப்படி அவதிப்படுகிறோம்? சொத்துசுகம் சேர்த்துக் கொள்ளவோ? இந்துக்களின் நிலபுலத்தில் மாடி மனையில் பங்கு கேட்கவோ? இல்லையே! நாங்களும் மனிதர்கள் தானே.. என்று விரிகிறது அந்த எட்டாம் வகுப்பு மட்டுமே படித்தவரின் எழுத்து.

முதல் நூலின் தொடர்ச்சிதான் இரண்டாம் நூல் அமைப்பு கட்டி போராட்டம் நடத்திய ஊரின் பெயர் சாதிப் பிரச்சினைக்கு எதிராக பேராடியவரின் பெயர் போன்றவற்றை தலைப்புகளாகக் கொண்டு சாதி ஒழிந்தது நூலில் கட்டுரைகளையும், செந்தமிழ் நாட்டு சேரிகள் நூலில் கட்டுரைகளையும் கொண்டுள்ளார். சில கட்டுரைகளை மட்டும் சமூகம் தொடர்பான தம் கருத்துக்களையும், விமர்சனங்களையும் எழுத பயன்படுத்தியிருக்கிறார். இவ்வாறு விவரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நிகழ்விற்குள்ளும் டி.எம். மணி இருக்கிறார் நேரடி அனுபவத்திலிருந்து குறிப்பிடத்தக்க சம்பவங்களை மட்டும் தொகுத்து எழுதியுள்ளார்.

கும்பகோணம், திருப்பனந்தாள் வட்டாரம் காவிரிப்பாயும் நிலப் பரப்பு யாவும் கோவில்களுக்கும், மடங்களுக்கும் உரிமை. இந்நிலங்களில் உழைக்கும் பண்ணையடிமைகளாய் தலித்துகள் இருந்தனர். "உயர்ந்த மதில் சுவர்களுடைய மடம் ஒருபுறம்,. சிவன் கோவில் மறுபுறம்... ஒவ்வொரு சிவன் கோவிலுக்கும் ஒரு

தலவரலாறு இருக்கும். இப்படி ஒவ்வொரு சேரிக்கும் ஒரு தல வரலாறு போல. இது கட்டுக் கதையல்ல, காலங்காலமாக சாட்சியங்களாய் இன்னும் சேரிகளில் உயிரோடு இருக்கிறார்கள்." என்பதை சொல்லும் டி.எம். மணி அவ்வாறான 'தலவரலாறு' ஒன்றையும் சொல்கிறார். திருலோகி என்னும் கிராமத்தின் சேரிப்பெண் ஆயிபொன்னு என்பவர் வழக்கமாக செல்லும் மணியக்காரர் பண்ணை சாணியள்ளும் வேலைக்கு 3 நாட்களாக செல்லவில்லை. காரணம் அவருக்கு பிரசவம் ஆகியிருந்தது. இருந்தும் மூன்றாம் நாளே பண்ணை வேலைக்குத் திரும்பினார், கோபத்தோடு அவளை திட்டித்தீர்த்த மணியக்காரர் அவளின் மேலாக்கை பிடித்துக் கொண்டு மூங்கில் கழியால் அடித்தார். பண்ணையாரின் 'மண்ணான' சேரியிலிருக்கும் அவரின் குடிசையில்யாரும் நுழையாதவாறு வேலியும் வைத்தார்.

ஆயிப்பொன்னுவின் கணவரையும் பண்ணைக்கு வரும்படி சொல்லி அனுப்பினார். கணவனுக்கு நேரவிருக்கும் கதி, தனக்கு ஏற்பட்ட அவமானம் இரண்டும் சேர்ந்து இரண்டு வயதான தன் மூத்த மகன் மணிக்குஞ்சுவை பிறந்த குழந்தைக்கு காவல் வைத்துவிட்டு கூரையிலேயே தூக்குமாட்டி செத்தார் ஆயிபொன்னு. இவைதவிர படி நிலை சாதியமைப்பில் மேலேயுள்ள எல்லா சாதிகளுக்கும் இழிவு வேலை செய்யவேண்டிய நிலை டி.எம்.மணி விவரிப்பதைப் போல "இந்து வீட்டில் ஒருவர் இறந்து விட்டால். முன்னதாகச் சென்று வெட்டியான் சுடுகாட்டில் காத்திருக்க வேண்டும்.

பிணம் வருவதற்குள் சுடுகாட்டை சுத்தம் செய்து எரிபொருள் சேகரித்து விறகுக் கட்டைகளை அடியில்வைத்து அதன்மேலே விராட்டிகளை அடுக்கி அஸ்திவாரமிட்டு வைத்திருக்க வேண்டும். பிணம் சுடு காட்டிற்கு வரும்போது கட்டாயம் தயார்நிலையில் இருக்க வேண்டும். அடுத்து வண்ணான் செத்தவர் வீட்டிற்குச் சென்று மூங்கில் வெட்டிவந்து பாடைசெய்யும் பணியைச் செய்யவேண்டும். பிணம் தூக்கிச் செல்லும்போது. நோக்கர் கொம்பு ஊதியும், சேங்கண்டி அடித்தும் செல்லவேண்டும். பிணம் இறக்கும்போது வெட்டியான் விலகிக் கொள்ள வேண்டும். அவன் தீண்டாத சாதி அல்லவா? வண்ணானும் அம்பட்டரும் பாடையிலருந்து பிணத்தை எடுக்க வசதி செய்து கொடுக்க வேண்டும். இதற்குள் நாவிதர் கத்தியை எடுத்துக் கொண்டு கொள்ளிவைப்பவர் முடியைச் சிரைப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

இதில் யாராவது ஒருவர் கடமை தவறினால் அந்தக் கிராமத்தில் சிக்கல் ஏற்பட்டுவிடும். கடமை தவறிய வருக்கு எந்த மாதிரியான தண்டனை என்பது ஊரைப் பொறுத்து. சூழ்நிலையைப் பொறுத்தது" இவை கிராமங்களின் நிலை. இழிதொழில்களுக்கு எதிரான தலித்துகளின் போராட்டம் எந்தக் கிராமத்திலும் எளிதில் நடந்தேறிவிடவில்லை. பெரும் கலவரங்களை ஏற்றபடியே போராட்டங்கள் நடந்தன கலவரத்தோடு பிரச்சினை நிற்பதில்லை. ஏற்கனவே

**பிணம் வருவதற்குள்**
**சுடுகாட்டை சுத்தம் செய்து**
**எரிபொருள் சேகரித்து**
**விறகுக் கட்டைகளை**
**அடியில்வைத்து**
**அதன்மேலே விராட்டிகளை அடுக்கி**
**அஸ்திவாரமிட்டு**
**வைத்திருக்க வேண்டும்.**

சொந்தமாக நிலமற்ற இம்மக்களுக்கு வேலை மறுப்பு, தானாகவே எரிவதைப் போல கொளுத்தப்படும் குடிசைகள், தாக்குதல், வழக்கு அலைக் கழிப்பு என்பவைகளாக நீடித்தன. இப்படியே முப்பதுக்கும் மேற்பட்ட கிராமங்கள்.

இப்பகுதி அரசியல் கட்சிகளென்றால் தி.மு.க, அ.தி.மு.க, காங்கிரஸ், கம்யூனிஸ்ட், போன்றவை இருந்தன. கீழ்த்தஞ்சை மாவட்டம்போல கம்யூனிஸ்ட் கட்சி இப்பகுதியில் பரவலாகியிருக்கவில்லை. நக்சல்பாரி பாதையை ஆதரிக்கும் இடது சாரிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் தலித்துகளிடம் தென்பட்டனர். பொதுவாக சுடு காட்டுப்பாதை போன்ற சிவில் உரிமைகளை வலியுறுத்தும் கம்யூனிஸ்ட்கள் சுடுகாட்டில் பிணம் புதைப்பதும் யார் என்பன போன்ற அழுத்தமான பார்வையை இன்று வரையிலும் பெறவில்லை.

சாத்திர இழிவு ஒழிப்புக்காக பாடுபட்ட திராவிடர் கழகம் அச்சாத்திரர்களால் தலித்துகள் மீது சுமத்தப்படும் இழிவுகளைக் கண்டித்து போராடிய வரலாற்றைப் பெறவில்லை. இந்நிலையில் இழிவு ஒழிப்பு போராட்டங்களை தலித்துகளே தனியாகவும் அமைப்பாகவும் நடத்தவேண்டிய நிலை. அப்படித் தான் தனித்துப் போராடியது நீலப்புலிகள் இயக்கம். இவ்வட்டாரத்தை ஒட்டி தென்னார்க்காடு அமைந்திருந்தமை சாதகமான அம்சமாய் இருந்தது. அப்பகுதியில் இவ்வாறான போராட்டங்களை முன்னெடுத்து வெற்றிப் பெற்றிருத்தார் எல். இளையபெருமாள்.

நீலப்புலிகளின் போராட்டத்திற்கு கைக்கொடுப்பவராக, காங்கிரஸில் இருந்த தலித்தலைவராக இவர் இருந்தார் இந்த இரண்டு நூல்களிலும் பல்வேறு கட்சிகளை, தலைவர்களை விமர்சித்து எழுதிச் செல்லும் டி.எம்.மணி மதிப்போடு 'தலைவர்'என்று விளிக்கிறார் என்றால் அவர் எல். இளையபெருமாள்தான் இதேபோல் வடஆர்காடு பகுதியிலும் இழிவு ஒழிப்புப் போராட்டங்களை குடியரசுக்கட்சி நடத்தியது தமிழகத்தின் பிறபகுதிகளைக் காட்டிலும் தலித்துகள் சற்றுமுன் கூட்டியே 'மேம்பாடு' பெற்றதற்கு இத்தகைய

அரசியல் விழிப்புணர்ச்சியும் ஒரு காரணம் இப்பகுதியில் கிராமங்கள்தோறும் இவ்வகையான போராட்டங்களை தொகுக்கும்போது தலித் போராட்டத்தின் வலிமை உணரப்படும் கிராமங்களில் பெரும்பான்மை ஆதிக்கசாதியினருக்கு எதிராக நடத்தப்படும் சாதி மறுப்பு போராட்டங்கள் சாதாரணமானவை அல்ல. இவ்வாறான போராட்டங்களை தலித்சார்ந்து எழுதுவோரும்கூட அறியவில்லை. இப்போராட்ட வரலாற்றை ஏற்காமல் தலித் அடையாளத்தை "செஞ்" சோற்று கடனுக்காய் கம்யூனிஸ்டுகளிடம் விற்றுக் கொண்டிருக்கும் ஒருவர் கிராமங்களில் தலித் இயக்கங்களில் போராடிய துண்டா? என்று அண்மையில் எழுதியிருக்கிறார். போராட்ட வரலாற்றை பதிவுசெய்ய வாய்ப் பில்லாமல் போனதற்கு தலித்துகள் மட்டுந்தான் பொறுப்பா?

இழிவு ஒழிப்பு போராட்டங்களாகவே இப்போராட்டங்கள் நின்று போய் விடவில்லை. கிராமங்கள்தோறும் "கல்விப்பணிகள் நடந்து கொண்டிருந்தன ஊக்கத் தொகை, உதவித் தொகை, உயர்கல்வி நிதி, பகுதி நேரக்கல்வி, இப்படி ஏராளமான பட்டதாரி இளைஞர்கள் தொண்டாற்றிச் கொண்டிருந்தனர். சட்டப் பூர்வமாகவும். சாதுர்யமாகவும் சாதிக் கொடுமைக்கு எதிராகப் போராடி வந்தார்கள் இவ்வகை மாற்றங்கள் இழிவுமறுப்பு போராட்டங்கள் நடந்த மற்ற பகதிகளிலும் நடைபெற்றன. வடஆர்காட்டுப் பகுதியில் தொடங்கி நடத்தப்பட்ட இரவுப்பள்ளிகள் ஏராளம். தொடக்கம் முதலே தலித் தலைவர்கள் கல்வி மேம்பாட்டுக்காகப் பாடுபட்டனர்.

இத்தகைய செயற்பாடுகள் சாதிகுறித்த தனித்துவமான கருத்தியல்களை உருவாக்கிவிட்டன. அதாவது சாதி இழிவோடு இருந்தாலும் அந்த இழிவுதான் நம்முடைய காலகாலமான அடையாளம் என்ற பார்வை அவர்களிடம் இல்லை. அவ்வாறு கருதும்போதுதான் அதிலிருந்து விடுபடுவதற்கான நியாயம் உருவாகிறது. சாதியற்ற தளத்தில் இவர்களின் இடம் என்ன? எனும் கேள்வியும் எழுகிறது. அப்போது தான் சாதிக்கென்று பகுக்கப்பட்ட தொழில் உள்ளிட்ட அடையாளங்களை மறுத்துவிட்டு, மறுக்கப்பட்ட கல்விமேம்பாடு போன்ற சுயமரியாதைமிக்க அடையாளங்களை கையெடுக்கின்றனர். இம்மாற்றத்தின் கருத்தியல் வகிபாகம் என்ன? சாதிசார்ந்த அடையாளங்களை ஏற்பதை மறுத்து விரும்பும் தொழிலையும், அடையாளத்தையும் ஏற்பதே சாதிமறுப்பு என்பதாகிறது. தலித் தலைவர்களின் போராட்டம் இத்திசை நோக்கி இயங்கியிருக்கிறது.

**சாதிசார்ந்த அடையாளங்களை ஏற்பதை மறுத்து விரும்பும் தொழிலையும், அடையாளத்தையும் ஏற்பதே சாதிமறுப்பு என்பதாகிறது.**

பண்ணையின் விசுவாசியாக இருந்து பட்டினிகிடந்தே மடிந்த தாத்தா, அடிமைப்பட இன்னொரு பண்ணையைத்தேடி கிடைக்காமல் ஊர் ஊராய் கூலி வேலைக்கு அலைந்த தாய் தந்தை, ஆறாவது தலைமுறையாக அடிமை முறை வந்தபோது நீதிக்கட்சிக்கு ஓட்டுப் போடவில்லையென பண்ணையார் மாணிக்கம் பிள்ளையால் பறிக்கப்பட்ட வேலை என்ற குடும்பப் பின்னணியைக் கொண்ட டி.எம்.மணி யின் அப்பா ஒருமுறை ஈரத்துண்டை உலர்த்துவதற்காக தோளில் போடப்பட்ட போது மணியக்காரரை விட அவர் எத்துணை சிறந்த அறிவாளி. "அப்பா எவ்வளவு நாகரீகமானவர், அந்தக் காலத்திலேயே இலக்கணம் (நிகண்டு) படித்தவர். ராமாயணம், மகாபாரதம், அரப்பலிசதகம், குமரேச சதகம், சீவகசிந்தாமணி போன்ற நூல்களிலுள்ள பாடல்களை யெல்லாம் மனப் பாடமாகவேபாடுவார்" இதையெல்லாம் எந்த சூழ்நிலையில் அவர் படித்தார்.

இந்துக்களின் தெருவிலுள்ள பள்ளியில் நுழைய தீண்டாமை தடுத்ததால் வெளியே அரசமர நிழலில் அமர்ந்து படித்தவர். அந்தக் காலத்தில் முக்கியப் படிப்பான நிகண்டுகளைப் படிப்பதில் அவர் தேர்ந்தவர் தலித்துகளின் இழிவை மட்டும் சொல்ல விரும்பினோமென்றால் இத்தகைய ஆற்றல்களை யார் சொல்வது? தலித்துகளின் நிலவும் இழிவையே நிரந்தர அடையாளமாக தக்கவைப்பதில்தான் இன்றைய தலித் கலை, இலக்கிய முயற்சிகள் நிற்கின்றன. இந்நிலையை மாற்றும் கல்வி, பொருளாதாரம் குறித்த எவ்வித பார்வையும் செல்வாக்குப் பெற்றுள்ள தலித் இயக்கங்களுக்கு இல்லை. இந்நிலைமை சாதிமறுப்பதாக மாறுவதில்லை. இதை சார்ந்து டி.எம். மணி இந்நூல்களில் எழுதியுள்ள விமர்சனங்கள் முக்கியமானவையாகும் அவை "பறை எனப்படும் தப்பு ஒரு ஓசைக் கருவிதான் சேரியை ஒதுக்கினார்கள், அதற்காக தொழிலை ஒதுக்கினார்கள், தீண்டாமை பாராட்டி மனிதர்களை ஒதுக்கினார்கள். (அதன்படியே அவர்களுக்கென்று) இசையும் கலையும் ஒதுக்கப்படுகிறது.

நண்பர் கே.ஏ. குணசேகரன் போன்ற அறிவுஜீவிகளுக்கு நன்றாக தப்பு அடிக்கத்தொரியும் என்பதற்காக அதையே இசையாகத் தலையில் கட்டுகிறார்கள். அதைப் போலவே கல்வி மறுக்கப்பட்டதால் தலித்துகளிடம் உருவான ஊனத்தமிழ் வார்த்தைகளை நன்றாகப் புரிந்துக் கொண்ட 'பாமா' போன்ற எழுத்தாளர்கள், இந்த ஊனத் தமிழுக்கு வடிவம் கொடுத்து தலித் இலக்கியம் என்று அதை எங்கள் தலையில் கட்டுகிறார்கள்" என்று எழுதுகிறார்.

சாதி கற்பிக்கப்பட்ட காலத்தில சாதிக்கென்று ஒதுக்கப்பட்ட தொழில்களை மறுப்பதற்கு பதிலாக அதையே தங்களின் அடையாளமாக சொல்லிக் கொள்ளும்போது சாதிசார்ந்த கருத்தியல் மறுஉற்பத்தி

செய்யப்படுகிறது. பொதுத்தளத்தில் மறுக்கப்பட்ட அடையாளங்கள் மீது உரிமையை கோருவதற்கான அரசியலையும் மறுக்கிறது. பறை மட்டுமல்ல சாதியின் பெயரால் பகுக்கப்பட்ட தொழிலையும், ஒடுக்கப்பட்டவர்களுக்கு மறுக்கப்பட்ட அடையாளத்தையும் அனைத்து சாதியினருக்கும் தேர்வுசெய்துகொள்வதற்கான கோரிக்கையோடு செயற்படுவதே சாதிமறுப்பாக இருக்க முடியும். செத்த மாடெடுத்தல் என்ற சுகாதாரப்பணி தலித்துகள் மீது சுமத்தப் பட்டதால் அத்தோலினால் செய்யப்பட்ட பறையும் அவர்கள் மீது சமத்தப்பட்டது.

மலமெடுக்க மறுக்கும் அருந்ததியரின் குலத் தொழில் மலமெடுப்பதுதான் என்பது எத்துணை அவதூறு. "தப்புதான் தலித்கலை என்றால் குழல், யாழ் போன்றவை எமக்கு உரிமையில்லை? அகராதியில் அழிக்கப்பட்ட தமிழ்ச் சொற்கள் கூட இன்னும் தாய்வழி கூட்டத்திற்கு ஊனத்தமிழ்தான் உரிமையா? தலித் இலக்கியம், தலித் கலை, தலித் பண்பாடு என்பதெல்லாம் ஒதுங்குதல், ஒதுக்குதல் அடிப்படையிலான வர்ணதர்ம கோட்பாடே அம்பேத்கர் சொன்ன சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் இங்கு வேலையே இல்லை. எனவே தப்பு அடிக்க மறுப்பதை சமத்துவத்திற்குகான போராட்ட அடித்தளமாகவே பார்த்தோம். தப்புகளை செய்ய செத்த மாடுகள் எங்களுக்குத் தேவையில்லை என்று கோஷமிட்டோம்" என்று அவர் விளக்குகிறார். அவரின் இந்தப் பார்வை தலித்துகளின் நீண்ட போராட்ட மரபிலிருந்தும் தலித் மக்களின் விருப்பங்களிலிருந்தும் எடுக்கப்பட்டமையால் தான் தத்துவமானதாக விளங்குகிறது.

இந்நூல்களில் விவரிக்கப்பட்டுள்ள மற்றுமொருச் செய்தியும் தமிழக அரசியல் வரலாற்றில் முக்கியமானதாகிறது. குடிதாங்கி பிரச்சினைதான் அது. குடிதாங்கி கிராம தலித் மக்களின் நீண்ட நாள் கோரிக்கை 'கொள்ளிடக்கரையில்' சுடுகாட்டுக்கு இடம் ஒதுக்கித்தர வேண்டும் என்பதுதான். டி.எம். மணி தலைமையிலான இயக்கம் கிளை அமைக்க சென்ற போது அக்கோரிக்கையை வலியுறுத்திய போராட்டத்தைத் தான் முதலில் எடுத்தனர்.

உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் என்று தொடங்கி மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல்துறை போன்றோரிடமும் பிரச்சினையை கொண்டு சென்றனர். 1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23இல் செல்வம் என்பவர் இறந்து தூக்கிச் சென்றபோது நூற்றுக் கணக்கான வன்னியர்களால் தலித்துகள் மறிக்கப்பட்டனர். அதுநாள்வரையில் மறிக்காதவர்கள் மறிப்பவர்களாக மாறியிருந்ததற்கு காரணம் அவர்களிடம் வன்னியர் சங்கம் உருவாகியிருந்ததுதான். பிரச்சினையின் காரணமாக பிண அடக்கத்தை மறுநாளுக்கு ஒத்திவைக்கச் சொன்ன காவல் துறையின் அறிவுரையின் பேரில் அவ்விடத்திலேயே பிணத்தை வைத்துச் சென்றனர் மறுநாள் பிணத்தை காவல்துறையே எங்கோ வீசிவிடுகின்றனர். அதனையொட்டி தலித்துகளுக்கும்

**9 சேரிகளில் புகுந்த காவல்துறை அவர்களை அடித்து நொறுக்கியது. குடிதாங்கியைச் சேர்ந்த 22 தலித் பெண்கள் உள்ளிட்ட 104 பேர் மீது கொலைமுயற்சி வழக்கு (307) உள்பட பல்வேறு பிரிவுகளில் வழக்கை பதிந்தனர்**

காவல்துறையினருக்கும் நடந்த மோதலில் காவல் ஆய்வாளர் ஒருவர் கடுமையாக தாக்கப்பட்டார். மறுநாள் அங்கிருந்த 9 சேரிகளில் புகுந்த காவல்துறை அவர்களை அடித்து நொறுக்கியது.

குடிதாங்கியைச் சேர்ந்த 22 தலித் பெண்கள் உள்ளிட்ட 104 பேர் மீது கொலைமுயற்சி வழக்கு (307) உள்பட பல்வேறு பிரிவுகளில் வழக்கை பதிந்தனர். இதனால் இடர்பாடுகளுக்கு பின்னும் அம்மக்களின் பிணங்களை பழைய சுடுகாட்டில் புதைப்பதில்லை. பொதுச் சாலையில்தான் எடுத்துச் செல்வோம் என்ற முடிவிலிருந்தும் மாறவில்லை. அதனால் வீதிகளிலும் வாய்க்காலிலும் பிணங்களை புதைக்கவேண்டிய நிலை. இந்த காலக்கட்டத்திலும் பல்வேறு வழக்குகளை அம்மக்கள் சுமந்தனர்.

சுமார் 4 ஆண்டுகாலம் இப்போராட்டம் நீடித்தது. இவை எல்லாவற்றின் பின்னணியில்தான் அப்பிரச்சினை முடிவுக்கு வந்தது. அன்றைக்கிருந்த அதிமுக அரசு சுடுகாட்டுப் பயன்பாட்டுக்காக பொதுப்பாதையை அனுமதித்த சூழல், 82 வன்னியவகுப்பினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நிலை. அச்சூழலில்தான் ராமதாஸின் வருகை நிகழ்ந்தது. அப்பகுதி சேரிமக்கள் அவரின் வருகையை விரும்பாத போதும் அவரை சுடுகாட்டுக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றவர்களும் தலித்துகளே, ஆனால் இன்றைக்கு குடிதாங்கிப் போராட்டம் என்றாலே அறியக் கூடியவராக ராமதாஸின் பெயராகிவிட்டது.

நான்கு ஆண்டுகால தலித்துகளின் நெடிய போராட்டத்திற்கு கிடைக்காத அங்கீகாரம் தலித் அல்லாத ஒருவரின் சிறிய தலையீட்டிற்கு பெரிய அளவில் கிடைத்து விடுகிறது. தமிழகத்தில் இதுபோன்று சொல்லப்படாத போராட்ட உண்மைகள் ஏராளமுண்டு அண்மைக்கால உதாரணம். கடைசி இரண்டு வருடங்களில் தலையிட்ட கம்யூனிஸ்டுகளின் போராட்டமாகிவிட்ட பாப்பாப்பட்டி பிரச்சனை.

குடிதாங்கிப் பிரச்சினை குறித்து கள ஆய்வு செய்து வெளியிட்ட நிறப்பிரிகை இதழும் இந்த வரலாற்றுப் பொய்க்கு காரணம் என்று டி.எம். மணி

கூறுகிறார். ராமதாஸின் வருகையை தூக்கிப் பிடிப்பதிலேயே கவனம் செலுத்திய அவ்விதழின் கள ஆய்வு விழிப்புணர்வும், போர்க்குணமும் உடைய தலித் அமைப்புகளே அங்கில்லை யென எழுதியிருந்ததை சுட்டிக் காட்டுகிறார். பிறகு திருமாவளவனும் ராமதாஸை தமிழ்க்குடிதாங்கி என்று பாராட்டினார். பிராமணரல்லாதோர். தமிழர் போன்ற பொது அடையாளங்களை காட்டும் வரலாற்றில் இவ்வாறு சிதைந்த வரலாறு அதிகம். இதற்கு மறுதலையாக ராமதாஸ் தலித் தலைவர்களோடு பூண்ட உறவுகுறித்த நோக்கத்தினையும் டி.எம்.மணி குறிப்பிடுகிறார். எல். இளையபெருமாளின் எதிர்ப்பை சரிக்கட்டும் நோக்கிலேயே அவர் தென் மாவட்டங்களில் செயற் பட்டுக் கொண்டிருநத திருமாவளவன், பசுபதி பாண்டியன் போன்றோரை வடக்கே அழைத்தார். ராமதாஸின் அரசியல் நோக்கத்திற்கு தடையாயிருந்த தலித்துகளும் தாங்கள் எதிரியில்லை என்ற நிலையை உருவாக்குவதற்காக, தன் பிடிக்கு உட்படும் தலித் தலைவர்களை ஆதரிப்பது அவரின் நடவடிக்கையில் இருந்தது என்றும் அவர் கூறுகிறார்.

ராமதாஸின் நடவடிக்கைகளை கவனித்துவரும் யாரும் இதை பொய் என்று சொல்ல மாட்டார்கள். தமிழ் பாதுகாப்பு இயக்கத்தில் திருமாவளவனோடு இணைந்து பணியாற்றிய போதும் சாதிஒழிப்பு சார்ந்த தளங்களில் இந்த ஒற்றுமையை விரிவுபடுத்திக் கொள்ளவில்லை என்பது இளையபெருமாள் ராமதாஸோடு 1991 இல் சமாதான உடன்பாட்டை மேற்கொண்டபோது இழிதொழில்களை வலியுறுத்தக் கூடாது என்பதை உடன்பாட்டின் மைய நோக்காக்கி யிருந்தார். உடன்பாடு அப்படியே நின்றுபோனது இளையபெருமாளும் ஏமாற்றப் பட்டார் என்பதே அனுபவம்.

இந்நூல்கள் தரும் தலித்மக்களின் போராட்ட உணர்வுகுறித்த பதிவுகள் இதுவரை தமிழில் சொல்லப்படாதவையாகும். தற்சார்பற்ற வாழ்நிலை, மறுக்கப்பட்ட கல்வியால் நிலைபெறும் அறியாமை போன்றவற்றால் குறுகிக் கிடந்த அம்மக்களிடம் இயல்பாக உள்ள எதிர்ப்புணர்வு, துணிச்சல், இயக்கம் ஒன்றின் பின்னணியோடு வலுப்பெறும் எழுச்சி, இழப்புகளைத் தாண்டி உடனடியாக மறுவாழ்வை நிர்மாணிக்கம் திண்மை என்று நகருகிறது. இப்பிரதிகள் இயக்கம் உருவானபின் இந்துக்களின் வீடுகளில் சோறெடுத்தல், பண்டிகை பலகாரங்கள் வாங்குதல், கோயில் விழாக்களில் கஞ்சி வாங்குதல் போன்றன நிறுத்தப்படுகின்றன.

நிலங்களை உரிமையாக்குதல், மடத்துக்கு சொந்தமான குளத்தில் நீரெடுத்தல் என்று போராட்டங்கள் விரிவாயின. மடத்திற்கு சொந்தமான குளத்தில் நீரெடுக்கும் போராட்டம் நடந்தபோது தலித்துகளுக்கு எதிராக நில ஆதிக்கம் கொண்டிருந்த வெள்ளாளர்களுக்கு ஆதராவான பிற்பட்ட வகுப்பினர் கலவரத்தில் இறங்கினர். இருந்தும் தோல்வியைப்பற்றி நினையாமல் அம்மக்கள் போராடினர். அம்மோதலின் ரவுடிப் பட்டியலில் இருந்த ராஜேந்திரன் என்பவர் இறந்துபோனார். ஏற்கனவே தாக்கப்பட்டு மருத்துவமணையில் சேர்க்கப்பட்டிருந்த தலித் தரப்பு மோகன் என்பவரை ஆத்திரத்தினால் ஆதிக்க வகுப்பினர் கொன்று விடக்கூடும் என்று மனம் வருந்தி நின்றபோது உடல் முழுவதும் வியர்த்தவாறு 4 இளைஞர்கள் ஓடிவருகிறார்கள்.

ராஜேந்திரன் கொலையானதும் ஆதிக்க வகுப்பினர் சிதறி ஓடிய தருணத்தில் மருத்துவமனையிலிருந்த மோகனை தூக்கிக் கொண்டு பின்புறச் சுவற்றில் ஏறிக்குதித்து மறைவான இடத்தில் வைத்து விட்டு அந்நால்வரும் வருகிறார்கள். இச்சம்பவத்தை எழுதும் டி.எம்.மணி "எப்படி இவ்வளவு தைரியமாக இவர்களால் சாதிக்க முடிந்தது?" என்று வியக்கிறார். சாதி, சாதியின் செயற்பாடு போன்றவற்றை அனுபவிக்கும் இம்மக்களிடம் அத்தளத்தில் ஒன்று நடந்தால் அடுத்தடுத்து என்ன நடக்கும் என்பதை எளிதாக யூகித்துக் கொள்ள முடிகிறது டி.எம்.மணி அரசு அலுவலர் ஒருவரை சந்திக்க செல்லுகிறாரென்றால் அக்குறிப்பிட்ட அலுவலர் தங்களிடம் என்னவெல்லாம் சொல்லுவார் என்று தங்கள் தோழர்களிடம் சொல்லிச் செல்லுவாராம். அவர் சொல்லிச் சென்றது போலவே அலுவலர் பேசுவாராம்.

இச்செய்தியை அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் என்னிடம் நேர்பேச்சில் குறிப்பிட்டார். இது எப்படி சாத்தியம்? சாதிரீதியான அணுகு முறையில் சாதி இந்துக்களும், அதிகாரிகளும் வழமையாய் சொல்லும் காரணம் ஒரே மாதிரி இருப்பதும், வாக்குறுதிகளின் ஏமாற்றம் போன்றவற்றை சந்தித்துப் பழகிப்போன இம்மக்களுக்கு சூழலை வாசிப்பது எளிமையாகிவிடுகிறது. அதற்கு எண்ணும் எழுத்தும் கற்க தேவையில்லை.

காவற்கூடம் என்னும் ஊரில் செத்த மாட்டை அப்புறப்படுத்த வெட்டியான் வரவில்லை என்பதற்காக வெட்டியான் குடிசைகளை ஆதிக்கவகுப்பினர் கொளுத்தினர். இதனை காவல்துறையில் புகார் செய்த 'குற்றத்திற்காக' அவ்வூரைச் சேர்ந்த 40 சேரிக் குடிசைகளை எரித்தனர். கட்சி பிரமுகர்கள். காவல்துறை, தாசில்தார், துணை கலெக்டர் போன்றோர் எரிக்கப்

**மருத்துவமனையிலிருந்த மோகனை
தூக்கிக் கொண்டு
பின்புறச் சுவற்றில் ஏறிக்குதித்து
மறைவான இடத்தில்
வைத்து விட்டு
அந்நால்வரும் வருகிறார்கள்.**

# கொலை வழக்கு, சிறை என்று பயணித்த டி.எம்.மணி குறைவான எண்ணிக்கையினரோடு இசுலாம் தழுவி இன்று உமர்பாரூக் ஆகி விட்டார்.

பட்ட குடிசைகளை கணக்கில் கொள்ளாமல் சாதி இந்துக்களுக்கு ஆதரவாக பேசினாலும் தலித் சமூகத்தைச் சேர்ந்த கலெக்டர் 'கங்கப்பா' என்பவரின் வழிகாட்டுதலோடு இந்துக்களின் தெருவழியே போகாத வண்ணம் முற்றிலும் புதிய இடத்தில் வீடு கட்ட இடத்தை வழங்கியபோது 52 குடிசைகளையும் உற்சாகத்தோடு கட்டிகொண்டனர். இழப்புதரும் வலியிலிருந்து மாறி மற்றுமொரு வாழ்க்கையை உருவாக்கிக் கொள்கின்றனர். குடிசைகள் கட்டப்பட்ட பகுதிக்கு நன்றியோடு கங்கப்பா நகர் என்று பெயரும் சூட்டிக்கொண்டனர் அம்மக்கள்.

போராட்டக் களங்களில் ஏற்படும் ஏமாற்றங்கள், கிராம அமைப்பொன்று சாதியை தக்கவைத்துக் கொள்ளும் சாதுர்யம் அசாதாரண சூழலில் பரப்பப்படும் சொல்லாடல்கள் குறித்த புரிதல் போன்றவை தலித்மக்களுக்கு அத்துப்படி. காவற்கூடம் கிராமங்களில் நடத்தப்பட்ட வன்முறையை எழுதத் தொடங்கும் டி.எம். மணி "முதல் நாள் செய்தித்தாளில் கோஷ்டி மோதல், தீவைப்பு என்ற தலைப்பில் செய்தி வெளியானது. பெரும்பாலும் கோஷ்டி தலித்துகளாகவும், அது பாதிக்கப்பட்ட தரப்பினராகவும் இருப்பர் என்பது தலித்துகளுக்கு பரிந்து பேசுபவராக வந்து தலித் இளைஞர் ஒருவரின் நடத்தை 'மீறலால்' மோதல் எழுந்தது என்றும் அரிஜனங்களே தங்களின் சில குடிசைகளுக்கு தீவைத்துக் கொண்டனர் என்றும் சொல்லுவதோடு சமாதானமாக போய்விடலாம் என்று சொல்ல தலித்துகளுக்கென சில உதவிகளையும் செய்ய முன் வருகிறார். ஆனால் தலத்துகள் தாங்களே தீவைத்துக் கொண்டதாக புகார் கூறியவர்களிடம் தீப்பெட்டியைக் கொடுக்கும் கலெக்டர் கங்கப்பா, "எங்கே உன்குடிசையை நீயே கொளுத்திக்கொள் பார்ப்போம்" என்று சொன்னபோது அவர்கள் பின்வாங்கினர். இந்த இடத்தில் கலெக்டர் கங்கப்பா தலித்வகுப்பினர் என்பதையும் ராமகிருஷ்ணன் வன்னியர் என்பதையும் டி.எம்.மணி குறிப்பிடுகிறார்.

வேறுசில இடங்களில் தலித் அதிகாரியாக இருப்பதாலேயே தலித் ஆதரவு முத்திரையால் தனக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்சும் அதிகாரிகளைக் குறிப்பிடும்போது அவர்களின் சூழலை யோசித்துப் பார்க்கும் போக்கும் இவர்களிடம் வெளிப்படுகிறது. இந்த சூழல் குறித்து வேறொரு இடத்தில் எழுதும் டி.எம்.மணி "தலித்துகள் தாக்கப்படும் போதும், கொடுமைக்குள்ளாகும் போதும் அனுதாபப்படுவதற்கும் ஆதரவுக்குரல் கொடுப்பதற்கும் மற்ற சாதியில் ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் தலித்துகள் எதிர்தாக்குதல் நடத்துவதை அவர்கள் விரும்புவதில்லை" என்பதை நெடிய அனுபவத்திலிருந்து சொல்லுகிறார்.

கிராமங்களின் ஒற்றுமை என்பது அந்தந்த சாதிக் கடமையை அவரவர் செய்யவேண்டும் என்பதே போன்றவற்றை துல்லியமாக சொல்லும் சாதிகளின் சாதியச் செயற்பாடுகளை குறைத்துவிடாமலும், மிகைப்படாமலும் எழுதுகிறார். பிராமணர் எதிர்ப்பு அவருக்கிருந்தாலும் பிராமணர் அல்லாத சாதிகளன தலித்வெறுப்பை குறைத்து மதிப்பிடவோ, அதன் மூலம் சாதிய பலன்களிலிருந்து அவர்களை தப்பவைக்கவோ அவர் முயற்சிக்க வில்லை.

கொலை வழக்கு, சிறை என்று பயணித்த டி.எம்.மணி குறைவான எண்ணிக்கையினரோடு இசுலாம் தழுவி இன்று உமர் ஃபாரூக் ஆகி விட்டார். அதற்கான காரணம். மதம் தழுவியவர்களின் படங்கள் என்று சாதி ஒழிந்தது நூலின் இறுதியையும்,'தமிழ் தேசியத்தால்' உள்வாங்கப்பட்ட இன்றைய தலித் அரசியலை குறித்து செந்தமிழ் நாட்டுச் சேரிகள் நூலின் இறுதியையும் எழுதியுள்ளார். இந்நூல்களை வாசித்து முடிக்கிற போது பெரும் துயரமும், ஆற்றாமையும் நம்மை சூழ்ந்துக் கொள்கிறது. நூலின் இறுதிப்பகுதியில் அவர் முன்னெடுக்கும் விவாதத்தில் யாரும் உடன்படவோ, மாறுபடவோ செய்யலாம். ஆனால் அவர் முன்வைக்கும் அனுபவத்தை யாரும் அத்துணை எளிமையாய் கடந்துவிட முடியாது.

அங்கீகரிக்கப்படாத டி.எம்.மணி போன்றோரின் போராட்ட பலனால்தான் இன்றைய தலித் சமூகம், தலித் இயக்கங்களும் தங்களை ஆசுவாசப்படுத்தக் கொள்கின்றன. பெரும் இயக்கபலம் இல்லாவிட்டாலும் அவர் இன்றும் எழுதுகிறார், செயற்படுகிறார், ஏனெனில் அவர் பெற்றுக் கொண்டுள்ள கருத்தியல் தன்னளவில் விடுதலை பெற்றவராக அவரை உணரவைத்துள்ளது. தன்னளவில் விடுதலை பெறாத யாரும் எத்தகைய கூட்டத்தை திரட்டினாலும் யாரையும் விடுவிக்க முடியாது.

நன்றி
ஆழி

**நாம் பிரிந்து விட வேண்டாம்**

தொடர் நூலாக வெளிவந்து விட்டதால் அந்தத் தொடர் இவ்விதழில் இடம்பெறவில்லை.

**கர்க்கரேயைக் கொலை செய்தது யார்?**

தொடரும் அடுத்த இதழில் இடம்பெரும்.

# முல்லைப் பெரியார் பிரச்சனையின் நதி மூலம்

## பெங்களூர் எம்.எஸ். கமாலுத்தீன்

இந்த பூமியில் நாம் பிறப்பது ஒருமுறைதான். நாலுபேருக்கு நல்லதை செய்ய வேண்டும். அந்த நல்ல காரியத்தை தள்ளிவைப்பதோ, அல்லது தவிர்ப்பதற்கோ இடமில்லை. ஏனெனில் மீண்டும் இந்த பூமியில் நான் பிறக்க போவதில்லை"

– கர்னல் பென்னிகுவிக்

"தமிழக கிராமங்களில் தான் இன்னமும் ஈரமுள்ள மனிதர்கள் வாழ்கிறார்கள். அவர்களது நிலங்களில் விளையும் உணவுப் பொருள்கள் கேரளத்துக்கு வருகின்றன. பணப்பயிர்களான தென்னையையும், ரப்பரையும் பயிர் செய்யக் கூடிய மலையாளிகளுக்கு அரிசி முதல் அத்தனையும் தமிழகத்திலிருந்து தான் வருகிறது. ஆனால் அதே விவசாயிகளின் விவசாயத்திற்கு பெரியாறு அணையிலிருந்து தண்ணீர் விட மறுக்கும் கேரள அரசை கடுமையாக கண்டிக்கிறேன்"

–பால் சக்காரியா

புகழ் பெற்ற மலையாள இலக்கிய அறிஞர், சாகித்திய அகாததெமி விருது பெற்றவர் 19-1-2003 ஆனந்த விகடன் இதழில் கூறியது.

இயற்கை எழில் மிகுந்த கேரள மாநிலம். மரங்களும் - மலைகளுக்கு நடுவே ஓடிவிளையாடும் நதிகள், நூறு சதவீதம் படித்தவர்கள் நிறைந்த மாநிலம். அறிவார்ந்த சமுதாயம். சுத்தமான சுயநலத்தோடு இருப்பது புரிந்து கொள்ள முடியாத புதிர்.

முல்லை பெரியாறு அணை விவகாரம் இருமாநிலங்களிலும் புயலைக்கிளப்பி பல போராட்டங்களை நடத்தி, பொருளாதார இழப்பை ஏற்படுத்தி இரு மொழி பேசுபவர்கள் தாக்கப்பட்ட 'நதிமூலத்தை' அறிந்து கொள்வோம்.

இடுக்கி மாவட்டத்தில் உள்ள தேக்கடியில். மூன்று பக்கம் மலைகளால் சூழப்பட்ட பள்ளத்தாக்கில் 1895- ல் அன்றைய ஆங்கில அரசுப் பொறியாளர் பென்னிகுவிக் தலைமையில் கட்டியது. கட்டுமானப் பணிநடந்து கொண்டிருக்கும் போது. பணப்பிரச்சினையால் பணி நிறுத்தப்பட்டது. அணையின் அவசியத்தை உணர்ந்த கர்னல் பென்னிகுவிக் தன்னுடைய சொத்துக்களை எல்லாம் விற்று அணையைக் கட்டி முடித்தார்.

பொதுவாக அணைகளின் முன் பகுதியில் மதகுகள் அமைக்கப்பட்டு, பாசனத்திற்காக தண்ணீரை திறந்து மூடும் வகையில் அணைகள் கட்டப்படுவது வழக்கம். முல்லை பெரியாறு அணை இதற்கு முற்றிலும் மாறுபட்டது. அணையின் முன்பக்கம் மதகுகள் கிடையாது. அணையின் பின் பக்கம் மலையை குடைந்து இரண்டு கி.மீ தூரத்திற்கு ராட்சத குழாய் அமைத்து தமிழகத்திற்கு தண்ணீர் திருப்பிவிடப் படுகிறது. கடும் தண்ணீர் பஞ்சத்தால் தவித்த அன்றைய ஒருங்கிணைந்த மதுரை ராமநாதபுரம் இன்று தேனி, திண்டுக்கல், சிவகங்கை மாவட்டங்கள் பாசன குடி நீர் வசதியை இதன் மூலம் பெறுகின்றன.

இந்த அணை தண்ணீரை மேலே குறிப்பிட்ட மாவட்டங்கள் பயன்படுத்தும் வகையில் 999 ஆண்டுகள் ஒப்பந்தம் போடப்பட்டது. 104 அடிக்கு மேல் வரும் தண்ணீரை மட்டும் தான் தமிழகத்திற்கு திருப்ப வேண்டும் என்பது ஒப்பந்த ஷரத்துக்களில் மிக முக்கியமான ஒன்று. அணை நீர் மட்டம் 152 அடி உயரமாக இருந்த போதும் மொத்த கொள்ளவான 15.5 டி.எம்.சி யில் 9 டி.எம்.சி தண்ணீர் அணையிலிருந்து வெளியேறாது. இந்த அளவு தண்ணீரை தேக்கி வைக்க உதவியாக இருப்பது அணையின் இடது புறம் உள்ள பேபிடேம். 1895- ஆம் ஆண்டு அக்டோபர் 10 - ம் தேதி முல்லைப் பெரியாறு அணை திறக்கப்பட்டது முதல் 25.11.1979 வரை பெரிய பிரச்சனைகள் ஏதும் இல்லாமல். சென்னை ராஜதானி அரசுக்கும் - திருவிதாங்கூர் சமஸ்தானத்துக்கும் இடையே 29.10. 1886 - ல் செய்து





கொண்ட அணை ஒப்பந்தம் மீறப்படாமல் சுமுகமாக எல்லாம் நடந்து வந்தது.

உலக தொழிலாளர்களே ஒன்று படுங்கள் ! கோசத்தை வழிமொழிந்த கேரளவாழ் காம்ரேட்டுகளும், தேசியம் பேசும் காங்கிரஸ் காரர்களும் முல்லை பெரியாறை பலிகொடுக்க ஒரே மாதிரியே யோசித்து பல திட்டங்கள் போட்டார்கள் அவற்றுள் ஒன்று 1976 - ம் ஆண்டு இடுக்கியில் மிகப்பெரிய 555 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட நீர்மின் நிலையம் அமைப்பது எதிர்பார்த்தளவு நீர்வரத்து இல்லை என்பதால் கைவிடப்பட்டது. (கொள்ளையடிப்பதற்காகவே இப்படி ஒரு அணையை கட்டியதாக ஒரு பேச்சு உண்டு).

பெரியாறின் நீர் மட்ட அளவை குறைத்து - மீதித் தண்ணீரை இடுக்கி அணைக்கு திருப்பி விட திட்டம் போட்டார்கள். இதற்கு 999 ஆண்டு ஒப்பந்தம் தடையாக இருந்தது. பீர்மேடு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கே.கே, தாமஸின் மூலம் பெரியாறு அணை பலவீனமடைந்து விட்டது. எனவே 152 அடி தண்ணீர் தேக்கினால் அணை உடைந்து விடும் என்று போலி பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்டார்கள். இதற்கு ஊடகங்களும் துணை போயின.

25.11.1979 - ல் அப்போது மத்திய நீர் வளக் கமிஷன் தலைவராக கேரளத்தைப் பூர்வீகமாகக் கொண்ட கே.கி. தாமஸ் இருந்தார் - இவர் தலைமையில் நடந்த பேச்சு வார்த்தையின் முடிவில் ரூ 51 லட்சம் செலவில் அணையை பலப்படுத்த முடிவானது. இதற்கான செலவை தமிழகமே ஏற்றுக் கொள்ளவது என்றும், அணையை பலப்படுத்துவது வரை 136 அடியாக நீரை தேக்கி வைப்பது என்றும் முடிவானது. அன்றைய எம்.ஜி,ஆர் அமைச்சரவையில் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த ராஜா முஹம்மது - இந்த முடிவை எதிர்த்தார் கையெழுத்து போடவில்லை.

பல்வேறு நிர்ப்பந்தங்களால் வேறு வழியின்றி தமிழகம் ஏற்றுக் கொண்டது மராமத்துப் பணிகளையும் தொடங்கியது. இதை எதிப்பார்க்காத கேரள அரசு பலவகையில் முட்டுக்கட்டைகளைப் போட்டு பணியை நிறைவு செய்ய விடவேயில்லை. முல்லைப் பெரியாறு கேரளத்துக்கு மட்டும் சொந்தம் என்ற எண்ணத்தை ஈடேற்ற எல்லோரும் ஓர் அணியில் சதி செய்கிறார்கள் இன்று வரை இதே நிலைதான்.

136 அடியாக அணை நீர் மட்டம் குறைக்கப்பட்டதால் ரூ 70 கோடிக்கும் மேல் விவசாய உற்பத்தி இழப்பு ஏறிக் கொண்டேபோகிறது. இது 75,000 ஏக்கருக்குள் தான் பாசனம் செய்ய முடிகிறது 1,47,000 ஏக்கர் நிலம் தரிசாக மாறிவருகிறது (தேனியின் புறநகர் பகுதியான பழனிச்செட்டிப் பட்டியிலிருந்து கூடலூர் வரை பயணம் செய்யும் போது வயல்களின் நடுவே, நெல்வாசனையோடு கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பசுமை மனதுக்கு இதமாக இருக்கும். இப்போது ரோட்டிலிருந்து 300 மீட்டர் வரை கடைகளும் வீடுகளுமாகக் காட்சியளிக்கின்றன).

அணையை பலப்படுத்தும் பணியை முழுமைப் படுத்தவிடாமல் கேரளம் தடுத்ததால் தமிழகம் உச்ச நீதி மன்றத்தில் வழக்குபோட்டது. இருதரப்பு வாதங்களையும் பரிசோதிக்கும் படி ஆணையிட்டது உச்ச நீதிமன்றம். தொழில் நுட்ப வல்லுநர்கள் குழு ஒன்றை அமைத்து பரிசோதித்து அணையின் நீர் மட்டத்தை 142 அடிவரை உயர்த்துவதால் எந்த பாதிப்பும் இல்லை என கூறியது தமிழக அரசு. இதை ஏற்று உச்சநீதி மன்றமும் தீர்ப்பளித்தது. இன்று வரை கேரளம் இத்தீர்ப்பை மதிக்கவேயில்லை. தீர்ப்பை கேலிசெய்யும் விதமாக 31.3.2006 - ல் கேரள ஆறுகளின் பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றி தமிழகத்தை வெறுப்பூட்டியது. மீண்டும் உச்ச நீதி மன்றத்தை தமிழகம் அணுக ஒய்வு பெற்ற நீதிபதி ஆனந்த் தலைமையில் ஐந்து பேர் கொண்ட உயர் மட்ட குழுவை நியமித்து மீண்டும் விசாரித்து அறிக்கை அளிக்கும் படி உத்தரவிட்டது உச்ச நீதி மன்றம். இது கைப்புண்ணுக்கு கண்ணாடி தேடும் வேலை. கடந்த 31 அண்டுகளுக்கு மேலாக முல்லை பெரியாறு விசயத்தில் கேரளம் சொல்லிவரும் பொய்களுக்கு அளவேயில்லை.

## இடுக்கி மாவட்டத்தில் நில அதிர்வு:

2001 - ம் ஆண்டு 4.8 ரிக்டர் அதிர்வு ஏற்பட்டது. அண்மையிலும் 2.3 ரிக்டர் அளவுக்கு நில அதிர்வு ஏற்பட்டது. கேரளமுதல்வர் உம்மண் சாண்டி முதல், ஊடகங்கள் வரை எல்லோரும் ஒரே குரலில் "அணையில் விரிசல், ஆங்காங்கே வெடிப்பு ஏற்பட்டுள்ளது பெரியாறு அணை உடைந்தால்

கேரளத்தில் ஐந்து மாவட்டத்தில் உள்ள 35 லட்சம் மக்கள் வெள்ளத்தில் சிக்கி அழிந்தே போவார்கள் என கூப்பாடு போடுகிறார்கள்.

## உண்மை நிலை என்ன தெரியுமா?

இடுக்கி, எர்ணாகுளம் என இரண்டு மாவட்டங்களில் மட்டுமே பெரியாறு ஓடுகிறது அதுவும் கூட பெரியாறு அணையிலிருந்து 50 கி.மீ வரை காடுகளின் வழியாக ஓடி இடுக்கி அணையை அடைகிறது. அதன் பிறகு 70 கி.மீ நீர்வழிப்பாதையாகப் பயணப்பட்டு அரபிக்கடலை அடைகிறது. இதில் 35 லட்சம் எங்கே இருக்கிறார்கள்? மலைபிரதேசமான கேரளாவில் 2869 கடல் மட்ட உயரத்தில் அணை உள்ளது. இடுக்கியும் எர்ணாகுளமும் இதைவிட அதிக உயரத்தில் உள்ளது.

டிசம்பர் முதல் வாரத்தில் கேரள உயர் நீதிமன்றம் ஒரு கேள்வியை எழுப்பியது, 'அணை உடையப்போகிறது என்கிறீர்கள் மக்களைப் பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?' இதற்கு பதில் சொன்னார் கேரள அட்வகேட் ஜெனரல் தண்டபாணி: "முல்லைப் பெரியாறு அணை இருபுறமும் மலைகளால் சூழ்ந்துள்ளது அணை உடைந்தால் 480 வீடுகள்தான் பாதிக்கும் இன்னும் சரியாக சொல்வது என்றால் உப்புத்துறையில் 420 குடும்பங்களும், சப்பாத்துப் பகுதியில் 580 குடும்பங்களும் உள்ளன, இவர்களை பாதுகாக்க 36 அடி உயரத்தில கரையும் கட்டப்பட்டுள்ளது. ஒரு வேளை அணை உடைந்தால் 106 அடிக்கு மேல் தான் உடையும் அப்போது 6 டி.எம்.சி தண்ணீர் மட்டுமே வெளியேறும் அந்தநீர் நேராக இடுக்கி அணையைத்தான் போய் சேரும் முழு அணையும் உடைந்து தண்ணீர் வெறியேறினாலும் 70 டி.எம்.சி கொள்ளளவு உள்ள இடுக்கி அணை ஏற்றுக் கொள்ளும்" என்றார்.

உண்மையை சொன்னதால் அட்வகேட் ஜெனரல் உருவ பொம்மையை எரித்து தங்கள் எதிர்ப்பை காட்டுகிறார்கள் மலையாளிகள்.

தமிழ் நாட்டின் நீர்ப்பிடிப்புப் பகுதியின் மொத்த பரப்பளவு 2.588 ச.கி.மீ இதிலிருந்து 2.641 மி.க.மீ நீர் பாய்ந்தோடி கேரள மாநில நதிகளான பாரதப்புழா, சாலியாறு, சாலக்குடியாறு, பெரியாறு ஆகியவற்றில் கலக்கிறது. இந்த தண்ணீரை தடுத்து நிறுத்திக் கொள்ள தமிழகம் எப்போதும் நினைத்தது இல்லை. தமிழ் நாட்டை விட கேரளாவில் மரங்கள் அதிகம் அதனால் மழையும் அதிகம். சுமார் 25,00 டி.எம்.சி தமிழ் நாட்டில் 1,350 டி.எம்.சி தான் மொத்த நீர்வளம். கேரளத்தவர்கள் பயன்படுத்தியது போக சுமார் 1300 டி.எம்.சிக்கும் அதிகமான தண்ணீர் வீணாக அரபிக் கடலில் கலக்கிறது இந்த நீரின் அளவை இப்படி புரிந்து கொள்ளலாம். மேட்டூர் அணையிலுள்ள நீரை போல் 11 மடங்கு அதிகமாகும் இவ்வளவு தண்ணீரை கூட தரவேண்டாம் 850 டி.எம்.சி தண்ணீரை மட்டும் கொடுத்து உதவினால் தமிழ்நாட்டின் 8.20 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் இதனால் கேரளத்திற்கு பலன்கள் அதிகம்.

மிக குறைந்தளவு தண்ணீர் வசதியில் பயிர் செய்து தமிழகமும் சாப்பிட்டு கேரளத்திற்கு அனுமதி பெற்று அனுப்பப்படும் அரிசியின் அளவு 700 டன் - இதை உற்பத்தி செய்ய 511 மில்லியன் கன மீட்டர் நீர் தேவை. பருப்பு, பழங்கள், காய்கறி, ஆடு மாடு, கோழி, முட்டை, பால், துணிகள், மணல், சிமிண்ட், கம்பி இவற்றை எல்லாம் உற்பத்தி செய்ய எவ்வளவு தண்ணீர் தேவை என்பதை கணக்கு போட்டால் முல்லை பெரியாறில் தமிழகம் பெறுவது வெறும் 126 மில்லியன் கன மீட்டர் நீர் மட்டுமே. இதை கூட மனிதாபிமான அடிப்படையில் தரமறுப்பதால் தான் மனிதர்களுக்கு இயல்பான கோபம் வருகிறது. போராட்டம், உண்ணாவிரதம், உருவபொம்மை எரிப்பு, மனித சங்கிலி - எல்லை முற்றுகை என அகிம்சை போராட்டங்கள் அர்த்தமில்லாமல் போகும் போதுதான் மக்கள் வெறுப்படைகிறார்கள்.

இதற்காக இங்கே வாழும் கேரளத்துச் சகோதரர்களைத் தாக்குவதோ, அங்கே வாழும் தமிழகத்து சகோதரர்களைத் தாக்குவதோ முறையற்ற செயல். ஒரு நாட்டுக் குடிமக்கள் இப்படித் தங்களுக்குள் மோதிக் கொள்வது முட்டாள் தனம்.

முல்லைப் பெரியாறு அணை உடைந்து மிகப் பெரிய சேதமேற்படுவது போல் 'கிராபிக்ஸ்' துணையுடன் ஹாலிவுட் பின்பலத்துடன் ஆங்கிலத்திலும், இந்திய மொழிகளில் மாற்றம் செய்யப்பட்டு பீதியைக் கிளப்புவதற்காகவே மலிவான உத்தியை கேரள சகோதரர்கள் செய்து வருகிறார்கள் சில மாதங்களுக்கு முன் சிடி வடிவில் வந்ததை வெள்ளி திரையில் காட்டி வியாபாரம் செய்ய அரசியல் வாதிகள் அணி திரண்டு நிற்கிறார்கள் கடந்த 2011-ம் ஆண்டு நடந்த கேரள சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான



ஐக்கிய முற்போக்குக் கூட்டணி 72 இடங்களையும் இடது சாரி கம்யூனிஸ்ட்டுகள் 68 இடங்களையும் கைப்பற்றினார்கள்.



## நதி அரசியல்:

சபாநாயகர், நியமன உறுப்பினர் போக 70 இடங்களே மூன்று உறுப்பினர்கள் முன்னிலை பெற்றதால் முதல்வரானார் உம்மன் சாண்டி. தன் அமைச்சரவையில் உணவுத்துறை மந்திரியாக இருந்த எர்ணாகுளம் மாவட்ட பிரவம் தொகுதி எம்.எல்.ஏ, டி.எம். ஜேக்கப் திடீர் மரணம் அடைந்ததால் ஜனவரி அல்லது பிப்ரவரியில் இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. எப்படியும் ஜெயித்தாக வேண்டும் என்ற வெறியில் முல்லைப் பெரியாறு பிரச்சனை பெரிதுபடுத்தப்படுகிறது.

இந்த நாட்டின் மிகப்பெரிய சாபக்கேடு அரசியல்வாதிகள். தங்கள் நலத்திற்காக நாட்டின் எதிர்காலத்தையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் பலி கொடுத்தாவது தாங்கள் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க நினைக்கின்றார்கள். இவர்களை மக்கள் தான் ஒதுக்கிவைக்க வேண்டும் 1952 - ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் (அப்போது சென்னை ராஜதானி) இராஜாஜி முதலமைச்சராக இருந்த நேரம் முல்லை பெரியாறு அணையிலிருந்து ராட்சச குழாய் வழியாக வரும் நீரிலிருந்து மின் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டது. இதற்கு திருவாங்கூர் கொச்சி அரசின் முதலமைச்சராக இருந்த பட்டம் தாணுப்பிள்ளையிடம் அனுமதி கேட்கப்பட்டது கேரள அரசு தயங்கியது.

## இராஜாஜி

தமிழ் நாட்டின் எதிர் கட்சித் தலைவராக இருந்த பி. இராமமூர்த்தியை அழைத்து கேரள அரசிடம் பேச சொன்னார் இராஜாஜி. கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவரான பி. இராமமூர்த்தி பேசி வெற்றிகரமாக ஒப்புதல் பெற்றுத் திரும்பினார். தன்னலமில்லாத அன்றைய தலைவர்கள் இரு மாநிலங்களுக்கும் நன்மை பயக்கும் திட்டங்களை தீட்டி வெற்றிகரமாக செயல்படுத்தி தூரநோக்கு சிந்தனையுடன் செயல்பட்டதால் வரலாறு இன்று அவர்களை வாழ்த்துகிறது.

இன்றைய தலைவர்கள் சென்னையில் உண்மை சொல்லி விட்டு டெல்லியில் போய் தன் கருத்தை வாபஸ் வாங்கும் தொடை நடுங்கிகள். இவர்களை என்ன சொல்வது? அரசியலை விட்டே அப்புறப்படுத்துவதே நாம் செய்யக் கூடிய மிக மிக நன்மையான செயலாக இருக்கும். இந்த பிரச்சனையில் அரசியல் ஆதாயம் கருதி போராடியவர்களையும் அப்புறப்படுத்துவதும் அவசியம்.

முல்லைப் பெரியாறு பிரச்சனையில் அரசியல் ஆதாயத்தைத் தாண்டி சுயநலம் மேலோங்கி உள்ளது. முல்லைப் பெரியாறு அருகே புதிய அணைகட்ட மத்திய சுற்றுச் சூழல்துறை ஆய்வு (சர்வே) செய்வதற்காக எந்த அனுமதியும் தரவில்லை என்கிறார் துறை அமைச்சர் ஜெயந்தி நடராஜன். ஆனால் கேரள நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தலைமைப் பொறியாளர் இவர்கள் ஊடகங்களிடம் இப்படி சொல்லி வருகிறார்கள்.

2010 - ம் ஆண்டிலேயே ஜெய்ராம் ரமேஷ் அமைச்சராக இருந்தபோது அனுமதி பெற்று விட்டோம் டிபிஆர் (டிடெய்ல்டு பிராஜெக்ட் ரிப்போர்ட்) தயாராகி விட்டது. ரூ 650 கோடியும் ஒதுக்கப்பட்டு விட்டது என்கிறார்கள்.

புதிய அணைகட்டும் போது முல்லை பெரியாறு அணையை எவ்வாறு எந்தெந்த நிலைகளில் உடைப்பது என்பதை எல்லாம் விலாவாரியாக சொல்லிவருவதற்கு தைரியம் தருபவர்கள் டெல்லியில் இருக்கும் 35 - க்கும் மேற்பட்ட உயர்மட்ட கேரளத்து அதிகாரிகள் எல்லா துறையிலும் இருக்கிறார்கள். இவர்களை மீறி சோனியாகாந்தியும், மன்மோகன் சிங்கும் கூட எதுவும் செய்துவிடமுடியாது. இந்த அதிகார மையங்கள் உறங்கும் நேரம் தவிர மீதி நேரங்கள் எல்லாம் உடன் இருப்பவர்கள் இந்த கேரள அதிகாரிகள். தங்கள் மாநிலத்தின் நேர்மையற்ற நிலைப்பாட்டுக்கு அனுமதி வாங்கித்தருபவர்கள் இவர்கள் தான்.

1976 - ம் ஆண்டு மத்திய அரசு கேரளத்தில் இருக்கும் நதிகளை பற்றிய ஆய்வு செய்ய ஒரு குழுவை அமைத்தது 85 க்கும் மேற்பட்ட மேற்கு நோக்கிப் பாயும் நதிகள் கேரளத்தில் உள்ளது. இவற்றின் மூலம் 1,98,000 மில்லியன் கியூபிக் மீட்டர் தண்ணீர் செல்கிறது. கேரளா பயன்படுத்தியது போக 1 இலட்சத்து 25 ஆயிரம் மில்லியன் கியூபிக் மீட்டர் தண்ணீரை தமிழகத்திற்கு திருப்பினால் சுமார் 8.20 லட்சம் ஏக்கர்கள் பாசனவசதி பெறுவதன் மூலம், பல லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு உணவு உற்பத்தியும் பெருகும் என குழு அறிக்கை சமர்ப்பித்தது.

இது பற்றி தமிழகம் கேரளத்துடன் சுமார் 11 முறை பேசியும் சம்மதிக்க வில்லை இது பற்றி சட்ட மன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் பலமுறை கேள்வி எழுப்பியும் பலன் இல்லை இது பற்றி இனிமேல் பேசுவதே தவறு என்பதை போல் திசை திருப்பியவர்கள் இதே அதிகாரிகள் வர்க்கம்தான்.

முல்லைப் பெரியாறு பிரச்சனையில் "கேரளத்திற்கு பாதுகாப்பு - தமிழ்நாட்டுக்குத் தண்ணீர்" என்ற கேரளத்தின் கோசம் முழுக்க, முழுக்க நயவஞ்சகத் தனமானது. இவர்கள் சொல்வதை செய்யக் கூடியவர்கள் இல்லை என்பதே உண்மை.

கேரளத்தின் வறட்டுப் பிடிவாதம் தமிழகத்தை பாலைவனமாக்கி விடும். வாழ்வாதாரப் போராட்டம் உயிரோட்டத்துடன் இருக்க வேண்டும். மத்திய மாநில அரசுகளுக்கு நெருக்குதல் தருவதன் மூலம் நியாயமான தீர்வு எட்ட சலிப்படைந்து விடாதப் போராட்டம் மிக, மிக முக்கியம்.

"நீங்கள் (உங்களுக்கு மத்தியில்) உடன்படிக்கை செய்தால் நிறைவேற்றுங்கள்"

**(அல்குர்ஆன் 16:91)**

"உங்களுக்கு(ம் அவர்களுக்கு மிடையே) இருக்கும் உறவையும் உடன் படிக்கையையும் அவர்கள் பேண மாட்டார்கள்: தங்களுடைய (பொய்யான) வாய் (மொழி)களினால் உங்களை அவர்கள் திருப்திப்படுத்துகின்றனர்: ஆனால் அவர்களுடைய இதயங்கள் (அவற்றை நிறைவேற்றுவதை) மறுக்கின்றன - அவர்களில் பெரும்பாலானவர்கள் பாவிகளாவார்கள்"

**(அல்குர்ஆன் 9:8)**

999 - ஆண்டு ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் மின் உற்பத்திக்காக தான் அணை உடைக்க நினைக்கிறார்கள். சூரிய மின் உற்பத்திக்கு முன்னுரிமை தரவேண்டும். இந்தியாவில் 300 நாளும் நல்ல வெயில் அடிக்கிறது. இதன் மூலம் சுற்று சூழல் மாசு இல்லாத மின் உற்பத்தி செய்யலாம். ஆனால் விவசாயம் செய்ய தண்ணீர் மிக, மிக தேவை இதை ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் திருத்தமாக வலியுறுத்த வேண்டும். இப்பிரச்சனையில் மிக முக்கியான படிப்பினை நிறைய மரங்களை வளர்த்தால் அதிகமான மழையை பெறமுடியும் நூறு சதவித கல்வியறிவு மூலம் உயர் பதவிகளுக்கு தமிழர்கள் முன்மொழியப்படுவார்கள். நியாயங்கள் நிம்மதியடையும்.

இப்போது பரபரப்பான
விற்பனையில்......
யூசுப் அல் கர்ளாவி யின்
நாம் பிரிந்து விடவேண்டாம்
முஸ்லிம்கள் 73 கூட்டங்களாக பிரிய மாட்டார்கள் என்று குர்ஆன், சுன்னா ஒளியில் நிரூபிக்கும் நூல்!
முஸ்லிம்கள் பிளவுபட குர்ஆனோ, ஹதீஸோ காரணமில்லை என்று விளக்கும் நூல்!!
முஸ்லிம்கள் ஒன்றுபடுவதற்கான காரணங்களையும், வழிமுறைகளையும், கையங்களையும் விவரிக்கும் நூல்!!!
விலை 175
இல்யாஸ் ரியாஜி அவர்களின்
இனிய தமிழ் நடையில்.......
வேர்கள் வெளியீட்டகம்
சென்னை.

இன்ஷா அல்லாஹ்....
விரைவில் வெளிவருகிறது!
ஷஹீத் செய்யித் குத்துப்
அவர்களின்
இஸ்லாமிய எழுச்சியின்
மைல் கற்கள்
எகிப்தில் இஸ்லாமிய எழுச்சிக்கு வித்திட்ட நூல்!
தலைமுறை தாண்டியும் புரட்சிகளை விளைவிக்கும் நூல்!
பல லட்சம் போராளிகளை உருவாக்கிய நூல்!!
மு. குலாம் முஹம்மது அவர்களின்
விறுவிறுப்பான மொழிநடையில்
வேர்கள் வெளியீட்டகம்
2/1 மண்ணடி தெரு, 4வது தளம்
மண்ணடி சென்னை -1
அலை: 9444239594, : 044-45566909

## அல்குர்ஆனின் அறிவியல் அத்தாட்சிகள்

# ஆ.....!! ஆது .....!!!

ரஹ்மத் ராஜகுமாரன்
9443446903

நபி நூஹ் (அலை) அவர்களின் மகன் ஸாமின் மகன் இரம்மின் மகன் 'உஸ்' என்பவருக்கு எட்டு ஆண்மக்கள் இருந்தனர். அவர்களில் ஒருவரின் பெயர் 'ஆது' என்பது. அவரின் வழிவந்தவர்கள் தாம் 'ஆது' மக்கள்.



இவர்கள் பதிமூன்று பிரிவினராகப் பிரிந்து யமன் நாட்டில் வாழ்ந்து வந்தனர். பின்னர் யமனின் மேற்கு பகுதியிலிருந்து ஈராக் வரையிலும், அதனைச் சுற்றிலும் பரவி வாழ்ந்தனர் என்பதாக வரலாற்று ஆய்வாளர் ஆங்கிலேயர் 'வெல்லஸ்டட் ஜேம்ஸ்' என்பவர் தன் வரலாற்றுப் புதினத்தில் பதிவு செய்துள்ளார்.

ஆதுக்கள் தங்களின் தலைமீது பெரும் பாறைகளை எளிதாகத் தூக்கிச் சென்று அவற்றை தங்களின் எதிரிகளின் மீது போட்டு அவர்களை அழித் தொழிப்பார்களாம். சாதாரணமாக பெரியமரங்களை பிடுங்கி எதிரிகளைத் தாக்குவார்கள் மற்றும் அவர்கள் கோபப்படின் எதிரிகளை தாங்கள் வசிக்கும் மலைகளிலுள்ள வீடுகளிலிருந்து கீழே தள்ளி அவர்கள் மீது பாறாங்கல்லை நம்ம பந்து மாதிரி வீசி சாகடிப்பார்கள்.

ஆதுக்கள் வாழ்ந்த இப்பகுதியை திருக்குர் ஆனில் "அஹ்காஃப்" என்று குறிப்பிடுகிறது. இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் "கௌமுல் அஹ்காஃப்" என்று குறிப்பிடுகின்றனர். பள்ளத்தாக்குகளில் கெட்டவை "அஹ்காஃப்" என்ற பள்ளத் தாக்கு என்பதாக அப்துற் - றஹீம் (நபிமார்கள் வரலாறு) குறிப்பிடுகிறார்.

இறைவன் படைக்கப்பட்ட படைப்புகளிலே ஆதுக் கூட்டத்தினர் உயரமானவர்களாகவும் (சுமார் 80 அடி. படத்திலிருந்து தோராயமாக கணிக்கப்படுகிறது. உடனே வாசகர் இதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கா...? என்று எப்போதும் ஆதாரம் கேட்கும் வாசகர் மசூத் அப்துற் ரகுமான் கவனிக்க..) வலுமிக்கவர்களாகவும் விளங்கிவந்தனர். நீண்டு வளர்ந்து நெடுமரம் போலிருந்த அவர்கள் உண்டு, உண்டு உடல் கொழுப்பேறி பலம் வாய்க்கப்பெற்றிருந்த அவர்கள் தங்களின் கால்களை பாறைகளில் உதைத்தால் முழங்கால் அளவு அவர்களின் கால்கள் கல்லுக்குள் போய்விடும். இதைக்கண்டு அவர்கள் "எங்களை விட பலம் வாய்ந்தவர்கள் இவ்வுலகில் எவர் உள்ளனர்? என்று இறு மாப்புடன் கூறி வந்தனர்.

மலைகளைக் குடைந்து மண்டபம் செய்து அதனை அலங்கரித்து அதில் உல்லாசமாக வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு வரும் ஒவ்வொரு ஒட்டகத்தை அறுத்து உண்ணும் இயல்பினராயிருந்தனர். அவர்களின் உணவு ஒட்டக இறைச்சியாகவே இருந்தது. இதன் காரணமாக அவர்களின் நாடு நகர மெங்கனும் ஒட்டகங்களைப் பல்கிப் பெருகச் செய்தான் இறைவன். தங்களின் வாள்வலிமையாலும், உடல் வலிமையாலும் அண்டையிலுள்ள பகுதிகளையெல்லாம் வென்றும் ஆண்டும் வந்தனர்.

'ராஸிகா' (உணவளிக்கக் கூடியது)

ஹாஃபிழா (பிரயாணத்தில் பாதுகாப்பு) ஸாபிகா (மழைபொழியச் செய்வது) என்று 3 கல்வுருவங்களை செதுக்கி அவைகளை கடவுளாகக் கருதி வணங்கி வழிபட்டு வந்தனர்.

இறைவன் 700 வருடம் உயிரைக் கைப்பற்றும் 'இஸ்ராயீல்' என்ற மலக்கை அந்த ஆதுக்களிடம் அனுப்பவேயில்லை. எனவே தங்களுக்கு இறப்பே இல்லை என்ற மமதையுடனும், எவரும் தங்களுக்கு நிகரே இல்லை என்று இறுமாப்புடனும் ஆதுக்கள் வாழ்ந்து வந்தனர். இத்தகைய கூட்டத்தினரை நோக்கி ஹூத் (அலை) அவர்களை இறைவன் அனுப்பினான்.

அரண்மனையில் அதுவும் அரசன் ஜல்ஜான் முன்னிலையில் நபி ஹூத் (அலை) ஓரிறை கொள்கையை எடுத்தியம்பி, தொழு உருவங்கள் வெறும் கற்சிலைகளை புறக்கணிக்க வேண்டினர். இதனால் ஆதுக்கள் நபி ஹூது (அலை) அவர்களை அடித்து உதைத்தனர் அவர்களின் உயிர் போய்விட்டதாக எண்ணி 'ஆது' கலைந்துபோன பிறகு நபி ஹீது (அலை) ரொம்பவும் சிரமப்பட்டு வீடு போய் சேர்ந்தார்.

இவர்களின் ஓரிறை கொள்கையை ஏற்று ஜனாதத் இப்னுல் அஸம், மஸீத் இப்னு ஷஹூத், நுகைல் இப்னு கலீ, இப்படியாக 4000 பேர்கள் இணைந்தனர் திரும்பதிரும்ப நபி ஹூது (அலை) ஆது மக்களை ஓரிறை கொள்கைக்கு அழைப்பதும் அதனால் சொல்லமுடியாத துன்பத்தை ஆது மக்கள் நபிக்கு கொடுப்பதும் இறுதியாக ஆது மக்கள் அட்டகாசம் பொறுக்க முடியாமல் இறைவனிடம் நபி ஹூது (அலை) கையேந்தி விட்டார்கள் இந்த செய்கையைக் கண்டு 'ஆது' கூட்டத்தினர் கைகொட்டி சிரித்தனர்.

இறைவன் கரு மேகத்தை அனுப்பியதும் அதைக் கண்டு மன்னன் ஜல்ஜான். "இதுதான் எங்களுக்கு வந்த வேதனையா..? ஹூதே நீங்கள் கூறுவதுபோல் இது மழை மேகமல்ல, காற்றுதானே..? பரவாயில்லை எங்கள் உடல் வலிமைக்கு முன்னர் இந்த சிறுகாற்று என்ன செய்யும்..? எங்களைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் மலை இருக்கிறது.

நான்காவது பக்கத்தில் நாங்கள் ஏழு லட்சம் நபர்களும் மலைபோன்று நின்று கொள்வோம். அதன் பின் காற்று வந்து எங்கே, நுழைந்து எங்களை எப்படி அழிக்கப்போகிறது...? என்று எகத்தாளமாகப் பேசினான்.

இப்போது நபி ஹூது (அலை) அவர்களுக்கு இறைவனிடமிருந்து செய்தி வந்தது. ஹூதே ! நீரும் உம்முடைய தோழர்களும் இவ்விடத்தை விட்டு சென்று 'யன்பூஉ' வுக்கு விரையுங்கள்" என்றான்.

ஒரு ஷவ்வால் மாதத்தின் இறுதி புதன் அதிகாலையில் காற்று வீசத் தொடங்கியது பின் வேகம் கூடிக்கொண்டே போய் சூறாவளியாகவும் மாறியது மறுபுதன் வரை காற்றுத் தொடர்ந்து அடித்தது

"அவர்கள் மீது ஏழு இரவுகளும், எட்டுப் பகல்களும், தொடர்ச்சியாக அதை வீசச் செய்தான். நிச்சயமாக அவர்கள் வேருடன் வீழ்ந்த பேரீச்ச மரங்களின் அடித் தூர்களைப் போன்று, அதில் அடித்து வீழ்ந்து கிடப்பவர்களாய் (அப்பொழுது நீர் அங்கிருப்பின்) அக்கூட்டத்தினரை நீர் காண்பீர்"

குர்ஆன் (69:07)

இந்த எட்டு நாட்களையும் இறைவன் தன் திருமறையில் "அய்யாமுன் நஹ்ஸாத்துன் (தீய நாட்கள்) என்று குறிப்பிடுகிறான். இந்த நாட்களை அரபிகள் அய்யாமுல் அயிஸ் (நிராசையின் நாட்கள்) என்றும் வந்த மேகம் மழையாகப் பெய்யாது காற்றாக மாறியதற்காக அதனை "பபர்துல் அயிஸ் (நிராசையாகும் மேகம்) என்றும் கூறினர்.

'இதுஸபர்' மாதக் கடைசிப் புதன் முதல் அடுத்த புதன் வரையுள்ள நாட்களாகும் என்று நபி (ஸல்) கூறியதாகவும் சொல்லப்படுகிறது. இந்த அடிப்படையில் தான் ஒடுக்கத்துப் புதன் ஏற்பட்டதென்றும் கூறுவர்.

ஆதிகாலத்தின் 'ஆது' மகன் இன்றுள்ள அறிவியலால் அத்தாட்சியாகவும் ஆதாரமாகவும் உள்ளார்.

Recently gas explotion is going in the desert of South east region of Saudi Arabia.

This desert region is called Empty Quarter in Arabic "RAB - UL - KHAALEE": this body has been Found by ARAMCO exploration team.

Which proves that what ALLAH said in QURAN that before the people of AAD nation, and HOOD nation. They were so tall, wide and very power full that they were able to pull out big trees just with the one hand.

But what happen after when they become CRUEL and anti ALLAH, ALLAH subhanahu Taala destroyed them.

ULLEMA KIRAM of Saudi Arabia believes that this body belongs to AAD nation.

Saudi military took over this whole area. And no body is allowed to go in this area except Saudi ARMCO personnel's.

Saudi Government kept it very secret but some military helicopters took pictures from air.

இந்த எலும்புக் கூடு ஆது மக்களை ஆண்ட அரசன் ஜல்ஜானா...? ஷதீத்தா...? ஷத்தாத்தா...? அல்லது ஆது மக்களின் சாதாரண குடிமகனா...? தெரியவில்லை...?

# மாபெரும் தீர்ப்பு.....?

## மோடியின் ஆட்சியில் நடந்த கோரமான கொலைகள்..

### சர்தார்புரா கூட்டுக் கொலை..!

2002 பிப்ரவரி திங்கள் 28 ஆம் நாள் குஜராத் மேஹன்ஷா மாவட்டத்தில் மோடியின் நேரடிப் பார்வையின் கீழ் முஸ்லிம்களைத் துருவி, துருவி தேடி கொலை செய்யும் குரூரம் தொடங்கியது.

அதே மேஹன்ஷா மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்தான் சர்தார்புரா. இங்கே முஸ்லிம்கள் மொத்த மக்கள் தொகையில் பத்து சதவிகிதம் தான். குறிப்பிட்டுச் சொன்னால், 65 முஸ்லிம் குடும்பங்கள் தாம் வாழ்ந்து கொண்டிருந்தன.

இந்த 65 குடும்பங்களையும் கொலை செய்வதற்கு தனியானதொரு திட்டத்தை வைத்திருந்தார்கள் சங்கப் பரிவாரத்தினர்.

இதற்கான திட்டத்தை முன்னமே வகுத்து வைத்திருந்தனர். உண்மையைச் சொன்னால் பல நாள்களுக்கு முன்னரே திட்டமிடப்பட்டவை அதற்கான சாட்சியங்கள் இதோ.

### திட்டமிட்ட கொலைகள்: சாட்சியங்கள்

1999 ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் வெளிவந்த 'கம்யூனலிசம் கோம்பாட்' என்ற பத்திரிக்கையில் ஒரு இனப்படுகொலைக்கு, குஜராத் தயாராகிக் கொண்டிருக்கின்றது என்பதை அதன் ஆசிரியர் 'டீஸ்டா செட்டெல்வாட்' எழுதி இருந்தார். அஃது ஒரு கள ஆய்வு.

குஜராத் - இல் நடந்து கொண்டிருக்கும் முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்புப் பிரச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்திட வேண்டும் என அந்தக் கள ஆய்வில், குறிப்பிட்டிருந்தார்.

இத்தனையுமிருந்தும் மத்திய அரசோ மாநில அரசோ அதைக் கண்டு கொள்ளவில்லை.

2001 ஆம் ஆண்டு, அதாவது குஜராத் இனப்படுகொலைகள் நடப்பதற்கு சரியாக, ஓராண்டுக்கு முன்னர், தான் 1999 இல் எழுதிய கட்டுரையையும் - கள ஆய்வையும் சுட்டிக் காட்டி முஸ்லிம்களை இனப்படு கொலை செய்ய நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன, ஆனால் என்னுடைய எச்சரிக்கையை மாநில அரசோ, மத்திய அரசோ கண்டுகொள்ளவில்லை என்று ஆதங்கப்பட்டார். இனியாவது என்னுடைய எச்சரிக்கையை, ஏற்றுக் கொண்டு நடக்கப் போகின்ற இனப்படுகொலையை தடுங்கள் என உரக்க முழக்கமிட்டார்.

ஆனாலும் மத்திய, மாநில அரசுகள் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

இந்தப் பின்னனியில் தான் 'சர்தார்புரா' படுகொலைகளைப் பார்த்திட வேண்டும்.

### 10 நாட்களுக்கு முன்னர் போட்டத் திட்டம்.

சர்தார்புரா படுகொலைகள் 2002 மார்ச்சு திங்கள் 1 ஆம் நாள்தான் நடைபெற்றன.

இதற்கு பத்து நாள்களுக்கு முன்னர் (பிப்ரவரி 20ஆம் நாள்) சந்தார்புராவில் பஜ்ரங் தளத்தைச் சார்ந்த தலைவர்கள் தொண்டர்கள் ஆகியோரின் கூட்டம் ஒன்று காலையில் நடந்தது. மாலையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தப் பொதுக் கூட்டத்தில், முஸ்லிம்களுக்கு எதிராக இந்துக்களை ஏவிவிடும் அனல்பறக்கும், பேச்சுக்கள் இடம் பெற்றன.

அடுத்த நாள் முதலே முஸ்லிம்களைக் கொலை செய்வதற்கான ஆயுதங்களும் வந்திறங்கின.



அங்கே இருந்த மக்களுக்குப் பகிர்ந்து தரப் பட்டன.

SOURCE : Teesta setalvad interview IN FL : DEC 16, 2011. (TH: 10-11-2011).

வாசகர்கள் இங்கே ஒன்றை நன்றாக கவனிக்க வேண்டும். இந்த ஏற்பாடுகளெல்லாம் கோத்ராவில் ரயில் நிலையத்தில் வைத்து சபர்மதி எஸ்பிரசின் இரண்டு ரயில் பெட்டிகள் எரிக்கப்படுவதற்கு முன் நடைபெற்ற ஏற்பாடுகள். இது நாம் காலாகாலமாகக் கூறிவரும் உண்மையாகிய, குஜராத் கலவரங்கள் நீண்ட நாள்களுக்கு முன்னரே திட்டமிடப்பட்டவை என்பதை மேலும் ஊர்ஜிதப்படுத்துகின்றன. இதை எப்போதும் மறந்துவிடக் கூடாது.



சர்தார்புராவில் நடந்தனவற்றிற்கு வருவோம். சர்தார்புராவில் முஸ்லிம்கள் கூட்டாகக் கொலை செய்யப்படுவதற்கு முந்தைய நாள் பஷீரா பீவி என்ற முஸ்லிம் பெண்மணி அருகிலிருந்த மளிகைக் கடைக்கு பொருள்கள் வாங்கிடச் செல்கின்றாள். அவளுக்கு பொருள்கள் விற்பனை செய்த வியாபாரி "எல்லாப் பொருள்களையும் இன்றே தின்றுவிடுங்கள் நாளைக்கு உங்களால் தின்ன முடியாது" என்று கூறி இருக்கின்றார்.

SOURCE: FRONT LINE : DECEMBER 16, 2011 P.29.

## கொலைகளின் கோரம்:

*2002 பிப்ரவரி 28 ஆம் நாள், காலை 9 மணிக்கெல்லாம் இந்துக்கள் பலர் ஒன்று குழுமினார்கள்.*

இதில் உள்ளூரிலுள்ள இந்துக்களும் உண்டு, வெளியூர்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்துக்களும் உண்டு. இவர்கள் அனைவரும் ஒன்றாய்ச் சேர்ந்து முஸ்லிம்கள், ஹரிஜனங்கள், ராவல்ஸ் ஆகியோருக்கு சொந்தமான பெட்டிகளையும், இதர கடைகளையும் தாக்கவும், தகர்க்கவும், தீயிட்டுக் கொளுத்தவும் செய்தார்கள்.

உடனேயே காவல்துறைக்குத் தகவல்கள் பறந்தன. காவல்துறைவேன் வந்தது. காப்பாற்றப் பட்டோம் என்றே நினைத்தார்கள் பாதிப்பிற்கு உள்ளான முஸ்லிம்கள், ஹரிஜனங்கள், ராவல்கள் ஆகியோர். ஆனால் அனைவரது எதிர்பார்ப்பிற்கும் எதிராக காவல்துறையின் கண்முன்னால் இந்த அநியாயங்கள் தொடர்ந்தன. சற்று நேரம் வேடிக்கை பார்த்துவிட்டு காவல் துறையின் ஊர்திகள் பறந்துவிட்டன. அதன் பின்னரும் கடை எரிப்புகள் தொடர்ந்தன.

மறுநாள் காலையும் இந்துக்கள் ஆயுதங்களுடன் குழுமினர். எரிக்க வேண்டியதையெல்லாம் எரித்த பின்னர், இந்துக்கள் ஏன் கூடுகின்றார்கள்? என்ற வினாவிற்கு விடைதேடிய முஸ்லிம்கள், இவர்கள் நம்மை அழிக்கத்தான் ஒன்று கூடுகின்றார்கள் என்பதை உணர்ந்து காவல்துறை தலைமைக்கண்காணிப்பாளர் ஏ. ஜெஹலாட் - வரை தகவல்களைத் தந்தார்கள். அத்தோடு முந்தைய நாள் தங்கள் உடைமைகளையெல்லாம் அழித்ததையும் முறைப்படி பதிவு செய்தார்கள்.

மாவட்ட காவல்துறை தலைமைக் கண்காணிப்பாளருக்குச் செய்திகள் பறந்தவுடன் அவர் இரண்டு காவல்துறை ஆய்வாளர்களை அனுப்பி வைத்தார். இரண்டு காவல்துறை ஆய்வாளர்களும் குழுமி இருந்த இந்துத் தீவிரவாதிகளைக் கலைந்து போகச் சொல்லவில்லை. குவித்து வைத்திருந்த ஆயுதங்களைக் கைப்பற்றிட வில்லை. மாறாக அமைதி பேச்சு வார்த்தை நடத்தப் போவதாக கூறினார்கள்.

காவல்துறை தலைமைக்கண்காணிப்பாளர் தனது ஆய்வாளர்களிடம் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை அவ்வப்போது கேட்டுக் கொண்டிருந்தார். ஆனால் இந்த ஆய்வாளர்கள், சாக்குப் போக்குகளைப் பதிலாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

மாலை நான்கு மணிக்கு PEACE COMMITTE MEET அமைதி குழுவின் கூட்டம் என்றெல்லாம் காவல்துறை ஆய்வாளர்கள் புருடாவிட்டுக் கொண்டிருந்தார்கள். நான்கு மாதங்களாக மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டிருந்த சர்தார்புராவுக்கு அன்று மாலை காவல் துறையின் வருகையால் மின் இணைப்புக் கிடைத்தது.

நான்கு மணிக்கு அமைதிக் குழு கூட்டம் தொடங்கவிருந்த நேரத்தில் முஸ்லிம்கள் ,ஹரிஜன்கள், ராவல் வகுப்பைச் சார்ந்தவர்கள் அனைவரும் வந்தார்கள்.

அதாவது முந்தைய நாள் பொருளாதார இழப்புகளுக்கு ஆளானவர்கள் அனைவரும் வந்தார்கள். ஆனால் இழப்புகளை ஏற்படுத்திய பட்டேல் இனத்தைச் சார்ந்தவர்களும், பிரஜாபதி

இனத்தைச் சாந்தவர்களும் வரவில்லை.

கிராம நாட்டாமை (சர்பஞ்ச்) பட்டேல் இனத்தைச் சார்ந்தவர் வந்தார். வந்தவர் வேறுபட்டேல் இனத்தைச் சார்ந்தவர் எவரும் வரவில்லை என்பதை கண்டு கொண்டார். பிரஜாபதி இனத்தைச் சார்ந்தவர்கள் யாரும் அமைதி குழுவுக்கு வரவில்லை என்பதையும் கண்டார். அதனால் அங்கே இருந்த காவல்துறை ஆய்வாளர் தப்பித்துச் சென்றிட நிலைப்பட்டார். காரணம் கேட்டபோது, இதோ வந்து விடுகின்றேன். எல்லா பட்டேல்களையும் அழைத்துவருகின்றேன் எனக் கூறி சென்றுவிட்டார்.

பாதிப்புகளை ஏற்படுத்தியவர்கள் வராததால் அமைதி குழு கூட்டம் நடைபெறவில்லை. இதனால் தங்களைப் பேரழிவு பீடிக்கும் என்பதை முஸ்லிம்கள் அறிந்திருந்தார்கள். ஆகவே காவல்துறை கண்காணிபாாளருக்குச் செய்திகளைச் சொல்லிக் கொண்டே இருந்தார்கள்.

## ஊரைவிட்டு வெளியே செல்லும் வழிகள் அடைப்பு:

இதனிடையே ஊரிலிருந்து வெளியே செல்லும் வழிகள் அனைத்தும் அடைக்கப்பட்டு விட்டன என்ற செய்திகள் வந்து கொண்டிருந்தன. ஊரிலுள்ள முஸ்லிம்களும், ஹரிஜனங்களும், ராவல்களும் பீதிவயப்பட்டார்கள்.

அந்த மொத்த சர்தார்புராவிலும் ஒரே ஒரு வீடுதான் பெரிய வீடு. அதன் பெயர் 'ஷேஹ்வாஸ்'. இதனை ஊரிலுள்ளவர்கள் சாதாரணமாகவே "பக்கா ஹவுஸ்" முழுமையான வீடு என்றுதான் அழைப்பார்கள். அந்த வீட்டை நோக்கி எல்லோரும் சென்றார்கள். வீட்டில் 33 குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தஞ்சம் புகுந்தார்கள்.

பட்டேல்கள் அந்த வீட்டை முற்றுகையிட்டு தாக்கிட தயாரானார்கள். ஒரு பெரிய 'ஒயரையும்' இரும்புத் தடியையும் இணைத்து மக்கள் தஞ்சம் புகுந்திருந்த அறையில் போட்டார்கள் மின்சாரம் தாக்கி முஸ்லிம்கள் கருகினார்கள்.

முஸ்லிம்கள் எல்லாம் மின்சாரம் பாய்ச்சித்தான் கொலை செய்யப்பட்டார்கள் என்றுதான் அன்றைக்கு வெளியான பத்திரிகைகள் எல்லாம் எழுதின. ஆனால் இன்றோ எரித்துக் கொலை செய்யப்பட்டார்கள் என்று பொத்தாம் பொதுவாகக் கூறி விடுகின்றார்கள்.

எரித்தும் கொலை செய்யப்பட்டார்கள் என்பது உண்மைதான் மின்சாரம் பாய்ச்சப்பட்ட இரும்புத் தடியை உள்ளே செலுத்தியபின், இன்னும் உள்ளவர்களைக் கொலை செய்ய ஒன்றாக ஒட்டு மொத்தமாக வீட்டைக் கொளுத்திவிட்டார்கள். அந்த வீட்டை மட்டுமல்ல முஸ்லிம்களுக்குச் சொந்தமான எல்லா வீட்டையுந்தான் கொளுத்திவிட்டார்கள். இரவு இரண்டு மணிக்குப்பின் மாவட்ட தலைமைக் கண்காணிப்பாளர் வந்தார்.



வீட்டினுள் ஒரு தாயின் கையிலிருந்து தெறித்த ஒரு குழந்தை குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்தது அதை மருத்துவமனையில் சேர்த்தார். சிலபேர் அங்கே இருந்த 'கபர்ஸ்தானம்' - என்ற இறந்தமுஸ்லிம்களைப் புதைக்கும் புதைகுழியில் பதுங்கிக் கொண்டார்கள். இவர்களையும் மீட்டார்

SOURCE : Crime against Humanity. Vol. I an Enquiry into The Carnage in Gujrat. List of Incidents and Evidences : by Concerned Citizens Tribunali Gujrat : 2002

## உயிர் பிழைத்தவர்களின் நிலை:

இதில் உயிர் பிழைத்தவர்கள் சாத்நகர் என்னுமிடத்தில் தான் வாழ்ந்து வருகின்றார்கள். இன்னும் குஜராத் அரசு இவர்களை எப்படி யெல்லாம் அல்லல்களுக்கு ஆளாக்கிட வேண்டுமோ அப்படியெல்லாம் ஆளாக்கி வருகின்றது.

நீங்கள் ஏன் ஊருக்குத் திரும்பவில்லை என்று கேட்டால் அந்த மக்கள், எங்களவர்களைக் கொலை செய்த பலர் இன்னும் சுதந்திரமாகச் சுற்றிக் கொண்டிருக்கின்றார்கள் அவர்கள் எங்கள் இரத்தத்திற்காக காத்துக் கிடக்கின்றார்கள். காவல் துறையும் அவர்களின் கைகளில் இருக்கின்றது என்று கூறுகின்றார்கள்.

பத்தாண்டுகள் ஆகிவிட்டன. நாங்கள் பட்டினியைப் போக்கிட பக்கத்து கழனிகளில் ரூபாய்

50 க்கு வேலை செய்கின்றோம். அதைக் கொண்டே எல்லாவற்றையும் கவனிக்க வேண்டியதுள்ளது என அழுதுபுலம்புகின்றார்கள்.

அத்தோடு எங்களை அரசாங்கமும் கண்டு கொள்ள வில்லை, முஸ்லிம் அமைப்புகளும் கண்டு கொள்ளவில்லை. நாங்கள் 'மெஹர் கோத்தாரி' என்ற மனித நேயர் கட்டித்தந்த ஒற்றை அறை வீடுகளில் தாம் வாழ்ந்து வருகின்றோம்.



இங்கு ஒரே ஒரு பள்ளிக் கூடந்தான் இருக்கின்றது. அதில் எட்டாம் வகுப்பு வரை தான் இருக்கின்றது. இதனால் எங்கள் குழந்தைகளின் எதிர்காலமும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

உயிருக்குப் பயந்து வாழ்ந்து கொண்டிருக்கும், அந்த மக்களின் பாதுகாப்பை மத்திய பாதுகாப்புப் படை ஏற்றுக் கொண்டுள்ளது. காரணம் நரேந்திர மோடியின் பாதுகாப்பின் கீழ் அவர்களை விட்டால், ஒரே இரவில் அதம் பண்ணிவிட்டுப் போய்விடுவார்.

THE HINDU: 4 NOV : 10,2011: FL : 16, 2011

## தலித்கள் அல்ல:

பொதுவாக ஒரு பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றது. முஸ்லிம்களும் இந்த பிரச்சாரத்திற்குப் பலியாகி விட்டார்களோ என எண்ணிடும் அளவிற்கு அந்தப் பிரச்சாரம் கொடிகட்டிப் பறக்கின்றது.

அது 2002 குஜராத் இனப்படுகொலைகளை முன்னின்று நடத்தியவர்கள் தலித்கள் தாம் என்ற பிரச்சாரமே. இதை வைத்துக்கொண்டு சிலர் நம்மிடம் "நீங்கள் அவர்களுக்கு இஸ்லாத்தை சொல்லி முஸ்லிம்களாக மாற்றி இருந்தால் குஜராத் இனப்படுகொலையிலிருந்து தப்பித்து இருக்கலாம்" என்று பேசுகின்றார்கள்.

இஃது தலித்களுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையே பகையை வளர்க்க திட்டமிட்டுச் செய்யப்படும் பிரச்சாரம். காரணம்.

நாம் மேலே தந்த தகவல்களைக் கவனியுங்கள். சர்தார்புராவில் பிப்ரவரி 28, 2002 அன்று முஸ்லிம்களின் கடைகளையும் ஹரிஜனங்களின் கடைகளையும் அதாவது தலித்களின் கடைகளையும் ஒன்று போலவே அழித்திருக்கின்றார்கள்.

ஆகவே தாக்குதலுக்கும் பொருளாதார அழிவுகளுக்கும் ஆளாகிநின்றிருக்கின்றார்கள் தலித்கள் - ஹரிஜனங்கள். ஆகவே அவர்களே முஸ்லிம்களைத் தாக்கினார்கள் என்பது முழுக்க முழுக்கப் பொய்யான தகவல் என்பதை இதிலிருந்து உணரலாம். இதனை இன்னும் தெளிவுபடுத்தும் விதமாக கொலைகளைச் செய்தவர்கள். பட்டேல்களும், பிரஜாபதிகளும் தான் என்பதும் எல்லோராலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

## முஸ்லிம் அமைப்புகள்:

2002 குஜராத் இனப்படுகொலைகள் நடந்து முடிந்தவுடன் நாடெங்கிலுமுள்ள முஸ்லிம் அமைப்புகள் நிவாரண நிதிகளை வசூலித்தன. குஜராத்தில் நிவாரணங்களைச் செய்து கொண்டிருந்த அமைப்புகளிடம் அவை ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறின.

ஆனால் இப்போது சர்தார்புரா - தீர்ப்பிற்குப் பின் பாதிக்கப்பட்டவர்கள் தந்திருக்கும் தகவல்கள், அந்த நிவாரணங்கள் அந்த மக்களுக்குச் செல்லவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. ஆகவே தடைகள் எங்கே வந்தன? இதில் குஜராத் கொடுங்கோலன் மோடிக்குப் பங்குண்டா? என்பனவற்றை ஆய்வுக்குட்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்கள்

சென்றடைந்திட ஆவன செய்திட வேண்டும். (இன்ஷா அல்லாஹ்).

## வழக்கும் தீர்ப்பும்:

சர்தார்புராவில் நடந்த இனப்படுகொலைகள் குறித்து 28 முதல்தகவல் அறிக்கைகள் பதியப்பட்டன. அவற்றை விசாரிக்கத் துவங்கிய காவல்துறையினர் தாக்கியவர்கள் யாரென்று தெரியாது. கும்பல் தாக்கியது, கும்பல் தாக்கியது என்றே புலன் விசாரணையில் மழுப்பினார்கள்.

உயிரிழந்ததொரு குற்றப்பத்திரிகையே குஜராத் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

அதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி விசாரணையில் கிஞ்சிற்றும் கவனம் செலுத்தவில்லை மிகுந்த அச்சத்தோடு சாட்சியம் சொல்ல வந்த முஸ்லிம்களையும் அலட்சியம் செய்தார்.

இதனால் இந்த வழக்கை குஜராத் நீதிமன்றங்களில் விசாரிக்கக் கூடாது. குஜராத் -க்கு வெளியேயுள்ள நீதிமன்றங்களிலே தான் இந்த வழக்குகள் விசாரிக்கப்பட வேண்டும் என மனுக்களை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள் டீஸ்டா செட்டல்வாட் முதலானோர்.

முன்னாள் குஜராத் காவல்துறை அதிகாரி ஸ்ரீகுமார், டீஸ்டா செட்டல்வாட் போன்ற சமூக ஆர்வலர்கள் ஆகியோர் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகளினால் 2003 இல், உச்ச நீதிமன்றம் இந்த வழக்குகளையும் விசாரணைகளையும் நிறுத்திவைத்தது.

மோடி இந்த வழக்குகள் எந்த நீதி மன்றத்திலும் நடந்திடக் கூடாது என்பதில் மிகவும் குறியாக இருந்தார். அதனால் நீதிமன்றங்களை எப்படியெல்லாம் குழப்பலாமோ அப்படியெல்லாம் குழப்பினார்.

2008 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம், சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்றை நியமித்தது. அதன் தலைவராக ஆர்.கே. இராகவன் என்பவர் நியமிக்கப்பட்டார். இவர் நமது சி.பி.ஐ என்ற மத்திய புலனாய்வுத் துறையில் இயக்குனராகப் பணியாற்றியவர். ஒருபெரும் குழப்பம் என்னவெனில் இவர் இந்துத்துவ சிந்தனையில் அழுத்தமான பிடிப்புள்ளவர்.

குஜராத்தில் நடந்த (2002) இனப்படுகொலைக்கும், மோடிக்கும் நேரடியாகச் சம்மந்த முண்டு என்பதற்கான ஆவணங்கள் இவருடைய கைகளில் சிக்கியபோதெல்லாம் அவற்றைச் சிதைத்தார்.

## மோடியைக் காப்பாற்றிய விசாரணை:

குஜராத் - திலுள்ள குல்பர்க் சொசைட்டி கூட்டுக் கொலையில் இஹ்ஷான் ஜாபரி என்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கொலை செய்யப்பட்டார். அவருடன் இன்னும் 90 நபர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

இந்த வழக்கில், ஒரு பெரும் போரைத் தொடுத்து வருகின்றார் இஹ்ஷான் ஜாபரியின் மனைவி சபியா ஜாபரி. முன்னாள் குஜராத் உளவுத்துறை அதிகாரி சஞ்சீவ் பட் அவர்கள் மோடி 2002, 27 பிப்ரவரி இரவில் தன் வீட்டில் நடத்திய கூட்டத்தில் இந்துக்கள் தங்கள் கோபத்தை முஸ்லிம்களின் மீது காட்டிட அனுமதியுங்கள் என்று கூறியதாகச் சொன்னார்.

இதற்கான அடுக்கடுக்கான ஆவணங்களை உச்ச நீதி மன்றத்திடம் டீஸ்டா செட்டல்வாட் போன்றவர்கள் தந்தபின்பும் அவற்றையெல்லாம் புறந்தள்ளினார் இந்த ஆர்.கே. இராகவன்.

இவரிடந்தான் இந்த சர்தார்புரா கூட்டுக் கொலையையும் விசாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டது.

இதில், குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் மீது கொலைக்கான சான்று இருந்தது என்பதை நிரூபிக்க தந்த ஆவணங்களை அப்படியே இருட்டடிப்புச் செய்தார்.

### ஆர்.கே. இராகவனின் பித்தலாட்டம்.

சர்தார்புரா படுகொலைகள் நடப்பதற்கு 10 நாள்களுக்கு முன்னரே இந்துத் தீவிரவாதிகளின் கூட்டம் ஒன்று நடைபெற்றது என்பதையும், ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டு விநியோகிக் கப்பட்டன என்பதையும், இன்றே சாப்பிட்டுக் கொள்ளுங்கள், என்று ஒரு கடைக்காரன் பஷீரா பீவி இடம் சொன்னதையும் நாம் மேலே பதிவு செய்திருக்கின்றோம். இவையெல்லாம். சர்தார்புரா படுகொலைகள் ஒரு பயங்கர திட்டத்தின் கீழ் தான் நடந்திருக்கின்றன என்பதைத் தான் நிரூபிக்கும்

இதனால் சர்தார்புரா கூட்டுக் கொலையில் குற்றம் சாட்டப் பட்டவர்கள் மீது இந்திய தண்டனை சட்டம் 120பியும் நிரூபணமாகும். இந்திய தண்டனைச் சட்டம் 120 பி நிரூபிக்கப்படுமேயானால் கூட்டுக் கொலைகளைச் செய்த குற்றவாளிகளுக்கு மரண தண்டனையை வழங்கிட வேண்டும்.

இந்த மரண தண்டனையிலிருந்து அத்தனைக் இந்துத்தீவிரவாதிகளையும் காப்பாற்றிவிட்டார் ஆர்.கே. இராகவன். இதனை டீஸ்டா செட்டல்வாட் மெத்த வருத்தத்துடன் சுட்டிக் காட்டியுள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல 'தி இந்து' பத்திரிகையும் தனது தலையங்கத்தில் நாசூக்காக சுட்டிக் காட்டி இருக்கின்றது.

குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் 76 பேர். தண்டனை பெற்றவர்கள் 31 பேர், 42பேர் விடுதலை செய்யப்பட்டனர். ஒருவர் மைனர் என்பதால் அதற்குரிய நீதிமன்றத்தில் வழக்கு நடக்கின்றது, இரண்டு பேர் சந்தேகத்தின் பலன் வழங்கப் பெற்று




விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நீதிபதியே இந்தக் கொலைகள் திடீரென வந்தக் கோபத்தில் நடந்தவை எனக் கூறியுள்ளார். உண்மை அதுவல்ல சர்தார்புரா கொலைகள் ஒரு பெரும் சதியின் நிறைவேற்றம்.

இதனை மேல் முறையீடுகள் மூலம் நாம் நீதி மன்றங்களில் நிரூபிப்போம் என சூளுரைத்துள்ளார் டீஸ்டா செட்டல்வாட். 42 பேர் விடுதலை செய்யப்பட்டதை இந்து பத்திரிகை தனது நவம்பர் 11,2011 தலையங்கத்தில் இப்படிக் கூறுகின்றது. However in a blow to the feeling of the victims, the Court Has Acquitted 42 of Them. பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு பேரிடியாக 42 பேரை நீதிமன்றம் விடுவித்து விட்டது. 11-11-2011 THE HINDU.

ஆனால் பத்திரிகைகள் எல்லாம் இதுதான் இந்திய வரலாற்றில் வகுப்புவாத கொலையில் மிகவும் அதிகமானோர் தண்டிக்கப்பட்ட வழக்கு எனப்பாராட்டுகின்றனர். இதன் மூலம் நீதி கிடைத்துவிட்டது என எல்லோரையும் சமாதானப்படுத்திட முயற்சிகள் நடக்கின்றன.

இல்லை! இஃதோர் நீண்டபோர் அதில் அந்த மக்கள் - சர்தார்புராவிலிருந்து விரட்டப்பட்ட மக்கள் கொலையில் ஈடுபட்ட பலர் இன்னும் சுதந்திரமாகச் சுற்றிக் கொண்டிருக்கின்றார்கள், அவர்கள் எங்கள் உயிரைக் குடிக்க காத்திருக்கின்றார்கள் எனக் கூறியவற்றிலிருந்து, குற்றவாளிகள் அனைவரும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை என்பது தெளிவாகின்றது.

2002 மார்சு 1 இல் சர்தார்புராவிலிருந்து விரட்டப்பட்ட மக்கள் மீண்டும் தங்கள் சொந்த இல்லங்களில் குடி அமர்த்தப்படாத வரை நியாயம் கிடைத்ததாக எடுத்துக் கொள்ள இயலாது

அதுவரை எடுக்கப்படும் எல்லா முயற்சிகளுக்கும் துணை நிற்போம் (இன்ஷா அல்லாஹ்).

## சாவுமுகத்திலும் முஸ்லிம்களின் வீரம்:

சர்தார்புரா கூட்டுப் படுகொலையில் குற்றவாளிகளைத் தண்டிக்க மிகவும் அத்யாவசியமாகத் தேவைப்படுவது கண்ணால் கண்டவர்களின் சாட்சியம்.

இதை உயிர் பிழைத்த முஸ்லிம்கள் தாம் செய்திட வேண்டும் என்ற நிலை. சாட்சியம் சொன்னால் உங்களுக்கு மரணம் நிச்சயம் எனச் சுற்றிச் சுற்றி வந்தார்கள் மோடியின் அடியாட்கள்.

அத்தனையையும் எதிர்கொண்டு, அஞ்சாமல் சாட்சியம் சொல்லி மோடியின் அடியாட்களுக்கே தண்டனைப் பெற்றுத் தந்துள்ளனர் சர்தார்புராவில் உயிரைத் தக்க வைத்துக் கொண்ட முஸ்லிம்கள் - அவர்களைப் பாராட்டுவோம் இந்த வழக்கில் சாட்சியம் சொல்லிட வந்தவர்கள் பட்ட கஷ்டங்களைக் கூர்ந்து கவனித்து இந்து பத்திரிகை அதையும் தனது 11-11-2011 தலையங்கத்தில் சுட்டிக் காட்டுகின்றது இப்படி.

அதாவது 17 வது சட்ட ஆணையம் சொன்ன சாட்சியம் சொல்பவர்களைப் பாதுகாக்கும் சட்டவரைவு சட்டமாக ஆக்கிட வேண்டும். அதை மத்திய அரசு சில இனம்புரியாத காரணங்களுக்காக கிடப்பில் போட்டுள்ளது.

'தி இந்து' 11-11-2011 தலையங்கம்.

இந்த மக்கள் தன் சொந்த இல்லங்களுக்குச் செல்ல துஆ செய்வோம் இன்ஷா அல்லாஹ்.

**எம்.ஜி.எம்.**

# ஐரோப்பாவின் பெரும் போரும் இஸ்லாமிய எழுச்சியும்.

## (2001 நவம்பர் முதல் - 2011 டிசம்பர் வரை பத்து ஆண்டுகள்.)

## நவீன சிலுவை யுத்தத்திலும் இஸ்லாமே வென்றது...?



இந்த பூமிப் பந்தில் அமெரிக்கா தன் மொத்த ஆதிக்கத்தையும் நிலைநாட்டிட தீட்டிய திட்டங்கள் பத்து ஆண்டுகளைக் கடந்து விட்டன.

அமெரிக்கா தான் தீட்டிய திட்டங்களுக்குப் பல்வேறு பெயர்களை வைத்தது அவை.

1. PROJECT FOR NEW AMERICAN CENTURY.
   புதிய அமெரிக்க நூற்றாண்டுத் திட்டம்.
2. CLASH OF CIVILIZATION AND THE REMAKING OF WORLD ORDER.
   கலாச்சாரங்களின் மோதல்களும் புதிய உலகின் உருவாக்கமும்.
3. MODERN CRUSADE.
   நவீன சிலுவை யுத்தம்.
4. FAULT LINE WARS.
   இஸ்லாமிய நாடுகளைத் தாக்குங்கள் மோதவிட்டு அழிப்போம் மீதியை நாம் அழிப்போம்.
5. GLOBAL WAR ON TERROR (GWOT).
   தீவிரவாதத்திற்கு எதிரான உலகளாவிய யுத்தம்.

இப்படிப் பல்வேறு போர்களை இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் பிரகடனப்படுத்திற்று அமெரிக்கா.

இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் திணிக்கப்பட்ட இந்தப் போருக்கான திட்டம் வெகுநாள்களுக்கு முன்னரே தீட்டப்பட்டு விட்டது.

ஆனால் மொத்த உலகமும் செப்டம்பர் 11, 2001 அன்று அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் இடிக்கப்பட்டப் பின்னர்தான், இதற்கான திட்டம் தீட்டப்பட்டதாக நம்பிக் கொண்டிருக்கின்றது. ஆனால் ஆய்வாளர்கள் ஆய்ந்தெடுத்துத் தந்த இந்தத் தகவல்கள் முழுக்க, முழுக்க நமக்கு வேறொரு உண்மையை வெளிச்சம் போட்டுக்காட்டிக் கொண்டிருக்கின்றன.

இந்தத் திட்டங்கள் 1915 முதலே போடப்பட்டு விட்டன என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

இந்த வரலாற்றை அதன் அனைத்து நுணுக்கங்களோடும் வைகறை வெளிச்சம் வாசகர்களுக்குத் தந்து வந்திருக்கின்றோம்.

இந்த இதழில் 2001 -இல் இஸ்லாமிய உலகை அச்சத்தாலும், பீதியாலும் ஆட்டிப் படைத்து அழிக்கப்போகின்றோம் என சண்டைப் பிரகடனம் செய்த அமெரிக்கா, அதற்குப் பக்கத் துணையாக பரிவாரங்களை அனுப்பி பணிவிடை செய்த ஐரோப்பிய நாடுகள், இவை சாதித்தது என்ன என்பதை ஓர் ஆய்வுக்கு உட்படுத்துகின்றோம்.

## 2001 - 2011 வரை நடந்தது என்ன?

இந்தப் பத்து ஆண்டுகளில் அமெரிக்கா இஸ்லாமிய உலகை ஆக்கிரமித்து அவற்றில் மேலை நாட்டுக் கலாச்சாரத்தை - சுருக்கமாகச் சொன்னால் கிருஸ்தவத்தைத் திணிப்பதில் ஒரு மகத்தான வெற்றியைப் பெற்றிருக்க வேண்டும்.

பொட்டில் அறைந்தாற்போல் சொல்லிட வேண்டும் என்றால். இஸ்லாமிய உலகில் ஒரு தலைமுறை தோன்றும் அதில் வாழும் இளைஞர்கள் கிருஸ்தவர்களாக இருப்பார்கள்.

இந்த இளைஞர்கள் தங்களுக்கிடையே பேசிக்கொள்ளும் போது எங்கள் தாத்தா முஸ்லிமாக இருந்தார் எனப் பேசிக்கொள்வார்கள்.

*9-11-2001* என அடையாளப்படுத்தப்படும் நாள்களுக்குப் பின் முஸ்லிம் உலகில் ஆக்கிரமித்த பகுதிகளில் கிருஸ்தவப் பிரச்சாரமே கொடிகட்டிப் பறந்தது.

ஆக்கிரமித்த நாடுகளான ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் பைபிளின் வசனங்கள் பொறித்த துப்பாக்கிகளைத்தான் அமெரிக்க - ஐரோப்பியப் படைகள் பயன்படுத்தின. அவற்றைப் பற்றி அந்த வீரர்களிடம் கேட்டபோது அவர்கள் இப்படிப் பதில் சொன்னார்கள்.

" IT IS A MISSION FROM GOD. NOT FROM OUR GOVERNMENT" இது (ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்பு) எங்கள் கடவுள் எங்களுக்குத் தந்த இலட்சியம். அல்லாமல் எங்கள் அரசாங்கம் எங்களுக்குத் தந்த இலட்சியம் அல்ல . ( AL JAZEERA 5 MAY 2009 FOOTAGE).

"ஈராக் - கினுள் ஏன் படையெடுத்துச் சென்றாய். நீ சொன்னது போல் பேரழிவு ஆயுதங்கள் (WMD) "WEAPONS OF MASS DESTRUCTION) எதுவும் சதாம் ஹூஸைனின் ஈராக் - கில் இல்லையே?" என அமெரிக்காவின் செருப்படி புகழ் 'புஷ்' இடம் கேட்ட போது அவர் சொன்னார் "THE COMMAND IS FROM THE HEAVEN" இந்த உத்தரவு (ஈராக் - ஐ ஆக்கிரமிக்க வேண்டும் என்ற உத்தரவு இறைவனிடம் இருந்து வந்தது).

இதனை இதனினும் விளக்கமாக வைகறை வெளிச்சம் பிப்ரவரி 2010 - இதழில் தந்திருக்கின்றோம். அதேபோல் ஆப்கானிஸ்தான் சென்று தாலிபன்களிடம் சிக்கி வெளிவந்து - அந்தத் தாக்கங்களால் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட யுவான்னி ரிட்லியின் "தாலிபானின் பிடியில்" என்ற நூலிலும் தந்திருக்கின்றோம். வாசகர்கள் அவற்றை அவசியம் படிக்க வேண்டும் என வேண்டுகின்றோம்.

அமெரிக்கா தன் ஆதிக்கத்தை உலகெங்கும் நிலை நாட்டிட திட்டம் வகுத்துத் தந்த சேமுவேல் - பி- ஹண்டிங்டன் இப்படிக் கூறினான். " மேலை நாட்டு நாகரிகம் தான் நாகரிகம், மற்றவையெல்லாம் அநாகரிகம் அவை அழிக்கப்பட வேண்டும்....... இந்த உலகை இரண்டாகத்தான் பிரிக்க வேண்டும் அது "The West and the Rest" மேலை நாடுகள் (ஒருபக்கம்) அல்லாத நாடுகள் மற்றோருபக்கம் "The clash of civilization and the remaking of the World order"

இப்படியெல்லாம் திட்டங்களைத் தீட்டி வந்தவர்களின் நிலை பத்து ஆண்டுகளுக்குப் பின் என்னவாயிற்று.

எந்த இஸ்லாத்தை அழிக்க வேண்டும் எனக் கங்கனம் கட்டி நின்றார்களோ - படைதிரட்டி வந்தார்களோ அந்த இஸ்லாம் இவர்களின் நாடுகளை ஆளும் கொள்கையாக ஆகிவிடும் அமோக வெற்றியை ஈட்டி இருக்கின்றது.

### "SAHRIA THE THERAT TO AMERICA" ஷரீஅத் அமெரிக்காவை அச்சுறுத்துகின்றது.

இப்படியொரு அறிக்கை அண்மையில் வெளிவந்துள்ளது. இந்த அறிக்கை அதாவது 'ஷரீயத் அமெரிக்காவை மிரட்டுகின்றது' என்ற அறிக்கையைத் தயாரித்தது ஏதோ ஒரு தனிமனிதரோ அல்லது ஏதேனும் ஆராய்ச்சி நிறுவனமா? என்றால் இல்லை.


சாமுவேல் ஹன்டிங்டன்

அமெரிக்காவின் இராணுவ தலைமையகம் 'பென்டகன்.' இந்தப் பென்டகன் தான் அந்த அறிக்கையைத் தயார் செய்திருக்கின்றது.

இதில் அங்கம் வகித்தவர்கள் அனைவரும் அமெரிக்காவின் எதிர்காலத்தை மட்டுமல்ல எதிர்வரும் நாள்களில் அமெரிக்கா எங்கெங்கெல்லாம் போர் தொடுக்க வேண்டும் என்பதையெல்லாம் வகுத்துத் தருபவர்கள். அவர்களின் பெயர்களைப் பெட்டி செய்தியாகத் தந்திருக்கின்றோம்.

## ஷரீயத் அமெரிக்காவை அச்சுறுத்த முடியுமா....?

அமெரிக்காவை அச்சுறுத்த வேண்டும் என்றால் அமெரிக்கா செய்து தயாராக வைத்திருக்கும், ஆயுதங்களை விஞ்சிடும் வண்ணம் உள்ள ஆயுதங்கள் அமெரிக்காவை அச்சுறுத்தலாம். அல்லது அமெரிக்காவை விஞ்சும் விஞ்ஞான வளர்ச்சியைப் பெற்ற ஒரு நாடு அமெரிக்காவை அச்சுறுத்தலாம். ஆனால் ஷரீயத் எப்படி அமொரிக்காவை அச்சுறுத்த முடியும்?

'400' பக்கங்களைக் கொண்ட பென்டகனின் அறிக்கை சொல்கிறது ஷரீஅத்தால் அமெரிக்கா அச்சப்பட்டு நிற்கின்றது என்று.

ஆமாம் ! அமெரிக்காவில் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் மார்க்கம் இஸ்லாம் ! அமெரிக்காவில் இஸ்லாம் வேகமாக வளருவதற்குக் காரணம், அமெரிக்காவில் சென்று குடியேறிய முஸ்லிம்கள் அல்ல. மாறாக அமெரிக்க மக்களே இஸ்லாத்தை அதிக அளவில் ஏற்று வருகின்றார்களாம்.



இந்த மக்கள் அமெரிக்காவின் மேலை நாட்டு நாகரிகத்தை தூக்கி வீசிவிட்டு இஸ்லாமிய நாகரிகத்தையும், இஸ்லாமியப் பண்பாட்டையும் விரும்பி பின்பற்றி வருகின்றார்களாம்.

இந்த முஸ்லிம்-அதாவது அமெரிக்க மக்களாகிய பெருகி வரும் முஸ்லிம்கள் - ஷரீஅத் சட்டங்கள் தாம் நமது வாழ்வின் பிரச்சனைகளைத் தீர்த்திடும் வல்லமை பெற்றவை. ஷரீஅத் ஐ முழுமையாகப் பின்பற்றிடும் போதே வாழ்க்கை இயற்கையோடும், மனிதனின் இயல்போடும் ஒத்துப்போகும் என்பதை உளப்பூர்வமாக நம்புகின்றார்கள். ஆகவே இனி ஷரீஅத் சட்டங்களே அமெரிக்க குடிமக்களாகிய நம்மை ஆண்டிடும் சட்டமாக ஆகிவிட வேண்டும் என விரும்புகின்றார்களாம்.

வெறுமனே விரும்புவதோடு நின்று விடவில்லையாம் அதற்காக அவர்கள் தங்களால் இயன்றதையெல்லாம் செய்து கொண்டிருக்கின்றார்களாம். இதனால் நடப்பிலிருக்கும், அமெரிக்க அரசியல் சாசன மரபுகள் வெளியேற்றப்பட்டு அந்த இடத்தில் ஷரீஅத் சட்டங்கள் அமர்ந்து கோலோச்சுமாம்.

இப்படியெல்லாம் அமெரிக்காவின் எதிர் காலத்தைக் கணிக்கும் பென்டகன் - என்ற அமெரிக்க இராணுவத்தின் அறிக்கை, இன்னொன்றையும் குறிப்பிடுகின்றது. அமெரிக்காவுக்கு கொள்கை வகுத்துத் தந்தவர்கள் ஒரு பெரும் தவறை செய்து விட்டார்களாம் அது.

## வெளி உலகையே

உலகமெல்லாம் தீவிரவாதத்திற்கு எதிராகப் போர் தொடுக்கின்றோம் என அல்லும், பகலும் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள், அமெரிக்காவினுள் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை காணத்தவறி விட்டார்கள்.

உண்மையில் அமெரிக்காவின் தீவிரவாதத்திற்கு எதிரான போர் Global War on Terror (GOT). இஸ்லாத்திற்கு எதிரான போர்தான் இதை நாம் அடிக்கடி வாசகர்களுக்கு நினைவுபடுத்தி வந்திருக்கின்றோம். ஆனால் நமது ஊடகங்கள் இப்போது தான் அந்த உண்மையை ஒத்துக் கொள்ளுகின்றன. ஆனாலும் சாக்குப்போக்கான சொற்களையே இதற்குப் பயன்படுத்துகின்றன.

எடுத்துக்காட்டாக பத்து ஆண்டுகளுக்குப்

பின் (அதாவது 2001 - 2011 வரை) அமெரிக்காவின் நிலையை விவரிக்க வந்த பிரண்ட் லைன் ஏடு இப்படிக் குறிப்பிடுகின்றது. "The World has Paid a heavy Price for the United States global war on terror in the ten year after the al-Qaida attack of sept 11, 2001.

அதாவது பத்தாண்டுகளுக்குப் பின் செப்டம்பர் 11, 2001 அல் கொய்தா தாக்குதலுக்குப் பின் உலகம் ஒரு பெரும் விலையைத் தந்திருக்கின்றது அமெரிக்காவின் தீவிரவாதத்தற்கு எதிரான உலகளாவிய போரில்,

அல்கொய்தா என்ற அமைப்பு அமெரிக்காவின் கம்யூட்டர்களில் தான் இருக்கின்றது நிச்சயமாக அது உலகில் இல்லை. பத்து ஆண்டுகளுக்குப் பின்னர். அமெரிக்க குடிமக்களுக்கு நன்றாகப் புரிந்துவிட்டது 9/11 என்பது நமது உளவுத்துறையினரின் கைவிருப்பு. இஃது உலகில் ஒரு பெரும்போரை - நவீன சிலுவை யுத்தத்தை - நாகரிகங்களின் மோதல் - அமெரிக்க நூற்றாண்டிற்கான திட்டத்தை தொடங்குவதற்கு தமது நாடு செய்த ஏற்பாடு 9/11 என்பது.

பிரண்ட்லைன் ஏடு, பத்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் அமெரிக்காவின் உலகளாவிய போர் எனக் குறிப்பிடுகின்றது. இப்போதுதான் அமெரிக்கா பத்து, ஆண்டுகளாக இஸ்லாமிய உலகின்மேல் ஒரு பெரும் போரை தொடுத்துக் கொண்டிருக்கின்றது. இன்னும் பல உண்மைகளை ஒத்துக் கொள்வதற்கு இன்னும் ஒரு பத்தாண்டுகள் ஆகலாம் இதையும் காத்திருந்துதான் சொல்லிட முடியும்.

இந்தப் பெரும் போரின் இறுதியில், அமெரிக்காவினர் உலகிலிருந்து இஸ்லாத்தைத் துடைத்திட இயலவில்லை. மாறாக, அது இஸ்லாத்தின் கைகளுக்கு வந்துகொண்டிருக்கின்றது இப்போது பென்டகனின் - அமெரிக்க இராணுவ தலைமையகத்தின் ஒரு பகுதியினர் தங்களுடைய முழு கவனத்தையும் ஷரீஅத் - இன் பக்கம் திருப்பி இருக்கின்றார்கள்.

விளக்கமாகச் சொன்னால் ஷரீஅத் சட்டங்களை மக்கள் மன்றத்தில் பெரும் பேய் எனக் காட்டிட முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றார்கள்.

"The legal, political - military doctrine known with Islam as shariah"

அதாவது ஷரீஅத் சட்டம், அரசியல் - இராணுவம் இத்தணையையும் உள்ளடக்கியது. இதனைத்தான் இஸ்லாத்திலுள்ள ஷரீஅத் என அழைக்கின்றார்கள்.

இப்படி அனைத்தையும் உள்ளடக்கிய ஷரீஅத் ஒரு "Totalitarian threat" அதாவது சர்வாதிகார ஆபத்து என பூதாகரப்படுத்துகின்றார்கள்.

(source : Preface Sharia the threat to America).

## ஷரீஅத் - ஐ ஏன் இவர்கள் ஒரு சர்வாதிகார ஆபத்து என்கின்றார்கள்?

இந்தக் கேள்விக்கு இந்த 400 பக்க பென்டகன் ஆய்வில், இப்படி விளக்கம் கிடைக்கின்றது.

"ஷரீயத் என்ற சொல்லை, (இதுதான்) பாதை என மொழிபெயர்க்கின்றார்கள். உண்மையில் ஷரீஅத் என்பது ஓர் முழுமையான சட்ட வடிவம் என்பது மட்டுமல்ல அது ஓர் முழுமையான அரசியல் அமைப்பும் கூட. ஷரீஅத் என்பதில் ஆன்மீகம் நிச்சயமாக உண்டு. அதை வைத்துக் கொண்டு அது மேலை நாட்டில் புழக்கத்திலிருக்கும் மதம் என்ற அர்த்தத்தில் அதை எடுத்துக்கொள்ளக் கூடாது. நாம் மதம் எந்தத் துறைகளிளெல்லாம் தலை இடக்கூடாது என நினைக்



கின்றோமோ அந்தத் துறைகளில் புகுந்து அவற்றையெல்லாம் நெறிப் படுத்துகின்றது ஷரீஅத். பொருளாதார துறை, சமூகவியல் இராணுவம், சட்டம், அரசியல் ஆகிய எல்லாத் துறைகளுக்கும் ஒன்றாக வழிகாட்டுகிறது ஷரீஅத் என்கிறார்கள்.

மேலை நாட்டவர்களைப் பொறுத்தவரை அரசியல் வேறு ஆன்மீகம் வேறு. ஆன்மீகம் மனிதனின் தனிவாழ்க்கையோடு முடங்கிக் கிடந்திட வேண்டும். அது எந்த நிலையிலும், அரசியலிலோ, மனிதனின் இதர விஷயங்களிலோ தலைஇட்டு விடக் கூடாது.

ஆனால் இஸ்லாம் வாழ்வின் எல்லாத் துறைகளுக்கும் வழிகாட்டும் மார்க்கம், இதை அமெரிக்கர்களால் பொறுத்துக் கொள்ளமுடிய வில்லை. அவர்களின் கருத்துப்படி ஷரீஅத் அமெரிக்காவின் அரசியல் வாழ்க்கையில், பணத்தைச் சேர்ப்பதில், செலவு செய்வதில் (பொருளாதாரம்) மனிதனின் ஒழுக்கம் இவற்றில் தலை இடக் கூடாது.

### 9/11 தாக்குதல் மறு ஆய்வு தேவை அமெரிக்க திரைப்பட நடிகர் சார்லிஷின் கோரிக்கை.

அமெரிக்காவின் புகழ்பெற்ற திரைப்பட நடிகர் "சர்லிஷீன்" இவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் 9/11 என்று அடையாளப்படுத்தப்படும், அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களின் தகர்ப்பு அமெரிக்க உளவுத் துறையின் உள்ளிருப்பு வேலை என தாம் நம்புவதாகவும் அதனால் 9/11 பற்றிய மறு ஆய்வு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றும் அமெரிக்க அதிபர் ஒபாமாவைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

9/11 புஷ் அரசாங்கத்தின் கையிருப்பு எனப் பகிரங்கமாகக் குறிப்பிட்டுள்ளார். வெறும் அறிக்கை விடுத்துக் கொண்டிருக்காமல், ஒரு குறும்படம் ஒன்றையும் தயார் செய்துள்ளார். அதற்கு பெயர் "அமெரிக்கா அதிபருடன் 20 நிமிடங்கள்" இதை அமெரிக்க மக்கள் அதிகமாகப் பார்த்தார்கள் பாராட்டினார்கள்.

இந்த உற்சாகத்தால் ஊட்டம் பெற்ற சார்லிஷீன் வீடியோக்கள் வழி அதிபர் ஒபாமாவிடம் ஒரு மறு ஆய்வுக்கு உத்தரவிடும் படி கேட்டுக் கொண்டார். இந்தப்படத்தை "You Tube" வழியாகவும் பார்க்கலாம்.

"அரசாங்கம் பொய்களை தொடர்ந்து சொல்லி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. உண்மையைச் சொல்பவர்களின் வாயையடைக்க. லஞ்சம் தரப்படுவது 9/11 விவகாரத்தில் மக்கள் உண்மையை அறிந்து வருவது அரசை உலுக்கி இருக்கின்றது என்பதையே காட்டுகின்றது"

– சார்லிஷீன்

http/ www. dc. epaper. com

எம்.ஜி.எம்

ஷரீஅத் இவற்றிற்கும் சேர்த்து வழிகாட்டுவதால் அஃது அமெரிக்காவை ஆளும் கொள்கையாக ஆகிவிடக் கூடாது என்கின்றார்கள்.

## சர்வாதிகார ஆட்சி முறையா - ஷரீயா?

பென்டகன் என்ற அமெரிக்க இராணுவ தலைமையகம் ஷரீஅத் ஆட்சியை டோட்டாலிட்டேரியன் ஆட்சிமுறை என்றழைக்கின்றது. இந்த டோட்டா லிடேரியன் என்ற சொல்லுக்கு சர்வாதிகார ஆட்சிமுறை அல்லது ஒரே ஒரு கட்சியின் ஆட்சி என்றெல்லாம் பொருள் உண்டு. சர்வாதிகார ஆட்சிமுறைக்கும் இஸ்லாத்திற்கும். எந்தச் சம்மந்தமுமில்லை. அப்படி இருக்க அமெரிக்க இராணுவ தலைமையகத்தின் ஆய்வாளர்கள் அந்தச் சொற்களை ஏன்பயன்படுத்துகின்றார்கள்.

இதை நாம் ஆழ்ந்து பார்த்தால் அவர்கள் "ஷரீஅத்" என்ற சொல்லை பூதாகரப்படுத்தவே இந்தச் சர்வாதிகார ஆட்சி என்று பொருள்படும் டோட்டாலிட்டேரியன் சிஸ்டம் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார்கள். உண்மையில் அவர்களே (பென்டகன் ஆய்வாளர்கள்) ஷரீஅத் ஒரு சர்வாதிகார திட்டம் என்பதை நம்பவில்லை.

அவர்கள் டோட்டாலிட்டேரியன் சிஸ்டம் என ஷரீஅத் சட்டங்களைக் குறிப்பிடுவதற்குக் காரணம் ஷரீஅத் சட்டங்கள் மனித வாழ்வின் எந்தப் பகுதியையும் விட்டுவைத்திடாமல், எல்லாப் பகுதிகளுக்கும் வழிகாட்டுகின்றன. மனித வாழ்வின் எல்லாப் பகுதிகளுக்கும் விதிவகுத்துத் தருகின்றன. அதாவது ஷரீஅத் சட்டங்கள் ஒரு முழு வாழ்க்கைத் திட்டம் என்பதுதான்.

உண்மையில் ஷரீஅத் வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் ஓர் வழிகாட்டி என்பதை நாம் பென்டகனின் அறிக்கையிலிருந்து பாங்குற தெரிந்து கொள்ளலாம்.

## வரக்கூடாதா ஷரீஅத் சட்டங்கள்?

பென்டகன் என்ற அமெரிக்க இராணுவ தலைமையகம், ஷரீஅத் சட்டங்கள் அமெரிக்காவில் தலைதூக்கிட அனுமதிக்கக் கூடாது என்ற பிரச்சாரத்தை வேகப்படுத்திட ஷரீஅத் சட்டங்கள் அமெரிக்காவின் அரசியல் சாசன சட்டத்திற்கு எதிரானது என்றொரு முழக்கத்தை முன் வைக்கின்றார்கள். இந்த முழக்கத்தின் வழி அவர்கள், அமரிக்க குடிமக்கள் அனைவரையும் ஷரீஅத் சட்டத்தற்கு எதிராக ஒன்று திரட்டிட முனைகின்றார்கள்.

உண்மையைச் சொன்னால், மொத்த அமெரிக்க மக்களையும், அமெரிக்காவில் வேகமாக வளர்ந்து வரும் இஸ்லாத்திற்கெதிராகத் திருப்பிட தங்களால் இயன்றதையெல்லாம் செய்து வருகின்றார்கள்.

## முஸ்லிம்களை அமெரிக்காவை விட்டு வெளியேற்று:

பென்டகனுக்காக அறிக்கை தயாரித்த அமெரிக்க இராணுவ அதிகாரிகள், இன்னொரு பிரச்சாரத்தையும் செய்யத் தொடங்கி இருக்கின்றார்கள்.

ஷரீஅத் - சட்டங்கள் அமெரிக்காவின் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் இடத்தைப் பிடித்து விடாமல் நாம் தடுத்திட வேண்டும் என்றால் முஸ்லிம்களை வளரவிடாமலும், எந்த செயல்களிலும் ஈடுபடவிடாமலும் தடுத்தாக வேண்டும்.

காரணம் முஸ்லிம்கள் இருந்தால் அவர்கள் நிச்சயமாக ஷரீஅத் சட்டங்களை அமெரிக்காவில் நிலைநாட்டிட எல்லா முயற்சிகளையும் மேற் கொண்டு வருவார்கள். காரணம் அது முஸ்லிம்களின் கடமை என்கின்றார்கள் பென்டகனின் இராணுவ ஆராய்ச்சியாளர்கள்.

அதை அவர்களின் சொற்களில் சொன்னால்,

"Sharia is an inmutable compulsory system that Muslims are Obliged to mistall and the world required to adopt them, fail to do so being deemed a damnable offence against Allah".

ஷரீஅத் முறை என்பது ஓர் கட்டாய முறை. அதனை நிலைநாட்டுவது முஸ்லிம்களின் கடமை. இந்த உலகம் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஷரீஅத் - ஐ நிலைநாட்டிட தவறுவது, முஸ்லிம்கள் அல்லாஹ்வுக்கு எதிராகச் செய்யும் கண்டனத்திற்குரிய குற்றம் "

## "Sharia The Threat to America"

முஸ்லிம்கள் இருந்தால் அவர்கள் கட்டாயம் நிறைவேற்றியே தீர வேண்டிய கடமையாகிய ஷரீஅத் -ஐ நிலைநாட்டிடும் கடமையை நிறைவேற்றிட முயற்சி செய்வார்கள். ஆகவே அவர்களை என்ன செய்வது...?




இப்படியும் ஓர் ஆலோசனையை நடத்தி இருக்கிறார்கள் பென்டகன் அதிகாரிகள்.

இதில் பல ஆலோசனைகள் வைக்கப் பட்டுள்ளன. அவற்றுள் முக்கிய மானவை ஒன்றை இங்கே தருகின்றோம்.

கம்யூனிஸ்ட்டுகள் என்ற பொதுவுடைமைவாதிகள் அமெரிக்காவில் தலையெடுத்த போது, அவர்களை நாடு கடத்தும், திட்டம் ஒன்று தீட்டப்பட்டு, அவர்கள் மீது இராஜதுரோகம் குற்றத்தைச் சுமத்தி நாடு கடத்தினார்களாம் அமெரிக்கர்கள்.

அதேபோல் முஸ்லிம்களையும் செய்து விடலாமா என்றொரு ஆலோசனை. இந்த ஆலோசனைக்குச் செயல் வடிவம் கொடுத்திடலாமா? எனக்கேட்டபோது. பென்டகன் அதிகாரி ஒருவரே இப்படிப் பதில் சொல்லி இருக்கின்றார்.

> இப்போதுள்ள நிலையில் அமெரிக்காவில் வாழும் முஸ்லிம்களை நாடுகடத்திட இயலாது காரணம் அமெரிக்க குடிமக்கள், அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அது அவர்கள் உரிமை. நமது அரசியல் நிர்ணயச் சட்டம் இந்த உரிமையை வழங்கியிருக்கின்றது பாதுகாக்கின்றது.

அடுத்து, முஸ்லிம்களை நாடுகடத்திடும் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படுமேயானால், அதில் நாடு முழுவதும் ஏற்படும் கொந்தளிப்பில், இன்னும் ஏராளமான அமெரிக்கர்கள் இஸ்லாத்தை ஏற்பார்கள். இதனால் நாளை வந்து விடுமோ என அச்சப்படும் "ஷரீஅத்" சட்டங்கள் இன்றே வந்துவிடும் என எதிர் கருத்தைக் கூறி இருக்கின்றார்கள்.

ஏற்கனவே 9/11 தான் அமெரிக்காவில் அதிகமான குடிமக்கள் இஸ்லாத்தின் பக்கம், திரும்பிட காரணமாக அமைந்துள்ளது என்பதையும் எதிர் கருத்தைக் கூறியவர்கள் எடுத்துக் காட்டி இருக்கின்றார்கள்.

இதனால் அமெரிக்கா செய்வதறியாது திணறிக் கொண்டிருக்கின்றது. இப்போதைக்கு ஷரீஅத் - ஐ நிலை நாட்டிட துடிப்பவர்களை இனங்கண்டு அவர்களைச் செயல்பட விடாமல் தடுப்பது என முடிவு செய்துள்ளது.

அமெரிக்க ஆய்வாளர்கள் இன்னொரு உண்மையையும் தாங்கள்

தயாரித்த ஆய்வறிக்கையில் ஒத்துக் கொண்டுள்ளார்கள்.

அது, மொத்த ஐரோப்பாவிலும் வேகமாக இஸ்லாம் வளர்ந்து வருவதைக் குறிப்பிடுவதாகும். அதனை பென்டகனின் ஆய்வு இப்படிக் கூறுகின்றது. Europe will be an Islamic continent by the end of this Century ( page : 29 : Sharia the threat to America Team 'B' Report).

இந்த நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பா ஒரு இஸ்லாமியக் கண்டமாக மாறும் இதையே அண்மையில் ஆங்கில நாட்டில் இடம்பெற்ற ஆய்வு ஒன்றும் கூறியது.

*(பார்க்க வைகறை வெளிச்சம் அக்டோபர் - நவம்பர் 2011 ஆங்கில நாட்டில் இஸ்லாமிய அலை)*

பென்டகனின் இந்த அறிக்கையைப் படிக்கும் போது அல்லாஹ்வின் இறுதி தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் சொன்ன வரிகள் தாம் ஊர்ஜிதப்படுத்தப்படுகின்றது.

இப்புவியின் கிழக்குப் பகுதிகள் மேற்குப் பகுதிகள் அனைத்தையும் அல்லாஹ் எனக்குச் சுருக்கிக் காண்பித்து விட்டான். எதிர்காலத்தில் என் சமூகத்தின் ஆதிக்கம் எனக்குக் காட்டப்பட்ட எல்லாப் பகுதிகளையும் சென்றடையும்.

*முஸ்னத் அஹ்மத் : பாகம் 5, பக் 366.*

## அல்குர்ஆன் பிரகடனப் படுத்துகின்றது.

"அவன்தான், தன்னுடைய தூததை நேரான வழியைக் கொண்டும், சத்திய மார்க்கத்தைக் கொண்டும் அனுப்பி வைத்தான். இணைவைத்து வணங்குவோர் அதனை வெறுத்த போதிலும் (உலகிலுள்ள) எல்லா மார்க்கங்களையும் அந்த சத்தியமார்க்கம் வெல்லும்"

*(9: 32, 33).*

## அமெரிக்காவில் வேகமாக வளர்ந்து வரும் இஸ்லாமிய இயக்கம்...?

அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன், தந்த அறிக்கை இன்னொரு அதிர்ச்சியான தகவலையும் தெரிவிக்கின்றது. அஃது அமெரிக்காவில் வேகமாக வளர்ந்து வரும் இஸ்லாமிய இயக்கம், இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கமாம். (முஸ்லிம் சகோதரத்துவம் Muslim Brotherhood )

இந்த இயக்கம் இதேபெயரில் இயங்க வில்லையாம். மாறாக பல்வேறு பெயர்களில் இயங்குகின்றதாம். பென்டகன் அறிக்கையின் பகுதி 1 பிரிவு 4 முழுக்க முழுக்க இந்த இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தைப் பற்றியே பேசுகின்றது. அத்தியாயத்தின் தலைப்பு The Muslim Brotherhood The Threat Doctrine Operationalised முஸ்லிம் சகோதரத்துவம், அச்சுறுத்தும் கொள்கை செயலில் வந்தது : (பக்கம் 107 முதல் 124 வரை) அதன் பின் இந்த இயக்கத்தவர்கள் மீது தொடுக்கப் பட்ட வழக்குகள் 46 பக்கங்களில் விரிவுபடுத்தப்படுகின்றது. (விரிவஞ்சி அவற்றை விட்டு விடுகின்றோம்.)

இந்த இயக்கம் இதே பெயரில் இயங்கவில்லையாம் இதன் உறுப்பினர்கள் பல்வேறு அமைப்புகளையும், அறக்கட்டளைகளையும் நிறுவி இயக்கிவருகின்றனர். இவை அனைத்தும் அமெரிக்க சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டவை. ஆகவே அமெரிக்காவின் உளவுத்துறையினர். இவற்றைப் பெரிதாக அசைத்திட இயலவில்லை. அவற்றுள் சில கவுன்சில் ஆன் அமெரிக்கன் இஸ்லாமிக் ரிலேசன்ஸ் ஹோலி லேண்ட் பவுண்டேஷன் முதலானவை.

அதேபோல் இந்த இயக்கத்தவர்களின் ஒழுக்கங்களால் அநேக அமெரிக்கர்கள் இந்த இயக்கத்தவர்களின் பணிகளில் தங்களை இணைத்துக் கொள்கின்றார்கள்.

இப்படிச் சொல்லி விடுவதால், இந்த இயக்கத்தவர்கள் எகிப்திலிருந்து வந்தர்கள் என யாரும் எண்ணிவிடக் கூடாது. மாறாக இவர்களும் இவர்களின் மூதாதையர்களும் அமெரிக்கர்கள் தாம். அதாவது அமெரிக்க பிரஜைகளால் நடத்தப்படுபவை தான் இந்த இயக்கமும்,அறக்கட்டளைகளும்.

## அமெரிக்க குடிஅரசு தலைவரின் அவையில் ஆதிக்கம்.

இந்த இயக்கத்தைச் சார்ந்த சிலர் பில்கிளிண்டன் ஆட்சியின்போது அமெரிக்க குடியரசு தலைவரின் அலுவலகத்திலே அதிக செல்வாக்கு உள்ளவராக இருந்தார்களாம்.

குறிப்பாக இந்த இயக்கத்தைச் சார்ந்த அப்துல் ரஹ்மான் அலமொடி (Abdul Rahman Alamoudi ) கிளிண்டன் காலத்தில் அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையில் செல்வாக்கு மிக்கவராக இருந்தாராம். இவர் பல இஸ்லாமிய அறக்கட்டளையின் நிறுவுனர். அமெரிக்க இஸ்லாமிய உறவு கவுன்சிலின் நிறுவன தலைவர். இவர் 1996 முதலே வெள்ளை மாளிகையின் நம்பிக்கைக்குரிய முஸ்லிமாக இருந்திருக்கின்றார்.

இவருடைய முயற்சியில் தான், வெள்ளை மாளிகை இல் ஒரு இப்தார் நிகழ்ச்சியும், ஒரு பெருநாள் சந்திப்பும் நடைபெறும் வழக்கம் நிலைபெற்றதாம்.

இப்போது தான் இவரது முழுப் பின்னனியும் தெரிய வந்ததாம். உடனேயே அமெரிக்க உளவுத்துறையின் ஏற்பாட்டில் பல பொய்வழக்குகள்


அப்துர்ரஹ்மான் அலமொடி




போடப்பட்டு '23' ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கப்பட்டது இப்போது அவர் சிறையில் தாம் இருக்கின்றார் (அல்லாஹ் அவரைப் பொருந்திக் கொள்வானாக ! )

அதுபோன்ற சிறை வாசம், சித்திர வதைகள் இஸ்லாமிய இயக்கத்தவர்களைச் சோர்வுறச் செய்வதில்லை மாறாக இந்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள் இரட்டிப்பு உற்சாகத்தோடு செயல்படுவார்கள், செயல்படுகின்றார்கள்.

கடந்த பத்தாண்டுகளில் இஸ்லாம் உலகை ஆட்கொள்ளும் அளவில் வளர்ந்திருக்கின்றது. இஃது அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் பெற்ற பெருந்தோல்வியின் அடையாளம்.

### 9/11 உலக வர்த்தக மையமும் மஸ்ஜித்தும்.

9/11 என வரலாற்றில் அடையாளப் படுத்தப்படுவது 2011 செப்டம்பர் 11 ஆம் நாள் அமெரிக்காவின் நியூயார்க் நகரின் மன்ஹாட்டன் பகுதியில் WTO உலக வர்த்தக மையம் ஒன்றும் பென்டகன் என்ற அமெரிக்க இராணுவ மையம் தகர்க்கப்பட்டதையுந்தான் குறிக்கும்.

இந்த WTO World Trade Centre உலக வர்த்தக மையம் நின்ற இடத்திற்குப் பக்கத்தில் ஓர் பள்ளிவாசல் 2011 செப்டம்பர் 21 ஆம் நாள் முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

இதனை அமெரிக்காவில் பலர் Ground Zero Mosque கிரவுண்ட் ஜீரோ மஸ்ஜித் என அழைக்கின்றனர். ஆனால் அந்தப் பள்ளிவாசலுக்கு ஏற்பாடு செய்த இமாம் பைசல் அப்துல் ரவூஃப் அவர்களும், ஷரீஃப் அல் ஜமால் அவர்களும் இஸ்லாமியத் தொழுமிடம் என அழைக்கின்றார்கள். இந்தப் பள்ளிவாசல் 4000 சதுரஅடியில் அமைந்துள்ளது.

இந்தப் பள்ளிவாசல் இன்னும் விரிவுபடுத்தப்படும் மொத்தம் 1,20,000 சதுர அடியில் 13 முதல் 15 அடுக்கு மாடி கட்டடம் ஒன்று அங்கே வருகின்றது. அதில் ஒரு தளம் இஸ்லாமிய மையம் என அமைந்திட இருக்கின்றது. இதர தளங்களில், 2001 செப்டம்பர் 11 அன்று உயிரிழந்தவர்களின் நினைவகம் இடம் பெறும். பள்ளிக் கூடங்கள் சமய நல்லிணக்க மையம் என்பவையும் அங்கே அமைய இருக்கின்றன.

இந்த மொத்த கட்டடமும் "கார்டோபா ஹவுஸ்" என அழைக்கப்படவிருக்கின்றது. இஃது ஸ்பெயின் நாட்டை இஸ்லாம் 800 ஆண்டுகள் ஆட்சி செய்த போது உலகக் கேந்திரமாக இருந்த ஸ்பெயின் தலைநகர் ஹார்தோபாவை நினைவு கூறுவதாக உள்ளது. மொத்த திட்டத்திற்கும் (Cardoba Initiative ) ஹார்தோபா இனிடியேட்டிவ் என்று பெயர் வைத்து அழைக்கின்றார்கள் அதற்காக கார்தோபா இனிஷியேட்டிவ் டிரஸ்ட் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புரூக்கிளின் நகரில் பிறந்த ஷெரீப் அல் ஜமால் அவர்கள் "சோஹோ" சொத்துக்கள் என்ற பெயரில் கட்டடம் கட்டும் தொழில் அதிபராக இருந்து வருகின்றார்.

இவர்தான் இந்த 13-15 கட்டடத்திற்கான மொத்தத் திட்டத்தையும் செயல்படுத்திட இருக்கின்றார். இவருக்கு அமெரிக்காவில் 12 கட்டடங்கள் இருக்கின்றன. இவர் இந்த மஸ்ஜித் உள்ளிட்ட கட்டடங்களுக்காக 20 லட்சம் டாலர்களைத் தந்துள்ளார். போட்டுள்ள மதிப்பீட்டின் படி மொத்த கட்டடத்தையும் கட்டிட டாலர்கள் 4.8 மில்லியன் ஆகும்.

இப்போது இந்த மொத்த கட்டடமும் இந்தாலிய நாட்டைச் சார்ந்த தம்பதியருக்குச் சொந்தமான ஒரு ஓர் ஆலை இருந்த இடத்தில் இருக்கின்றது. இந்த ஆலை 9/11 தாக்குதலின் போது தகர்ந்து போனது அதனால் அந்த ஆலையை அந்தத் தம்பதியினர் விற்றுவிட்டார்கள்.

அமெரிக்காவின் 114 மாடி உலக வர்த்தக மையம் இயங்கிக் கொண்டிருந்தபோது அதன் பல்வேறு மாடிகளிலும் முஸ்லிம்கள் தொழுகையை நிறைவேற்றிடும் Prayer Space தொழுமிடங்கள் இருந்தன. உலக வர்த்தக மையத்திற்கு பக்கத்தில் இரண்டு பள்ளிவாசல்கள் இருந்தன. இவையும் 9/11 தாக்குதலின் போது சேதப்பட்டன.

இஃதல்லாமல், உலக வர்த்தக மையம் இருந்த மன்ஹாட்டன் பகுதி முஸ்லிம்கள் பெரும் அளவில் வாழ்ந்திடும் பகுதி. ஜூம்மாத் தொழுகையில் 1000 பேர்வரை கலந்து கொள்வார்கள். இவர்கள் தொழுவதற்கு வசதியாகத்தான் முதற்படியாக 4000 சதுர அடியில் மஸ்ஜித் இயங்கத் தொடங்கியுள்ளது.

தொடங்கிய முதல் நாள் 450 பேர் (செப்டம்பர் 21, 2011 அன்று) தொழுகையில் கலந்து கொண்டுள்ளார்கள்.

## மஸ்ஜித் எதிர்ப்பும் வெற்றியும்.

கிரவுண்ட் ஜீரோ என அடையாளப்படுத்தப் படும் இந்த இடத்தில் ஒரு இஸ்லாமிய மையம், மஸ்ஜித் இவற்றைக் கொண்டு வருவது 9/11 அன்று இறந்தவர்களின் மனங்களைப் புண்படுத்தும் என பலர் கருத்துத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள்.

இதற்கு இமாம் பைசல் அப்துல் ரவூஃப் அவர்களும் ஷரீப் அல்ஜமால் அவர்களும், நாங்கள் யாருடைய மனதையும் புண்படுத்த விரும்பவில்லை மாறாக இஸ்லாத்தைப் பற்றிய உண்மைகளை மக்கள் அறிந்திட வகை செய்யும் விதத்தில் தான் இஸ்லாமிய மையத்தைத் திட்டமிட்டிருக்கின்றோம். அத்தோடு 9/11 அன்று உயிரிழந்தவர்களின் நினைவாக நாங்கள் ஒரு தளத்தையே தரவிருக்கின்றோம் எனக் கூறியுள்ளார்கள்.

அடுத்து இதற்கான பணம் எங்கிருந்து வருகின்றது? என்றொரு கேள்வியை எழுப்பி பிரச்சனைகளை உருவாக்கி இந்த முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு நெருக்கடிகளைக் கொடுத்தார்கள்.

இப்படிப் பணம் பற்றிய புரளியை எழுப்பியவர்கள் வெறும் வெற்றுக் கோஷத்தைப் போடவில்லை. மாறாக ஒரு கணக்கெடுப்பை நடத்தி புள்ளி விபரங்களை மக்கள் மன்றத்தில் வைத்துத் தான் இந்தப் புரளியைக் கிளப்பினார்கள்.



அவர்கள் எடுத்த கணக்கெடுப்பின் படி கார் தோபா இன்ஷியேட்டிவ் டிரஸ்ட் இடம் பணம் இல்லை. மொத்தமாக அந்த டிரஸ்டிடம், 20,000 இருபதாயிரம் டாலர்கள் மட்டுமே உண்டு. ஷரீஃப் அல்ஜமால் என்பவர் பணக்காரர்தான், ஆனால் அவரிடம் இந்த 13 முதல் 15 மாடி கட்டடத்தை எழுப்பி தானம் தரும் அளவில் பணமில்லை. ஆதலால் இந்த 13 - 15 மாடி கட்டடத்தை இவர்கள் வெளியில் நன்கொடைகள் வாங்கித்தான் கட்டுவார்கள்.

அப்படி நன்கொடை தருபவர்கள் அல்காயிதா

இயக்கத்திற்கு பணம் தருபவர்களாக இருந்தால்... அங்கே எழுப்பப்படும் பள்ளிவாசலும், இஸ்லாமிய மையமும் வெற்றியின் அடையாளங்களாகக் காட்டப்படும் வாய்ப்புண்டு என்றார்கள்.

இதற்கும் இமாம் பைல் அப்துல் ரவூஃப் அவர்களும் ஷரீஃப் அல் ஜமால் அவர்களும் பொறுப்பாக பதில் தந்துள்ளார்கள்.

நாங்கள் நன்கொடைகள் வழியாகத்தான் இந்த மொத்தத்திட்டத்தையும் நிறைவேற்றப் போகின்றோம், ஆனால் நாங்கள் அமெரிக்க விழுமங்களை விஞ்சுபவர்களிடமிருந்து பணம் பெறமாட்டோம். அஃதல்லாமல் நாங்கள் யார் யாரிடமிருந்து நன்கொடைகள் பெறுகின்றோம் என்ற முழு விபரத்தையும் நமது அமெரிக்க அரசுக்கத் தருகின்றோம் எனக் கூறுவிட்டார்கள்.

அடுத்து ஒரு அபாரமான குற்றச் சாட்டை எழுப்பினார்கள் அமெரிக்காவில், உலக வர்த்தக மையம் நின்று கொண்டிருந்த இடத்திற்கு அருகாமையில் எழுப்பப்படும் கட்டடத்திற்கு "கார்கோபா ஹவுஸ்" என்று பெயர் வைப்பது சூழ்ச்சி மிகுந்தது.

'கார்தோபா' என்றவுடன் உலக மக்களின் மனங்களில், ஸ்பெயினை இஸ்லாம் வெற்றிகொண்ட வரலாறும் கார்தோபாவில் கீர்த்தி மிக்க உலகக் கல்வி மையம் ஒன்றை நடத்திய வரலாறும்தான் நினைவில் வரும்.

அதேபோல் 9/11 இடத்தில் வரும் கார்தோபா ஹவுஸ் அவர்கள் அமெரிக்காவை அதிர வைத்த வரலாற்றை எழுதும் - என்றார்கள்.

இமாம் பைசல் அப்துல் ரவூஃப் அவர்களும், ஷரீஃப் அல் ஜமால் அவர்களும் இதை மறுத்துள்ளார்கள் எங்கள் நாட்டில் எங்கள் இறைவனை தொழ எங்களுக்கு உரிமை இல்லையா? என்றொரு வினாவை முன்வைத்தபோது எல்லோருடைய வாய்களும் அடைத்துப் போனது. நாங்கள் பள்ளி வாசலைக் கட்டவில்லை என்றால் எங்கள் உரிமையை நாங்கள் விட்டுவிட்டோம் என்று பொருள். ஒரு போதும் நாங்கள் அதைச் செய்ய மாட்டோம் என ஷரீஃப் அல் ஜமால் கூறியுள்ளார்.

ஆனால் அமெரிக்காவில் ஒரு கார்தோபா இல்லம் நம்மை ஸ்பெயினுக்கும் அதன் வெற்றிக்கும் பின்னர் அங்கிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதையும் நினைவுறுத்தும் என்பதில் ஐயமில்லை. இன்ஷா அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்கள் வாக்களித்த படி நாம் மீண்டும் ஸ்பெயினை வெற்றி கொள்வோம்.

இறைவனின் தூதர் அவர்கள் சொன்னார்கள் "ஸ்பெயினிலிருந்தும், பால்கன் பிரதேசங்களிலிருந்தும் இஸ்லாம் இரண்டு தடவைகள் துரத்தப்பட்ட பின்னர் மீண்டும் ரோம் கைப்பற்றப்பட்டு ஐரோப்பாவுக்குள் இஸ்லாம் நுழையும்"

*(நபிமொழி முஸ்னத் அஹ்மத் ஹதீஸ் 6645)*

மொத்தத்தில் அமெரிக்கா - இஸ்லாத்திற்கு எதிரான போரை முன்னின்று நடத்தும் அமெரிக்கா - இஸ்லாமிய மயமாகி வருகின்றது 9/11 கூட இனி ஒரு ஹார்தோபா ஹவுஸ் -ஐ தான் உலகுக்குச் சொல்லும். இன்ஷா அல்லாஹ் அது ஒரு வரலாறு படைக்கும்.

## ஆக்கிரமித்த அமெரிக்கர்களை பிச்சையெடுக்க வைத்த முஜாஹிதுகள்.

டேவிட் செல்ஃபேன் என்ற ஆராய்சியாளரின் கணிப்புப்படி அமெரிக்காவும் அதற்குப் பக்கத்துணையாக நின்ற நேட்டோ நாடுகள் என்ற ஐரோப்பிய நாடுகளும் ஐந்து முனைகளில் இஸ்லாத்தின் மேல் போர் தொடுத்தன.

இஃது அறிவிக்கப்படாமல் நடந்த மூன்றாவது உலகப் போர். இவற்றில் சோமாலியாவில் முதல் தோல்வியைச் சந்தித்தது அமெரிக்கா.

அடுத்து மாபெரும் தோல்வி ஒன்றை ஈராக் - இல் சந்தித்தது. அமெரிக்கா 2003 மார்ச் 19 ஆம் நாள் ஈராக்கின் மேல் தாக்குதல் நடந்த போது "ஆவ் ஷாக்" அச்சமும் பீதியும் என அறிவித்தான் புஷ்.

ஆனால் டிசம்பர் 18, 2011 ஆம் ஆண்டு இரவில் அமெரிக்கப்படைகள். ஈராக்கிலிருந்து வெளியேறி குவைத் - இல் குடியேறின. சில நாட்களில் அமெரிக்கா செல்லவிருக்கின்றன.



பட்டப்பகலில் ஆக்கிரமிப்பை நடத்தி அச்சம் பீதி என்றவர்கள் வெளியேறிட பகலைக் கூட பயன்படுத்திட இயலாத நிலை. திருடர்களைப் போல் நடு இரவில் வெளியேறி இருக்கின்றார்கள் இப்படி உலக ஊடகங்கள் பல அமெரிக்கப் படைகளின் வெளியேற்றத்தைக் கிண்டல் செய்திருக்கின்றன.

கீழே வீழ்ந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல் ஈராக்கில் எங்கள் பணி முடிந்துதான் நாங்கள் திரும்புகின்றோம் என அமெரிக்கா சொல்கின்றது இதனை அரபு ஊடகங்கள் அமெரிக்கா "பொய்யின் திருவிழாக்களை" கொண்டாடிக் கொண்டிருக்கின்றது எனக் கூறியுள்ளன.



போரில் இறந்த அமெரிக்கர்களின் சடலங்கள்

இப்படி இரவில் இருட்டைப் பயன்படுத்திய அமெரிக்கர்கள் அன்று 2003 இல் இரவெல்லாம் ஈராக்கில் குண்டுகளை வீசிக் கொண்டிருந்தார்கள் அதனால் இரவிலும் ஈராக்கின் நகரங்கள் கொழுந்து விட்டு எரிந்தன. அந்த நெருப்பின் ஜீவாலைகளால் இரவும் பகலாய் காட்சித் தந்தது.

இந்தப் பொல்லாத குண்டுவீச்சுகளால் பத்து லட்சம் அப்பாவி முஸ்லிம்கள் இறந்தார்கள். 1500 பெண் முஸ்லிம் விஞ்ஞானிகள் சித்திரவதை செய்யப் பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள்.

அமெரிக்க ஆக்கிரமிப்பிற்கெதிராக, களம் கண்ட வீர முஜாஹித்கள் 6,000 (அமெரிக்க கணக்குப்படி 4,500) அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகளைக் கொன்றார்கள்.

"சாலையோரக் குண்டுகள்" என்ற சொற்களைக் கேட்டால் அமெரிக்கப் படைகள் இப்போதும் அலறியடித்துக் கொண்டு ஓடுகின்றார்கள். முஜாஹித்களின் இந்தக் குண்டுகள்தாம் அவர்களை அதிகமாக அழித்தன.

ஈராக் - இல்தான் அமெரிக்காவின் பொருளாதாரம் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. காரணம் எவ்வளவு செலவு செய்தாலும், ஈராக்கிலிருந்து அதை மீட்டுக் கொள்ளலாம் என அமெரிக்காதிட்டம் போட்டிருந்தது.

அப்போதைய அமெரிக்காவின் அதிபர் புஷ் கூட நான் ஈராக் ஐ ஆக்கிரமித்தபோது, அமெரிக்காவில் பெட்ரோல் ஆறுகள் ஓடும் அதனால் தொழில் வளம் பெருகும், சுவர்க்கம் அமெரிக்கா வரும் என்றெல்லாம் வாக்களித்தார்.

ஆனால் முஜாஹித்கள் தங்களுடைய முதல் வேலையாகக பெட்ரோலை கடத்த உதவி செய்யும் எல்லா "பைப்" களையும் கொளுத்திவிட்டார்கள். இதனால் அமெரிக்கா திணறிப் போய்விட்டது.

அமெரிக்க மக்களே ஈராக் - இல் செலவு செய்த டிரில்லியன் டாலர்களுக்கு பெட்ரோல் வாங்கித்தந்திருந்தால் கூட நாங்கள் நிம்மதியாக வாழ்ந்திருப்போம் எனக் கூறி ஒப்பாரி வைத்தார்கள்.

இன்று அமெரிக்கப் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ந்ததற்கு அல்லது அமெரிக்காவை பொருளாதாரத்தில் வீழ்த்தியதற்கு முக்கிய காரணம் அமெரிக்காவுக்கு எதிராகப் போராடிய வீர முஜாஹித்கள்.

சுருங்கச் சொன்னால் உலகின் ஒரே வல்லரசை அந்த முஜாஹித்கள் வீழ்த்தி இருக்கின்றார்கள். இப்போது டிசம்பர் 31 ஈராக் - இன் சுதந்திர தினம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் வெற்றி

ஆப்கானிஸ்தானுக்கோர் அலாதியான பெருமையை அல்லாஹ் வழங்கியுள்ளான். இந்த உலகில் இரண்டு வல்லரசுகளை நேருக்கு நேர் மோதி வெற்றியைக் கண்டிருக்கின்றனர்.

நாம் தவறாமல் சுட்டிக்காட்டி வருவதைப் போல், ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் வெறும் அமெரிக்காவை மட்டும் எதிர்கொள்ளவில்லை. அவர்கள் நேட்டோ நாடுகள் என்ற 59 ஐரோப்பிய நாடுகளின் படைகளையும் எதிர்கொண்டார்கள்.

ஆனால் இந்த பயங்கர சக்திகளால் இன்றளவும் சாதிக்க முடிந்தவை எதுவுமில்லை. ஆப்கானிஸ்தானை ஆக்கிரமிக்க தொடங்கிய இந்த 10 ஆண்டுகளில், ஐந்து ஆண்டுகளாக அவர்கள் தாலிபான்களுடன், பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றார்கள்.

இந்த 10 ஆண்டுகளாக முஜாஹித்கள் பெற்றுவரும் வெற்றியின் அடையாளமாக, செப்டம்பர் 11 ஆம் நாள் காபூல் உள்ளிட்ட இடங்களை தாலிபான்கள் ஒரு தாக்குலுக்கு உள்ளாக்கி, 20 மணி நேரங்கள் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தார்கள்.

ஆப்கானிஸ்தான் முஜாஹித்களுக்கு அல்லாஹ் வழங்கிய பிரிதொரு மகத்தான வெற்றி என்னவெனில் அவர்கள் 1989இல் 'ரஷ்யா' என்ற வல்லரசை வீழ்த்திய போது "கம்யூனிசம்" என்ற பொதுவுடைமை தத்துவம் உலகில் வீழ்ச்சியை சந்தித்தது. ஐக்கிய ரஷ்ய குடிஅரசு உடைந்து 6 நாடுகள் புதிதாக உருவாயின.

இப்போது அமெரிக்கா என்ற வல்லரசை ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் வீழ்த்தி இருக்கின்றார்கள். 2014இல் முழுமையாக ஆப்கானிஸ்தானை விட்டு நேட்டோ படைகள் வெளியேறிட இருக்கின்றன.

ஆனால் அதற்குள் அமெரிக்கா தன்னை அடையாளப்படுத்திய முதலாளித்துவ கொள்கை வீழ்ந்து போனது.

அதுதான் "ஆக்குபை வால் ஸ்ட்ரீட்" என்ற கோஷம். அதாவது முதலாளித்துவத்தின் வர்த்தக மையமான வால் தெருவிலிருந்து அமெரிக்கா முழுவதும் கொழுந்துவிட்டெரிந்த புரட்சி.

ஆக கடந்த 10 ஆண்டுகளில் அமெரிக்காவும் அது தூக்கிப்பிடித்த முதலாளித்துவமும் வீழ்ந்திருக்கின்றன.

இஸ்லாமிய உலகில் ஏற்பட்ட மக்கள் புரட்சியால் இஸ்லாம் அதனை இலட்சியமாகக் கொண்ட இஸ்லாமிய இயக்கங்கள் அரியணை ஏறி வருகின்றன.

அல்லாஹ்வுக்கே எல்லா புகழும்.

- எம்.ஜி.எம்


# தமிழன் தொலைக்காட்சியில்

# தஃசீருல் குர்ஆன்

வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் மௌலவி. **இல்யாஸ் ரியாஜி** அவர்களின் திருக்குர்ஆன் விரிவுரை வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை இரவு 10.00 மணி முதல் 10.30 வரை ஒளிபரப்பாகிறது. இந்நிகழ்ச்சியை RSD நிறுவனம் நடத்துகிறது.

**தொடர்புக்கு**

**காயல் தர்வேஷ் : 98418 98044**


## இன்னும் ஏமாறுவோம் பந்தயமென்ன? - 2.5 %

# முஸ்லிம்கள் அறைகூவல்.

காங்கிரஸ் அரசு அண்மையில் ஓர் அறிவிப்பை செய்தது. அது சிறுபான்மையினருக்கு 4.5 சதவிதம் பிரத்யேக இட ஒதுக்கீட்டை அரசு பணிகளில் தரப் போகின்றோம் என்பதே !

உடனேயே பி.ஜே.பி பாரதீய ஜனதா கட்சி எதிர்த்தது இதனால் ஒரு பெரும் பரபரப்பு.

உத்திரப் பிரதேசத்தில் பல கட்டங்களாக பிப்ரவரி முதல் நடக்கவிருக்கின்ற தேர்தலை மனதிற்கொண்டு தான் இந்த அறிக்கை.

முஸ்லிம்கள் இந்தப் பரபரப்பில் தாங்கள் ஏமாற்றிக் கொள்ள முடிவு செய்து விட்டார்கள். ஆமாம் மத்திய அரசுக்கு நன்றி சொல்ல தொடங்கி விட்டார்கள்.

உண்மையில் இந்த 4,5 சதவீத இட ஒதுக்கீடு இதர பிற்படுத்தப் பட்டவர்களுக்கு OBC : Other Backward Communites ஒதுக்கப்பட்ட 27 சதவீதத்திலிருந்து தான் அகழ்ந்தெடுத்துத் தரப்படுகின்றது.

இந்த 4.5 சதவீத இட ஒதுக்கீடும் மொத்தமாக முஸ்லிம்களுக்கல்ல - கலைஞர் தம் ஆட்சியில் வழங்கியது போன்ற முஸ்லிம்களுக்கான தனி ஒதுக்கீடல்ல.

காங்கிரஸ் அரசே சிறுபான்மையினருக்கு என்று தான் குறிப்பிட்டுள்ளது. இந்தச் சிறுபான்மையினர் என்ற சொல்லில் பல சமூகத்தவர்கள் அடங்குவார்கள். அவர்கள் சீக்கியர்கள், கிருஸ்தவர்கள், பாரசீகர்கள் கூட்டிக் கழித்துப் பார்த்தால் முஸ்லிம்களுக்க 2.5 சதவிகிதம் கூட தேறாது என்பது தான் உண்மை.

இதுவும் இன்னும் சட்டமாகிவிட வில்லை என்பதை எல்லோரும் உணர்ந்திட வேண்டும்.

எம்.ஜி.எம்.

# நீதியே வெல்லும் அது அநீதியைக் கொல்லும்.

### என்பதற்கு

# நாகர்கோவிலில் ஒரு சாட்சி

"அல் - ஷமீம் காம்பவுண்ட்" இது நாகர்கோவில் மாவட்டம் வெள்ளட்சிவிளை ஆசாத் நகரில் அமைந்துள்ள ஒரு குடியிருப்பு வளாகம்.

இவ்வளாகத்தின் ஒரு வீட்டில் வாடகைக்குக் குடியிருந்தவர் ரஹ்மத்துல்லாஹ் இவருடைய மனைவி ஜாரியத் இவள் அவ்வீட்டில் நீண்ட நாட்களாக உடலை விற்று பணத்தை எண்ணும் நாசகாரப் பணியான விபச்சாரத்தை நடத்திவந்தாள்.

ஒரு நாள் வெள்ளிக் கிழமை (18 - 09 -2009) ரமலான் மாதம் 27 ஆம் நோன்பு வெள்ளிக்கிழமை அன்று ஜாரியத், குனங்குடி பானு, பீச்ரோடு சாந்தி என்ற செல்வி மற்றும் வெட்டூனிமடம் சசிகுமார் ஆகியோர் விபச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நீண்ட நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்பதைப் போல் பல நாட்கள் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் கண்காணித்தும் சொல்லியும் பார்த்தார்கள் பலன் இல்லை. அன்று கையும் களவுமாக அந்தக் கும்பல் மக்கள் கூட்டத்திடம் மாட்டிக் கொண்டது.

காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு கோட்டார் ஆய்வாளர் சார்லஸ் ஜாரியத்தை கைது செய்து அங்கு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த இளைஞர்கள் சில பேரை தனது போலீஸ் வேனில் ஏற்றி ஜாரியத்தைப் பற்றி புகார் கொடுங்கள் என்று கூறி அழைத்துச் சென்றார்.

வழக்கைப் பதிவு செய்து விட்டு வந்துவிடுங்கள் என்று கூறி அழைத்துச் சென்ற ஆய்வாளர் சார்லஸ், அழைத்துச் சென்ற அந்த இளைஞர்கள் மீதே வழக்கை பதிவு செய்தார் இவர்கள் சம்மந்தப்பட்ட வீட்டில் புகுந்து பொருட்களை சேதப்படுத்தினார்கள் தகராறு செய்தார்கள் என்ற பிரிவுகளில் (ஐ.பி.சி 247, 427, 294பி, 323, 452, 506(11) 379) வழக்குகளைப் பதிவு செய்து இருபது நாட்கள் பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைத்தார் அந்த அப்பாவி ஒன்பது இளைஞர்களை.

இந்த வழக்கு இரண்டு ஆண்டுகளாக நாகர்கோவில் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. நீதியே வெல்லும் அது அநீதியைக் கொல்லும் என்பதற்கு எடுத்துக்காட்டாக 12 - 11 - 2011 அன்று இந்த வழக்கு பொய் வழக்கு என்று நீதி மன்றத்தால் நிரூபிக்கப்பட்டு ஒன்பது அப்பாவி இளைஞர்களும் இந்த வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்கள்.

**நீதிமன்றத்தல் விவாதிக்கப்பட்ட சில வாதங்கள்.**

ஜாரியத் தன் புகாரில் மூன்று நபர்கள் எழுதித் தந்துள்ளதாகக் கூறியுள்ளாள்.

காவல் நிலைய எழுத்தாளர்.

மற்றொருவர் எனக்கு யார் என்று தெரியாது.

எனது கணவர்.

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து எந்த சாட்சியும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை.

பணம் கொள்ளை அடிக்கப்பட்டது என்று கூறிவிட்டு பின்பு அது கொள்ளை அடிக்கப் படவில்லை என்று கூறியது.

வீட்டில் பொருள்கள் உடைக்கப்பட்டதாக கூறி வழக்கு பதிவு செய்யப்பட்டது, புகைப்படம் எடுத்த காவலர் ஆபத்து ஏற்படுத்தும் அளவில் எந்தப் பொருளும் உடைக்கப்படவில்லை என்று கூறினார்.

கோட்டார் ஆய்வாளர் சார்லஸ் தான் போட்ட பொய் வழக்கின் வாதத்தின் போது திக்குத் திணறி வரண்ட தொண்டைக்கு எச்சில் விழுங்காத குறையாக முன்னுக்குப் பின் முரணாகப் பேசினார்.

ஆயிரம் குற்றவாளிகள் விடுவிக்கப்படலாம் ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது என்று கூறும் நாடு தான் நம் இந்தியத் திருநாடு. எந்தக் குற்றமும் செய்யாத அப்பாவி இளைஞர்கள் இருபது நாட்கள் சிறை தண்டனையை அனுபவித்து, இரண்டாண்டுகள் பெரும் பேராட்டத்திற்குப் பிறகு தாங்கள் நிரபராதிகள் என்று நிரூபிக்க வேண்டியிருக்கின்றது.

விபச்சாரம் செய்த ஜாரியத்துக்கும், பொய்வழக்குப் போட்ட காவல்துறை ஆய்வாளருக்கும் நீதி மன்றம் எந்தக் கண்டனத்தையும் தெரிவிக்கவில்லை.

**நாகர்கோவில் இருந்து நமது செய்தியாளர்.**

அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும்

# அழைப்பாளர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

## ✷ திருக்குர்ஆன் ✷

இது உலக மக்கள் அனைவருக்கும் வழிகாட்ட
இறைவன் அருளிய வேதம். அதை நமக்குள் முடக்கி வைப்பது பாவம்.

திருக்குர்ஆன் மலிவுப்பதிப்பு ✷
வெளியீட்டகத்தின் மொழிபெயர்ப்பு ரூ 50.

✷ தாருல்ஹுதாவின் வெளியீடான
தமிழின் முதல் மொழிபெயர்ப்பு ரூ 90.

✷ மக்கா ஹரம் ஷரீஃப் இமாம்களின் 'கிராஅத்' தை
நாம் குர்ஆனைப் பார்த்துக் கொண்டேகேட்கும்
வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள,
நவீன தொழில் நுட்பக்கருவியான
'ஸ்பீக்கர்பென் குர்ஆன்' ரூ 2000

✷

**தொடர்புக்கு**

**9710686868, 9940520816**

குறிப்பு: திருக்குர் ஆனை பரவலாக்கும் இந்த முயற்சியை லாப நோக்கத்துக்கு யாரும் பயன்படுத்த வேண்டாம் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.

# இஸ்லாமிய ஆட்சி அமைக்க வழி.

## நபிகளாரின் இறுதி லட்சியம் இஸ்லாமிய ஆட்சி அமைப்பதாகவே இருந்தது.

(மற்ற இஸ்லாமிய கடமைகளெல்லாம் அதற்குள்ளேயே அடங்கிவிடும்)

## முஸ்லிம்களின் லட்சியமும் அதுவாக மட்டுமே இருத்தல் வேண்டும்.

எந்த ஒரு இயக்கத்திற்கும் மிகப்பெரிய இறுதி லட்சியம் இருக்கும் அந்த லட்சியத்தை நோக்கித்தான் முழு மூச்சாக பயணித்து இறுதியில் அந்த லட்சியத்தை அடைவார்கள் நபிகளாரின் இறுதி லட்சியம் இஸ்லாமிய ஆட்சி அமைப்பதாக இருந்தது ( மற்ற இஸ்லாமிய கடமைகளெல்லாம் அதற்குள்ளேயே அடங்கிவிடும்) முஸ்லிம்களின் லட்சியமும் அதுவாக மட்டுமே இருத்தல் வேண்டும், ஆனால் நம் இயக்கங்களின் போக்கைப் பார்த்தால் கோடி ஆண்டுகள் ஆனாலும் இஸ்லாமிய ஆட்சி அமைக்க முடியாததாகவே உள்ளது.

காரணம் நாம் லட்சியமே இல்லாது பயணிப்பது எந்த லட்சியமும் இல்லாமல் கடுமையாக உழைப்பதும் பணத்தையும் வீணடிப்பதும் தான் இறுதியாக நம் உழைப்பிற்கான பலன் என்ன கிடைக்கும் என்று யாரும் என்னிப் பார்த்திருக்க மாட்டார்கள் 4 எம்.எல்.ஏ சீட்டை ஐந்தாக்குவார்கள் பிறகு அது ஜீரோ வாகும் பின்பு 1 நாலாகும் இதுதான் நம் லட்சியமா?

எப்போது தான் இந்த கொடுமைக்கார காபிர்களிடமிருந்து நம் மக்களை காக்கப் போகிறார்கள் என்பதைப் பற்றி எல்லாம் நம்மில் யாருக்கும் அக்கறை இருப்பதாக தெரியவில்லை. யார் வால் பிடித்தாலும் நம்மை ஒழித்துக் கட்டுவதுலேயே தான் குறியாக இருப்பார்கள் என்பது நாம் அனுபவித்த பாடங்கள். அதே பாடத்தை சதா அனுபவிக்கவேண்டுமா என்பதை நம் இயக்கங்கள் சிந்தித்தல் வேண்டும்.

நாம் என்ன செய்ய முடியும் என மூலையில் உட்கார்ந்து புலம்பச் சொல்லவில்லை.

இலகுவாக இஸ்லாமிய ஆட்சியமைக்க பலப்பல வழிகள் இந்தியாவில் உள்ளன. நாம் அதைப் பற்றியெல்லாம் ஒரு கணம் கூட சிந்தித்து அதையே இலட்சியமாக்கி உழைத்திருக்க மாட்டோம் அப்படி லட்சியமமைத்து உழைத்திருந்தால் இன்று இந்தியாவின் பல மாநிலங்களில் இஸ்லாமிய ஆட்சியை அமைத்திருந்திருக்கலாம் லட்சியமே இல்லாமல் உழைத்ததால் நம் உழைப்புகள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகவே போய் விட்டுள்ளது.

## இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சி அமைப்பதற்கான யோசனைகள்

அருகாமையில் உள்ள ஒரு மாநிலத்தை தேர்வு செய்து ஹிஜ்ரத் அடிப்படையில் ஓரிரு மாநிலத்து முஸ்லிம்கள் அனைவரையும் அங்கே குடியமர்த்தும் விஷயத்தில் உழைக்கலாம் 5 அல்லது 10 வருடங்கள் இந்தியா மட்டுமல்ல உலகமனைத்திலும் நம் செல்வாக்கை அசாதாரணமாக உருவாக்க முடியும் என்பதை அரசியல் அறிந்தவர்கள் நன்கு புரிந்திருப்பார்கள்.

இது சாத்தியப்படாது எனக் கூறுபவர்கள் முதலில் சொல்வது மொழிப்பிரச்சனைகள் வரும் என்பதே, மராட்டியும், குஜராத்தியும் மட்டுமே அறிந்த ஜைனர்களால் இந்தியா முழுக்க பரவி வாக்குச்சீட்டுப் பெற்று அங்கேயே நிலைக்க முடியும் ஆனால் முஸ்லிம்களால் பக்கத்து மாநிலத்தில் குடிபெயர்வதால் மட்டும் பெரிய பிரச்சனை வந்திடுமா? யூதர்கள் உலகின் பல பாகங்களிலிருந்து குடி பெயர்ந்து இஸ்ரேலை உருவாக்க முடியு மென்றால் முஸ்லிம்களால் மட்டும் சொந்த நாட்டிலேயே ஒரு மாநிலத்தை அமைக்க கஷ்டமா? எத்தனை காலங்களுக்கு தான் பி.ஜே.பி யை விட மற்ற இந்துக்கட்சியினர் தலித்துகள் உட்பட நம்மை கொடுமைப்படுத்தியவர்கள் என்பதை இன்னுமா நாம் உணராமல் இருக்க வேண்டும்.

இவனுக்கு அவன் பரவா இல்லை அவனுக்கு இவன் பரவாயில்லை என சதா பரவா இல்லை என்று மட்டுமே கணக்குப்போட்டு ஓட்டும் போட்டும் மீளவே முடியா கொடுமைகளிலேயே சிக்கித்தவித்து நம் வாரிசுகளையும் தவிக்க விட்டுவிட்டு போய்விடுவது நாம் செய்யும் மிகப் பெரிய பாவம். இப்படிப்பட்ட திட்டத்தை எத்தனை முறை முஸ்லிம் தலைவர்களோடும் முக்கியஸ்தர்களோடும் ஆலோசனை செய்தீர்கள், முதலில் ஆலோசியுங்கள் ஒத்துக்குவார்களா மாட்டார்களா என்பதை பின்பு பேசலாம் மேலும் ஒற்றுமையே இல்லை

**இந்தியாவின் பல மாநிலங்களில் இஸ்லாமிய ஆட்சியை அமைத்திருந்திருக்கலாம் லட்சியமே இல்லாமல் உழைத்ததால் நம் உழைப்புகள் அனைத்தும் விழலுக்க இறைத்த நீராகவே போய்விட்டது.**

என்பதெல்லாம் நம் கற்பனை மட்டுமே, அதில் உண்மை இருப்பதாக தெரியவில்லை. கல்யாண விருந்தில் மட்டும் எல்லா முஸ்லிம்களும் ஒற்றுமையாய் இருந்து பிரியாணி சாப்பிட முடியும் என்றால் மற்ற விஷயத்தில் மட்டும் ஒற்றுமை ஓடிப்போய் விடுமா?

பாதுகாப்பு குறித்து கேட்கலாம் எல்லா தலைவர்களும் கூடிப்பேசி முடிவெடுத்தால் அது பெரிய விவகாரமாகாது. ஜைனர்கள் மட்டும் பாதுகாப்பாக இல்லையா?

பொருளாதாரத்தைப் பற்றி கேட்கலாம் அதுவும் கூடிப்பேசி ஆலோசிக்க வேண்டிய விஷயம் அதுவும் மிகப்பெரிய பின்னாள் வெற்றிக்காக எவ்வளவு செலவழித்தாலென்ன? உரிய முறையில் பிரச்சாரங்கள் செய்தாலே செலவழிக்கத் தேவையே வராது.

ஆட்சியாளர்களால் மிரட்டல் உண்டாகுமே என்பர் இப்போதில்லாத மிரட்டலா நமக்கு மேலும் வரப்போகிறது. இப்போதெல்லாம் எது நடந்தாலும் உலகமே அறிய வாய்ப்புள்ளது எனவே ஆட்சியாளர்கள் தான் நம்மைப் பார்த்து பயப்பட வேண்டும்.

வேலை வாய்ப்புகள் பறிபோகுமே என்பர் இப்போது மட்டுமென்ன நம் மக்கள் வெளிநாடுகளை நம்பித்தான் உள்ளனர். வியாபாரம் எங்கும் பண்ண முடியும் அப்படியும் சிலப் பல துன்பங்களை நம் நிரந்தர வெற்றிக்காக சகித்துக் கொள்ளத்தான் வேண்டும்.

# மனம் திறந்து ஒரு மடல்

பன்னெடுங்காலமாக சாதிய அடக்கு முறைகளுக்குக் கட்டுப்பட்டு சேரிச் சிறைகளில் வதைபட்டுக்கிடக்கும் தாழ்த்தப்பட்ட இளைஞனின் விடுதலை வேட்கைக்கு, புரட்சிச் சிந்தனைக்கு சிறந்த பாதையாக வெளிச்சமடித்துக் காட்டுகிறது வைகறை வெளிச்சம் நபிகள் நாயம் (ஸல்) அவர்களின் பாதையை

புரட்சிக்கு முன் சாதியை ஒழிக்க அவன் முயலவில்லையானால் புரட்சிக்குப் பின் சாதியை ஒழிக்க அவன் கட்டாயப்படுத்தப்படுவது நிச்சயம் என்று போதித்த புரட்சியாளர் அம்பேத்கர். பார்ப்பனர்களே இந்துக்களின் இயற்கையான தலைவர்கள் அந்தப் பார்ப்பனர்கள் கூலிக்கு மாரடிக்கும் போர்வீரர்களுமல்ல தம் தலைக்கொள்கையான சாதியை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்ற துணிச்சலுடையவர்கள் என்று எச்சரிப்பதிலும் அவர் தயங்கவில்லை.

இந்து மதத்தில் இருக்கும் வரை சாதி அடையாளத்தை உங்களால் அழிக்க முடியாது இம்மதத்தில் இருந்து வெளியேறி மனிதநேயமும் ஒழுக்கமும் உடைய வேறொரு மதத்தை தேர்வு செய்து கொள்ளுங்கள் மதமாற்றம் என்ற 'பதம்' உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் 'புத்துயிர்' என்ற பதத்தை உபயோகித்துக் கொள்ளலாம். அதாவது மக்கள் எல்லாம் புத்துயிர் பெற வேண்டும் என்பதே என் விருப்பம் என்று கூறியதோடு மட்டுமல்ல பௌத்த மதத்தை தழுவி அதனை நிலைநிறுத்திக் கொண்ட பெருமையும் அவரைச் சாரும்.

உள்வாங்கிச் செறித்தல் என்ற கோட்பாட்டை மையமாகக் கொண்ட இந்து மதம். பௌத்தத்தை தன்னுடைய கிளை மதமாக உள்வாங்கிக் கொண்டது பிற்கால வரலாறு. இச்சூழலில், தான் ஒரு மதத்தில் இல்லாமலேயே இருப்பதாக எண்ணிக்கையில் இணைத்து வைத்திருப்பதைத் தவிர்க்க அம்மதத்தில் இருந்து வெளியேறினால் எந்த மதத்தை ஏற்பது என்ற குழப்பம் நிழவும் போது தெளிவுபடுத்தும் பணியாக வைகறை வெளிச்சம் முகம்மது நபிகள் (ஸல்) அவர்களுக்கு ஏக இறைவன் அல்லாஹ் வான்மறை மூலம் வழங்கிய அழகிய திருக்குர்ஆனின் கருத்துக்களை எடுத்துவைத்து சாதியை முற்றாக ஒழிப்பதற்கு இஸ்லாம் தான் ஒரே தீர்வு என்பதை ஆணித் தனமாக கூறுகிறது.

இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டவர்கள் மட்டுமே சாதியற்ற கூட்டமான இஸ்லாமிய மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள் அவர்களின் கடந்த காலம் அடிச்சுவடு தெரியாமல் போய்விட்டது. கடல்நீரில் கரைந்த மழைநீர் போல் ஆகி விட்டார்கள். அந்த தோழர்களைப் பின்பற்றி நானும் என்னை இஸ்லாம் மார்க்கத்தில் இணைத்துக் கொள்கிறேன் எல்லாம் வல்ல ஏக இறைவனை ஏற்றுக் கொள்கிறேன். என்னை இத்தனை காலம் பின்பற்றி, துன்புறுத்தி, கொடுமைகளை விளைவித்து அவமானப்படுத்திய சாதி ஒழிந்தது (அஸ்லாமு அலைக்கும்) என்று சாதி ஒழிப்பில் களத்தில் நின்ற தலைவன் டி.எம். உமர் ஃபாரூக்கின் தன் வரலாற்று நூலான சாதி ஒழிந்தது நூலை தமிழகத்தின் பட்டி தொட்டியெல்லாம் எடுத்துச் சென்று சாதி ஒழிப்பிற்கு இஸ்லாம் தான் ஒரே தீர்வு என்பதை வேர்கள் பதிப்பகமும் வைகறை வெளிச்சமும் மாற்றுச் சிந்தனை கொண்ட இளைஞர்களின் நெஞ்சங்களில் பதிவு செய்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

தாடி வைத்திருந்தால் தீவிரவாதி, குல்லா அணிந்திருந்தால் பயங்கரவாதி, மொத்தத்தில், இஸ்லாம் சமூகமே கொடிய குற்றச் செயல்களை தினந்தோறும் அரங்கேற்றிக் கொண்டிருக்கும் சமூகம் என்பது பார்ப்பன பயங்கரவாத ஊடகங்களால் நாள்தோறும் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கும் நச்சுக் கருத்து. இது

எந்த அளவிற்கு பாய்ந்திருக்கிறது என்றால் தங்கள் சமுதாயத்தில் ஒரு தரப்பினர் இதில் ஈடுபடுகின்றனர் என முஸ்லிம்களே நம்பிக் கொண்டிருக்கின்றனர் என்பதை சுட்டிக்காட்ட வைகறை வெளிச்சம் தவறவில்லை.

குற்றமற்ற ஒரு உயிரைக் கொலை செய்வது மொத்த மனித இனத்தையே கொலை செய்ததற்கு சமமாகும் எந்த வகையிலும் முஸ்லிம்கள் அநியாயமாக கொலை செய்யும் கொலை காரர்களல்ல மாறாக அப்படுகொலைகளை எல்லாம் ஆர்.எஸ்.எஸ் இயக்க பயங்கரவாதிகளால் நிகழ்த்தப்பட்டு முஸ்லிம் மக்கள் மீது பழி சுமத்தப்படுகிறது.

குஜராத் மாநில முஸ்லிம்களை கொடூரமான தாக்குதல் மூலம் படுகொலை செய்து இனச் சுத்திகரிப்பு நடத்த. சபர்பதி ரயிலை எரித்து பழியை இஸ்லாமியர்களின் மீது திணித்து அரங்கேற்றப்பட்டது தான் குஜராத் படுகொலைகள். சுபைதா, மன்சூரா, மைமூனா, சவ்தா போன்ற இஸ்லாமிய வீர மங்கையர்களின் வரலாற்றை பதிவு செய்து உண்மை நிலையை உணர்த்திய இதழ் வைகறை வெளிச்சம்.

பால் குடிப்பதைக் கூட மறக்காத பச்சிளம் பாலகனின் பிஞ்சுக் கரத்தில் நஞ்சு தடவிய கொடிய வாளைக் கொடுத்து போர்க்களத்திற்கு அனுப்பி நாட்டு விடுதலைக்குப் போராடிய வீரத்தாயை புறநானூறு பதிப்பித்திருக்கிறது. மொத்த இஸ்லாம் கூட்டமும் படுகொலை செய்யப்பட்ட போது தன் உயிரைப் பணயம் வைத்து தலைமறைவு வாழ்க்கை நடத்தி நீதிக்காகப் போராடிய வீர மங்கை பல்கிஷ் பானுவின் வரலாற்றை வைகறை வெளிச்சம் புதுப்பித்திருக்கிறது.

நந்தேத் குண்டு வெடிப்பு, மாலேகான், அஜ்மீர் தர்க்கா, ஐதராபாத், தென்காசி போன்ற அனைத்து இடங்களிலும் நிகழ்ந்த குண்டு வெடிப்பிற்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை அதை நிகழ்த்தியவர்கள் ஆர்.எஸ்.எஸ் இந்துத் தீவிரவாதிகள். தண்டனை அனுபவிப்பது அப்பாவி இஸ்லாமிய இளைஞர்கள்.

உச்ச கட்டமாக மும்பை தாஜ் ஹோட்டல் தாக்குதல் நடைபெற்ற பின்னனி எ.டி.எஸ் தலைவர் ஹேமந் கர்கரே அவர்களை கொலை செய்தது யார் என்ற நூலை தமிழகத்தின் தெருக்களெல்லாம் எடுத்துச் சென்று ஆர்.எஸ்.எஸ் - இன் இந்துத் தீவிரவாதிகளால் நிகழ்த்தப்பட்டது என்பதை மக்கள் மனதில் பதிய வைத்தது வைகறை வெளிச்சம்.

இந்தியாவில் வாழும் முஸ்லிம் சமூகத்தை இனச் சுத்திகரிப்பு செய்து இந்தியாவை பூரண இந்துக்கள் நிறைந்த நாடாக அறிவிக்க இரத்தப் புரட்சியை நடத்துவதற்கு குஜராத்தில் வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது. அதே போன்ற தாக்குதலை இந்தியா முழுவதும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது தான் மும்பை தாஜ் ஹோட்டல் தாக்குதல் எல்லாம் வல்ல ஏக இறைவன் அல்லாஹ் நாடியதால் முறியடிக்கப்பட்டது.

முற்போக்குப் பத்திரிகைகள் என்று தன்னை அடையாளப் படுத்திக் கொள்ளும் சில ஏடுகள் இன்று 'இந்துத் தீவிரவாதம்' என்ற வார்த்தை பதத்தை பயன்படுத்துகிறது என்றால் அதன் முழுமையான வெற்றி வைகறை வெளிச்சத்தை தான் சாரும்.

அநியாயமாக ஆப்ஃகன் மீது போர் தொடுத்தது, ஈராக்கை பிணங்கள் விளையும் மண்ணாக மாற்றியது, பாலஸ்தீன முஸ்லிம்களை கொன்று வதைக்க இஸ்ரேலை ஊக்கப்படுத்தியது, ஈரானை மிரட்டுவது, பர்தா அணிவதற்குத் தடை விதிப்பது எல்லாம் இஸ்லாத்தின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சிய மேற்கத்திய ஐரோப்பிய நாடுகள் பயபீதியில் செய்யும் சதி வேலைகள்.

பன்னாட்டு முதலாளித்துவ ஏடுகளெல்லாம் தீவிரவாதிகளாக அடையாளம் காட்டும் ஆப்ஃகன் போராளிகளை 'தாலிபன்கள் பிடியில்' தொடரில் அவர்களை மக்கள் தலைவர்களாக நிலை நிறுத்தியது. 'புதைக்கப்பட்ட மக்கள் மறைக்கப்பட்ட வரலாறுகள்' தொடரில் அமெரிக்க இராணுவத் தீவிரவாதத்தை எடுத்துக் கூறியது. லெபனான் முஸ்லிம்களை பாதுகாக்கும் ஹிஸ்புல்லாஹ் இயக்கத் தலைமையின் செயல்பாடுகளை விளக்கியது. ஈரான் அதிபர் அகமது நிஜாத்தின் நெஞ்சுரத்தை காட்டியது. செச்சின்யாவில் குற்றவாளிகளுக்கு மத்தியில் இஸ்லாத்தை எடுத்துச் சென்று மனிதர்களாக மாற்றி நிலை நிலைநிறுத்திய இமாம் காசிமுல்லாஹ் (ரஹ்) இமாம் ஷமில் வரலாற்றை எழுதி, எங்கு இஸ்லாம் செல்கிறதோ அங்கு மனித நேயம் பரவுகிறது என்பதை வைகறை வெளிச்சம் தொடர்ச்சியாக தன்னுடைய வெளியீடுகளில் அறிவித்திருக்கிறது.

மூன்றாண்டுகள் வைகறை வெளிச்சத்தை தீவிரமாக வாசித்த வாசகன் என்ற முறையில் ஒரே ஒரு கருத்து. ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டு முஸ்லிம்களை பாதுகாப்பதற்கு இறைவழியில் ஒரு கூட்டம் இருப்பதைப் போல் இந்தியாவில் வாழும் முஸ்லிம்களைக் காப்பதற்கு வைகறை வெளிச்சத்தின் வாசகர் கூட்டம் இருக்கும். எல்லாம் வல்ல ஏக இறைவன் அல்லாஹ் நாடினால் இக்கூட்டம் கிலாஃபத்தையும் கட்டி அமைக்கும்.

**- உடுமலை இலக்கியன்**

# கஷ்மீரில் தொடரும் அவலம்.

## முன்னுரை: அன்பார்ந்த வாசகர்களே!!

கஷ்மீரில் நடக்கும் அத்தனை அவலங்களுக்கும் காரணம் இராணுவத்தைப் பாதுகாத்திடும் அளவில் அங்கு செயலிலிருக்கும் ஆயுதந்தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டந்தான். ARMED FORCES SPECIAL POWERS ACT.

இந்தச் சட்டம் அங்கே செயலிலிருக்கும் வரை, கொலைகளையும், கற்பழிப்புகளையும், தங்கு தடையின்றி செய்யும் இராணுவத்தினரை நாம் தடுத்திட இயலாது. அவர்களை நீதியின் முன் நிறுத்திட இயலாது.



கொலைக் குற்றங்களுக்கும் கற்பழிப்புகளுக்கும் தண்டனைகளைப் பெற்றிட வேண்டியவர்கள், அதாவது பாதுகாப்புப் படையினர் அங்கே பதக்கங்களையும் பரிசில்களையும் பதவி உயர்வுகளையும் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த வகையில் வைகறை வாசகர் வட்டம், தாருல் இஸ்லாம், இன்னும் நாடெங்குமுள்ள நல்ல உள்ளங்கள் இவர்களெல்லாம் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றிகளைக் குவிக்கும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது.

ஆனால் மக்கள் இன்னுங் கொஞ்சம் அழுத்தம் தந்திட வேண்டும். அதனை நாம் முறையாகச் செய்து கொண்டிருக்கின்றோம். நாம் அதனைத் தொடருவோம் மக்களும், மனித உரிமை அமைப்புகளும் தங்கள் முயற்சிகளைத் தொடரும் என எதிர்ப்பார்க்கின்றோம்.

ஆனால் கஷ்மீரில் அரசின் தீவிரவாதத்திற்கு எதிராக போராடிக் கொண்டிருக்கின்ற அமைப்புகள், இந்தியாவின் இதர பகுதிகள், கஷ்மீர் மக்களின் துன்ப துயரங்களில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுகின்றார்கள்.

அவர்களின் ஆதங்கத்தை அப்படியே இங்கே பதிவு செய்கின்றோம்.

அதாவது "அந்த ஆவணம் (அதாவது கஷ்மீரில் இயங்கும் மனித உரிமை அமைப்புகள் தயார் செய்த ஆவணங்கள் மேலும் இப்படிக் கூறின. மத்திய மாநில அரசுகள், இந்தப் பிரச்சனையில் கவனம் செலுத்துவதே இல்லை. (இந்தப் பிரச்சனை எனக் குறிப்பிடப் படுவது) காணாமற்போகும் முஸ்லிம் இளைஞர்கள், சம்பந்தமான பிரச்சனைதான்) ஆனால் இந்தியாவின் இதர பகுதிகளில் உள்ள மக்களும் இந்தப் பிரச்சனையில் (கஷ்மீர் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனையில்) கவனம் செலுத்துவதில்லை. ஆனால் இந்திய மக்கள் நாட்டில் நடக்கும் இதர மனித உரிமை மீறல்கள், உரிமை மீறல்கள் இவற்றில் நிரம்பவே கவனஞ்செலுத்துகின்றன. வெற்றிகளையும் ஈட்டுகின்றன.

(SOURCE : REPORT BY JKCCS = JAMMU & KASHMIR COALITION OF CIVIL SOCIETIES).

கஷ்மீரில் இயங்கும் மனித உரிமை அமைப்புகளின் குழுமந்தான் இந்த JKCCS கஷ்மீர் மக்களின் கூட்டமைப்பு என்ற இந்த அமைப்பு - அந்த மக்கள் தங்கள் வரலாற்றின் மிகவும் நெருக்கடியானதொரு காலகட்டத்தில், மிகவும் அந்நியமான உணர்வை வெளிப்படுத்தி உள்ளார்கள். இஃது போக்கப்பட வேண்டும், அவர்கள் எதிர்நோக்கும் இந்தப் பிரச்சனையில், மொத்த இந்தியாவும் பின்னணியில் நிற்க வேண்டும்.

எப்படி இந்தியாவின் இதரப்பிரச்சனைகளில் - உரிமை மீறல்களில் நாம் முன்னணியில் நிற்கின்றோமோ அதேபோல் கஷ்மீர் மக்களின் பிரச்சனைகளிலும் முன்னணியில் நின்றிட வேண்டும்.

இந்த வகையில்தான் "வைகறை வெளிச்சம்"

இந்தப் பிரச்சனையைத் தொடர்ந்து மக்கள் மன்றத்திற்குக் கொண்டு சேர்த்துக் கொண்டிருக்கின்றது.

*2011*ஆகஸ்ட் 30 ஆம் நாள் காணாமற் போனவர்களின் உலக கவன ஈர்ப்பு நாள் என ஐக்கிய நாடுகளின் சபை அறிவித்த போது தாருல் இஸ்லாம், வைகறை வாசகர் வட்டம் அதில் சிறப்பாகப் பணியாற்றியது.

கஷ்மீர் மக்களின் கண்ணீர் கதைகளை தமிழக மெங்கும் துண்டு பிரசுரங்களின் வழி கொண்டு சென்றது. அத்தோடு அத்தனை உரிமை மீறல்களையும் - கொலைகளையும் - கற்பழிப்புகளையும் அனுமதிக்கும் ஆயுதப்படைகளின் சிறப்பு அதிகார சட்டத்திற்கெதிராக ஓர் இயக்கத்தையும் நடத்தியது.

ஆயுதப் படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டம் தந்திடும் பாதுகாப்பால்தான், இராணுவத்தினர் காட்டுமிராண்டிகளாக நடந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் காட்டுமிராண்டித் தனத்தின் ஆயிரக்கணக்கான அத்தாட்சிகளுள் ஒன்றை இங்கே தருகின்றோம்.

ஹாலிதா அக்தர் *28* வயதான நங்கை !!

கஷ்மீரில் மிகவும் அதிகமான கெடுபிடிகளுக்கும், கொடுமைகளுக்கும் கற்பழிப்புகளுக்கும் உள்ளாகும் மாவட்டம் பாராஹ்முல்லாஹ். இந்த மாவட்டத்தில் ஹீர் என்ற ஊரைச் சார்ந்தவர் ஹாலிதா அக்தர்.

ஜூலை *2001* ஆம் ஆண்டில் அது நடந்தது.

# கஷ்மீரின் பாதி விதவைகள்...

## மத்திய அரசுக்கு மனுப்போட்டால்...

ஹாலிதா அக்தரும் தம்பிமார்களும் தாய் தந்தையரும் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

நடுநிசி!!
வீட்டை யாரோ தட்டும் சப்தம்.

முதலில் வந்த சப்தம் மிகவும் மெல்லிதாகவே இருந்தது. அதனால் யார் வீட்டையோ, யாரோ தட்டுகின்றார்கள் என்ற ஹாலிதா அக்தரின் குடும்பத்தார் சட்டை செய்யாமல் விட்டுவிட்டார்கள்.

ஆனால் நேரஞ்செல்லச் செல்ல தங்கள் கதவை தான் யாரோ தட்டுகின்றார்கள் என்பதை உணர்ந்தார்கள்.

ஆனால் அதற்குள் கதவைத் தட்டும் சப்தம் தட்டுபவர்கள் உடைத்து விடுவார்கள்ளோ என அஞ்சிடும் அளவிற்கு அதிகரித்தது.

இனி கதவை திறப்பதில் தாமதம் காட்டினால் வீட்டின் கதவு விழும் என்ற நிலை.

ஆகவே ஹாலிதா அக்தர் விரைந்து சென்று கதவைத் திறந்தாள்.

கதவைத் திறந்தது தான் தாமதம். அவளை இடித்துத் தள்ளிவிட்டு ஆயுதந்தாங்கியப் படையினர் உள்ளே நுழைந்தார்கள்.

கண்ணில்பட்ட ஆண்களையும், பெண்களையும் உதைத்தார்கள். வீட்டைக் கபளீகரப்படுத்தினார்கள்.

பின்னர் ஹாலிதா அக்தரின், தம்பிமார்கள், கணவன், தந்தை அதாவது அத்தனை ஆண்களையும் தரதரவென இழுத்துக் சென்று, வீட்டின் முன்புறம் நின்று கொண்டிருந்த இராணுவ ஊர்தியில் ஏற்றினார்கள்.

மின்னல் வேகத்தில் பாய்ந்தாள் ஹாலிதா அக்தர், தன்வீட்டு ஆண்களை விட மாட்டேன், எனத் தடுத்தாள். அந்த இராணுவ அதிகாரிகளின் மிருகப் பலத்திற்கு முன் அவள் எம்மாத்திரம்? தலைகுப்புற அவளைப் பிடித்துத் தள்ளினார்கள். வீழ்ந்ததால் மூக்கு உடைந்தது. அதையும் பொருட்படுத்தாமல் நீங்களெல்லாம் எந்த இராணுவப் பிரிவினர்? ஏன் எங்கள் ஆண்களை



இழுத்துச் செல்கின்றீர்கள்? எனக் காரணம் கேட்டாள்.

கஷ்மீரில் இராணுவத்தினர் அழைத்துச் சென்ற ஆண்களை உயிருடன் திரும்பவிட்டதே இல்லை. இதையும் ஹாலிதா அக்தர் நன்றாக அறிவாள். அதனால்தான் அவள் காயம்பட்ட நிலையிலும் காரசாரமாக அந்தக் காட்டுமிராண்டிகளிடம் வாதிட்டாள் வந்ததை வாங்கிக் கட்டிக் கொண்டாள்.

ஆனால் கஷ்மீரின் கொடுங்கோலர்களிடம் அவளைப் போன்ற அபலைகளின் அலறல்கள் எடுபட்டதில்லை.



இது ஜனநாயகமாம் ! அதுவும் இந்திய ஜனநாயகமாம் 65 ஆண்டுகளாக இது நன்றாகவே செயல்பட்டிருக்கின்றதாம். நமது நாட்டின் பிரிக்க முடியாதப் பகுதி கஷ்மீர் என மார்தட்டிக் கொள்ள வேண்டுமாம், இல்லையேல் "இராஜகுத்தம்" வந்துவிடுமாம்.

தனக்கேற்பட்ட காயங்களையெல்லாம் துச்சமென மதித்து அன்றிரவே தங்கள் குடும்பத்தைச் சார்ந்த ஆண்கள் எங்கே கொண்டு செல்லப்பட்டார்கள் என்பதைக் கண்டுபிடிக்க புறப்பட்டாள் காரிகை ஹாலிதா அக்தர்.

இப்படி அழைத்துச் செல்பவர்களை முதலில் பக்கத்திலுள்ள காவல்துறை நிலையத்திற்குத்தான் அழைத்துச் செல்வார்கள் பின்னர் தான் அவர்களை இதர இடங்களுக்குக் கொண்டு செல்வார்கள். பக்கத்து காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லவில்லையென்றால், பக்கத்து காவல் நிலையத்திற்குத் தகவலாவது தருவார்கள். இதையும் ஹாலிதா அக்தர் நன்றாக அறிவாள், அதனால் தான் அவள் பக்கத்திலுள்ள காவல் நிலையத்திற்கு ஓடினாள்.

மொத்தத்தில் ஹாலிதா அக்தர், நல்ல விபரமான பெண். மனித உரிமைகளைப் பற்றிய அகலமான அறிவு இல்லாவிட்டாலும் அவள் மனித உரிமைப் பிரஞ்சை உடையவள் எனச் சொல்லலாம். ஆனால் கஷ்மீரில் முட்டாள்களுக்கும், அறிவாளிகளுக்கம் சித்திரவதையும் மரணமும் தான் பரிசு. பிணத்தையும் காட்டமாட்டார்கள் புதைத்த இடங்களையும் காட்டமாட்டார்கள்.

ஆனால் ஹாலிதா அக்தர் தன்னால் இயன்றதையெல்லாம் செய்து தன் குடும்பத்து ஆண்களை மீட்டுவிடுவது என முடிவு செய்திருந்தாள்.

ஆகவே இரவோடு இரவாக தன்வீட்டு எல்லைக்குட்பட்ட காவல் நிலையம் சென்றாள். அங்கே இருப்பவர்கள் தங்களுக்குத் எதுவும் தெரியாது என்றார்கள்.

சட்டப்படி உங்களுக்குத் தெரிவித்திருப்பார்கள் என்றாள். சட்டம் பேசினால் நீயும் சிக்கிக் கொள்வாய் என்று மிரட்டினார்கள்.

முடிந்த மட்டும் வாதாடி பார்த்தாள். அவர்கள் முடிவாக நீ பாராஹ்முல்லாஹ்விலுள்ள தலைமை காவல் நிலையத்தை அல்லது அங்கேயுள்ள இராணுவ முகாம்களைச் சென்று பார் எனக் கூறி கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாத குறையாக அனுப்பிவிட்டார்கள்.

அதிகாலைவரை காவல்நிலையத்தைச் சுற்றிச், சுற்றி வந்துவிட்டு இல்லந் திரும்பினாள். வீட்டில் தாயும் மற்றவர்களும் கதிகலங்கிக் கிடந்தார்கள். தாயார் நினைவற்றுக் கிடந்தாள். அக்கம் பக்கத்தவர்கள் தங்களாலான கை வைத்தியத்தைச் செய்து கொண்டிருந்தார்கள்.

தன் தாய்க்காகத் தான் தேக்கி வைத்திருந்த கண்ணீரை உகுத்துவிட்டு, நடந்ததை வந்திருந்தவர்களிடம் கூறிவிட்டு, தளர்ந்து தள்ளாடியவளாக படுக்கையில் சாய்ந்தாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் பதறித்துடித் தெழுந்தாள். ஆமாம் எல்லாந்தான் பறிபோய்விட்டதே அதனால் இனி பதறலும், துடித்தலுந்தான் வாழ்க்கை என்பதை அவள் அறிவாள். ஆமாம்!! கஷ்மீரில், இப்படித்தான் ஆண்களைப் பறிகொடுத்த குடும்பங்களெல்லாம், பதறி துடித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

பதறியெழுந்த ஹாலிதா அக்தர் பாராஹ்முல்லாஹ் நோக்கிப் புறப்பட்டாள்



நிச்சயமாக அவளுக்கு அங்கே தன் குடும்பத்து ஆண்களைப்பற்றிய தகவல்கள் கிடைக்கும் என நம்பினாள்

வீட்டிலிருந்த நகைகளில் பெரும் பாலானவற்றை விற்றுப் பணமாக மாற்றினாள். ஏனெனில் அவளுக்கு நிச்சயமாகத் தெரியும் நீதிக்கான தனது போராட்டம் நீளமானது., நிலை இல்லாதது.

ஒரு வழியாக பாராஹ்முல்லஹ் வந்தாள்.

தலைமைக் காவல் நிலையத்தைக் கண்டுபிடித்தாள். அங்கே இருந்தவர்களிடம் விசாரித்தால், எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. ஆகவே அங்கேயுள்ள இராணுவ முகாம் நோக்கிச் சென்றாள்.

அங்கே இருந்த இராணுவ அதிகாரிகள், நேற்று இராணுவத்தினர் அப்படி யாரையும் அழைத்துவரவில்லை என அடித்துக் கூறினர்.

அதாவது ஹாலிதா அக்தர் கண்ணால் பார்த்தவற்றை இல்லை என்றார்கள்.

ஹாலிதா அக்தர் ஆதங்கப்பட்டார். ஆத்திரத்தில் அதிகாரிகளிடம் கடுமையாக வாதிட்டாள். ஆனால் அவர்கள் தாங்கள் சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தார்கள். சிலர் கோபாவேசமாகப் பேசினார்கள். அதே கோபத்தோடு ஹாலிதா அக்தரும் பேசினாள்.

இராணுவத்தினர் சிப்பாய்களை ஏவி அவளை அடிக்கவும், மான பங்கப்படுத்திடவும் முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

இந்த மிருகங்களிடமிருந்து தப்பித்து விடுவதே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தாள் ஹாலிதா அக்தர். மெல்ல பின்வாங்கினாள். எல்லா ஆண்களையும் மொத்தமாய் பறிகொடுத்த அவளால் எதையும் விட்டுக் கொடுக்க இயலவில்லை. ஆனால் அந்த இராணுவ முகாமில் தனது மானமே தப்புமா? என்ற நிலைவந்ததால் மெல்ல பின் வாங்கினாள்.

ஆனால் அங்கே இருந்த சிப்பாய்கள் அவளைக் குண்டுக்கட்டாக தூக்கி ஓர் அறைக்குள் கொண்டு சென்றனர். கடுமையான சித்திரைவதைகளுக்கு ஆளாக்கினார்கள். அவள் போற்றி வந்த மானமும், பெண்மையும் அங்கே பறிக்கப்பட்டது.

குடும்பத்து ஆண்களை மீட்க வந்த அந்த வீரத்திருமகள், எதிர்பாராத கொடுமைகளுக்கெல்லாம் ஆளாக்கப்பட்டாள்.

இரண்டு நாள் இராணுவ முகாமில் சிறை வைக்கப்பட்டாள். பின்னர் கஷ்மீரை விடுவிக்கப் போராடும் போராளிகளுக்கு உதவி செய்தாள்: போராளிகளின் கூட்டத்தின் உறுப்பினர் என்றெல்லாம் குற்றம் சுமத்தப்பட்டாள்.

மூன்றாம் நாள் இந்தப் பொய்களையெல்லாம் ஒரு வழக்காக ஜோடித்து பாராஹ்முல்லாஹ் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்கள். அத்தோடு ஹாலிதா அக்தரையும் ஒப்படைத்தார்கள்.

இவளை தீவிரவாதியென கைது செய்து சிறையிலடையுங்கள் என ஆணைப் பிறப்பித்து விட்டுப் போய்விட்டார்கள்.

ஆணையிட்டது இராணுவத்தினர் என்பதால் அதனை அப்படியே நிறைவேற்றினார்கள் காவல் துறையினர்.

ஹாலிதா அக்தர் சிறையிலடைக்கப்பட்டார்.

இதற்காக காவல் துறையினர் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கைதான் 91/02 கஷ்மீரில் இப்போது இந்த எண் மரணத்தின் எண் என பிரபல்யமாகிவிட்டது.

அதற்குள் அவள் எல்லா சித்திர வதைகளுக்கும் ஆளாக்கப்பட்டு விட்டாள்.

அடுத்து அவளுக்குப் பிணை கேட்கும் பணிகளைத் தொடங்கினார்கள் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள்.

பிணை நீதிமன்றம் வந்தபோது ஹாலிதா அக்தரே அதிகமாகவும், ஆக்ரோஷமாகவும் பேசினாள். தனது நடந்த அநியாயங்கள் தனது குடும்பத்தைச் சார்ந்த ஆண்கள் கடத்தப்பட்டது, தேடிச் சென்ற தன்னை சித்திரவதைச் செய்தது எல்லாவற்றையும் பட்டியலிட்டாள்.

நீதிபதி உண்மையையும் யதார்த்தத்தையும் உணர்ந்தார் என்றாலும், கைது செய்தது முதல் அத்தனையையும் செய்தது இராணுவம் என்பதால் எடுத்த எடுப்பிலேயே பிணையை வழங்கிட வில்லை. 'வாய்தா' போட்டார். ஆனால் அடுத்த விசாரணையின் போது சாட்சியங்கள் வலுவானவையாக இல்லை எனக் கூறி பிணை வழங்கினார்

நாடெங்கிலும் நடப்பிலிருக்கும் பழக்கம் பிணையைப் பெற்றவர்கள், சட்டப்படியான நிபந்தனைகளை நிறைவேற்றிய பின்னர் வீட்டுக்குச் செல்வார்கள். ஆனால் கஷ்மீர் முஸ்லிம்கள் பிணைகிடைத்தாலும் சிறையிலேயே இருக்கின்றார்கள். அதற்கு ஹாலிதா அக்தர் விதிவிலக்கல்ல.

உண்மையைச் சொன்னால், ஹாலிதா அக்தர் விசயத்தில் சட்டத்தைச் செயல்படுத்திட வேண்டியோர், இன்னும் குரூரமாகவும், கேவலமாகவும் நடந்து கொண்டார்கள்.

பிணை கிடைத்த ஹாலிதா அக்தரை வெளியே வரவிடாமல், சித்திரவதைக் கூடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அவள் மீது மின்சாரத்தைப் பாய்சினார்கள். தண்ணீரில் அவள் முகத்தை திணித்து மூச்சுத் திணறச் செய்தார்கள்.

அதன்பின் எழுதும் தரத்தலில்லாத செயல்களில் ஈடுபட்டார்கள். இத்தனை சித்திர வதைகளிலிருந்தும் விடுபட வேண்டும் என்றால், அவள், தனக்கும் போராளிகளுக்கும் தொடர்பு உண்டு என்று ஒத்துக் கொள்ள வேண்டும். ஆனால் அவள் அதற்குத் தயராக இல்லை. அவர்களும் விடுவதாக இல்லை.

ஒரு பல்லை இழந்தாள், உடலும், மானமும் பழுதுபட்டன. என்றாலும் இராணுவம் சொன்னவற்றை அவள் சொல்வதாக இல்லை. மறுத்தாள், எதிர்த்தாள்.

நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பெற்ற, ஹாலிதா அக்தர் அங்கிருந்து 'கோட்டி பல்வால்' சிறைக்கு மாற்றப்பட்டார். இது ஸ்ரீ நகருக்குப் பக்கத்திலுள்ள ஒரு சிறை.

ஆறுமாதங்கள் அங்கே வைக்கப்பட்டபின் மீண்டும் நீதி மன்றம் கொண்டுவரப்பட்டாள்.

நீதிமன்றம் அவளை வழக்கிலிருந்து முற்றாக விடுவித்தது.

பலசோதனைகள், இல்லை அவை சோதனைகளல்ல. நமது இந்திய அரசின் இராணுவத்தினர் அடுக்கடுக்காய் கட்டவிழ்த்திட்ட அநியாயங்கள். அத்தனையையும் ஒன்றாய் எதிர்கொள்வது என முடிவுசெய்தாள்.

இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுக்க முயற்சிகளை மேற்கொண்டாள்.

இராணுவத்தினர் என்ன செய்தாலும், எத்தனை கொடூரங்களை அவிழ்த்து விட்டாலும் எதுவும் செய்திட இயலாது. அவர்களைப் பாதுகாக்கும் சிறப்புச் சட்டம் ஒன்று இருக்கின்றது. அதையும் மீறி அவர்கள் மீது ஒரு புகாரை பதிவு செய்ய வேண்டும் என்றாலும், அதற்கு மத்திய அரசிடம் அனுமதி பெற வேண்டும் என்றார்கள்.

இராணுவத்தின் காட்டுமிராண்டித் தனங்களுக்கு 'லைசன்ஸ்' வழங்கும் சட்டங்களைப் பின் வாங்குங்கள் என்ற கடிதம் எழுதினாள், அனுமதிகேட்டு. அந்தக் கடிதத்தில் இராணுவத்தினர் தன்வீட்டு ஆண்கள் அனைவரையும் கடத்திச் சென்றதையும் விவரமாக எழுதி இருந்தாள். தன்னை சிறை வைத்ததையும் சித்திரவதைச் செய்ததையும் விவரித்துச் சொன்னாள்.

இருக்கின்ற சமுதாய அமைப்புகள் எதுவும் பலன்தராது என்பதால், அவள் இந்தப் பெரும் போரை தானே தன்னந்தனியாகத் தொடர்ந்தாள்.


**வைகறை வெளிச்சம் இப்போது துபாயிலும்....**

**துபாய் வாசகர்கள்**
**வைகறை வெளிச்சம் மாத இதழை**
**பெற்றிட தொடர்பு கொள்ள வேண்டிய**

**தொலைபேசி எண் : +971551390923**
**சென்னை தொடர்புக்கு : 9444329594**

**வைகறை வெளிச்சம் மாத இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்!**

| | |
|---|---|
| பின்அட்டை | ரூ 6000 |
| உள்பக்க அட்டை | ரூ 4500 |
| முழுப்பக்கம் | ரூ 1000 |
| அரைப்பக்கம் | ரூ 500 |
| விசிட்டிங்கார்டு அளவு | ரூ 250 |

மத்திய அரசிடமிருந்து பதில் வரும் எனக் காத்திருந்த ஹாலிதா அக்தருக்கு வேறுவிதமான வினை ஒன்றே வந்தது.

ஆமாம் ஒரு நாள் அதிகாலையில் இராணுவ ஊர்திகள் அவள் வீட்டுக்கு முன்னால் வந்து நின்றன. சில காவல்துறை வாகனங்களும் வந்தன. ஹாலிதா அக்தரை ரான்பிர் பீனல் கோடு (RANBIR PENAL CODE SECTION 212) பிரிவு 212 இன் கீழ் கைது செய்திருப்பதாகக் கூறி கைது செய்து அழைத்துச் சென்றார்கள்.

அக்கம் பக்கம் மக்களெல்லாம் அழுது புலம்பி அல்லோலப் பட்டார்கள், ஹாலிதா அக்தரின் அம்மா அன்று நினைவிழந்தவள்தான், அதன் பின்னர் அவள் நினைவு திரும்பவே இல்லை.

இப்போதும் ஆறுமாதங்கள் சிறையில் வைத்தபின்னர் தான் நீதிமன்றம் கொண்டு வந்தார்கள். அப்போதும் ஹாலிதா அக்தரே தன் வழக்கை வாதிட்டார். உண்மையில் தன் வழக்கை வாதிடுகின்றோம் என்ற பாங்கில் அவள் தன் வாதங்களை வைக்கவில்லை மாறாக தன் ஆதங்கத்தையும், தொடர்ந்து நடத்தப்படும் கொடூரங்களையும் அடுக்கினாள். காவல் துறையினரை எச்சரித்த நீதிபதி ஹாலிதாவை முற்றாக வழக்கிலிருந்து விடுவித்தார்.

இப்போது தன்மீது தொடுக்கப்படும் வழக்குகளில் அவள் பிணை கேட்பதில்லை. காரணம் பிணைகிடைத்தாலும் அவளை வெளியே விட மாட்டார்கள். சிறைபிடிப்பார்கள். சித்திரவதை செய்வார்கள்.

ஹாலிதா அக்தர் மீது தொடரும் வழக்குகள் நாளுக்கு நாள் அதிகரித்தன. ஆனாலும் அவள் தொடங்கிய போரை தொய்வின்றி தொடர்ந்தாள்.

தனக்கு இழைக்கப்பட்ட எல்லா அநியாயங்களையும் பட்டியலிட்டு விளக்கிச் சொல்லி இவையெல்லாம் இராணுவத்தின் சதிகள்தாம் ஆகவே இராணுவத்தினர் மீது வழக்குத் தொடரும் அனுமதி கேட்டாள்.

மத்திய அரசுக்கு எழுதிய ஒவ்வொரு கடிதத்திற்குப் பின்னும், ஒவ்வொரு மனுவுக்குப் பின்னரும் நெருக்கடிகள், கைதுகள், சித்திரவதைகள் இவைதாம் பதிலாகக் கிடைத்தன.

2006 ஆம் ஆண்டு ஜூலை திங்களில் ஹாலிதா அக்தர் வீட்டின் முன் ஏராளமான காவல் துறையினர், சற்று இடைவெளி விட்டு இராணுவத்தினர் இப்படி ஒரு பெரும் கூட்டம் படைபரிவாரங்களோடு திரண்டு நின்றது.

ஏதோ பெரியதொரு கோட்டையை முற்றுகை இட்டதைப் போன்றதொரு தோற்றத்தை உருவாக்கினர்.

குழுமி இருந்த மக்களிடையே ஒரு செய்தியை தங்கள் ஒற்றர்கள் வழி கசியவிட்டார்கள். அதன் வழி லஷ்கரே - தொய்பா - ஜெய்ஸே முஹம்மத், ஆகிய அமைப்புகளுக்கும், ஹாலிதா அக்தருக்கும் தொடர்பு இருப்பதாக சொன்னார்கள்.

ஹாலிதா தனது கைதுக்கும், குவிக்கப்பட்டிருக்கும் படைக்கும் அதன்வழி உருவாக்கப்படும் பதற்றத்திற்கும் காரணம் கேட்டார்.

அனைத்திற்கும் பதிலாக அவளை இழுத்துச் சென்று வேனில் ஏற்றினார்கள். நொடியில் அந்த வேன் அவ்விடம்விட்டு அகன்றது.

ஆனால் அங்கே நின்ற பரிவாரங்கள் அவ்விடம் விட்டு அகல அதிக நேரம்பிடித்தன.

ஏதோ பெரியதிட்டம் ஒன்று அரங்கேறுகின்றது என்பதை மட்டும் எல்லோராலும் புரிந்திட முடிந்தது.

இப்போது ஹாலிதா அக்தர் இருக்குமிடத்தையே தேடிட வேண்டியநிலை வந்தது. எங்கு தேடியும் அவள் கிடைக்கவில்லை.

ஜனவரி 21 ஆம் நாள் 2007 ஆம் ஆண்டு.

ஹாலிதா அக்தரின் உடல் ஓர் பழத்தோட்டத்தில் பிணமாகக் கிடந்தது. உடலெங்கும் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்து உடலை சல்லடையாக்கி இருந்தன. அந்தப் பழத்தோட்டம், பாராஹ்முல்லாஹ் மாவட்டம் ராபியாபாத் இவ் புத்தான் டங்கி வாச்சா என்னுமிடத்தில் கிடந்தது.

காவல்துறையினர் உடலை கண்டெடுத்தார்கள். அவளைக்கொலை செய்வதற்குமுன் கத்தியால் காயப்படுத்தி இருந்தார்கள், சித்திரவதைகளின் மொத்த அடையாளத்திற்கு எடுத்துக்காட்டாக அவளின் உடல் அங்கு கிடந்தது.

ஹாலிதா அக்தரை யார் கொலை செய்தார்கள் என்பது கண்டுபிடிக்கப்படவில்லை என அறிவித்தார்கள் காவல்துறையினர்.

ஹாலிதா அக்தரை தேடும் பணி இனி யாருக்குமில்லை.

ஆமாம் ஹாலிதாவுக்கு தன் கணவன் உட்பட தன்வீட்டு ஆண்களைத் தேடும் பணியும் இல்லை. அவள் தாயாருக்கு எந்தக் கவலையுமில்லை அவள் நினைவிழந்து பல ஆண்டுகளாக 'கோமா' வில் கஷ்மீர் மருத்துவமனையில் 2009 ஆண்டுவரை இருந்தாள்...

SOURCE : Widows & Half Widows, saga of Extra Judicial arrests & Killings in Kashmir Afshanarashid, MILLI GAZETTE:

**இன்ஷா அல்லா....**

**இன்னும் வரும்.....**

# ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்.
## நூல் வெளியீட்டு விழா

*01-01-2012* ஞாயிற்றுக் கிழமை சென்னை மண்ணடி ஆயிஷா மஹாலில் "ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்" நூல் வெளியீட்டு விழா நடை பெற்றது.

காலை சுமார் 10:30 மணியளவில் தொடங்கிய இந்நிகழ்வுக்கு தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் பொருளாளர், சென்னை மந்தைவெளி ஈத்காமஸ்ஜித் தலைமை இமாம் மௌலவி இல்யாஸ் ரியாஜி தலைமையேற்றார். மௌலவி மில்லத் இஸ்மாயில் ரியாஜி திருக்குர் ஆன் வசனங்களை ஓதி நிகழ்வைத் தொடங்கிவைத்தார்.



தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் தலைவர் பத்திரிகையாளர் மு. குலாம் முஹம்மது நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து தொகுத்து வழங்கினார்.

'ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்' நூலை அறிமுகம் செய்து உரையாற்றினார் நீலப்புலிகள் இயக்கத்தின் நிறுவனர் அண்ணன் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள்.

பின்னர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நாடாளுமன்ற உறுப்பினர் எம். அப்துர்ரஹ்மான் அவர்கள் நூலை வெளியிட்டார். நீலப்புலிகள் இயக்கத்தின் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் ஓ.எஸ். மணிசேகரன் நூலைப் பெற்றுக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து அப்துர்ரஹ்மான் எம்.பி., ஜே.எம். ஹாரூன் எம்.பி., தேசிய லீக் தலைவர் கோனிகா பஷீர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.ஜி.கே. நிஜாமுத்தீன், சென்னை ஹிதாயா டிரஸ்ட் நிறுவனர் டாக்டர் ஆயிஷா, நீதிபதி குலாம் முஹம்மது,அவர்களின் மனைவி முஜிபு நிசா குலாம் முஹம்மது, அம்பேத்கர் புரட்சி முன்னணியின் தலைவர் வழக்கறிஞர் துறைராஜ், மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் எழிலரசு, கோவை பி.எஸ்.ஜி. மருத்துவக் கல்லூரிப் பேராசிரியரும் நீதிபதி குலாம் முஹம்மது அவர்களின் புதல்வருமான டாக்டர் ஜி.எம். முஹம்மது ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

இறுதியாக நீதிபதி ப. குலாம் முஹம்மது அவர்கள் ஏற்புரை நிகழ்த்தினார்கள்.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், அல்லாஹ்வின் மார்க்கமாம் இனிய இஸ்லாத்தைப் பட்டி தொட்டி யெல்லாம் பிரச்சாரம் செய்வதை வாழ்வில் லட்சியமாகக் கொண்டு செயல்படும் அழைப்பாளர்கள், சமுதாயப் பிரமுகர்கள், சமூகப் போராளிகள், களப்பணியாளர்கள், சீர்காழி இஸ்லாமிய நண்பர்கள் குழுவினர் உள்ளிட்டவர்கள், ஏராளமாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தாருல் இஸ்லாமின் பெண்கள் பிரிவான மஜ்லிஸ் நிசாவைச் சார்ந்த சகோதரிகள் உள்ளிட்ட பெண்களும் பங்கேற்று நிகழ்வைச் சிறப்பித்தனர் பெண்களுக்கு தனி இடவசதி செய்யப்பட்டிருந்தது.

லுஹர் தொழுகைக்குப் பின் மதிய உணவு விருந்தில் அனைவரும் பங்கேற்று சிறப்பித்தனர்.

நிகழ்வைத் தொகுத்து வழங்கிய வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்கள் சீர்காழி இஸ்லாமிய நண்பர் குழுவினர் ஆடிட்டர் அப்துற் ரஹ்மான் ஆகியோர் முயற்சிகளை ஒத்துழைப்புகளை நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

விழா ஏற்பாடுகளை வைகறை வெளிச்சம் வாசகர் வட்டத்தினர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். நன்றியுரையுடனும் துஆவாவுடனும் நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

# மேட்டுப்பாளையத்தில் பெருநாள் சந்திப்பு.

# நிகழ்ச்சிக்கு காவல்துறை தடை...!!

தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட், வைகறை வாசகர் வட்டம், இவற்றின் சார்பில் 18-12-2011 அன்று மேட்டுப்பாளையத் (கோவை மாவட்டம்) தில் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக பெரும் செலவில் விளம்பரங்கள் செய்யப்பட்டிருந்தன.

மேட்டுப்பாளையம் காவல்துறை கண்காணிப்பாளர், சோமசுந்தரன் இதை நடக்கவிட மாட்டேன் என பிடியாய் இருந்தார்.

இத்தனைக்கும் நிகழ்ச்சி பொதுக் கூட்டம் அல்ல, அரங்க நிகழ்ச்சி! அரங்க நிகழ்ச்சிக்கே காவல் துறையினர் அனுமதி மறுக்கின்றனர்.

நேரடியாக தாருல் இஸ்லாம் பொறுப்பாளர்களிடம் சொல்லாமல் அரங்கத்தின் உரிமையாளர்களிடம் சென்று மிரட்டி இருக்கின்றார். நிகழ்ச்சியை நடக்கவிட்டால் நான் அரங்கத்தை கைப்பற்றிவிடுவேன் எனக் கூறி இருக்கின்றார்.

தாருல் இஸ்லாம் பொறுப்பாளர்களும் வைகறை வாசகர் வட்டத்தைச் சார்ந்தவர்களும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் நிகழ்ச்சியை நடக்கவிடமாட்டேன் என்பதில் பிடிவாதமாக இருந்தார். இத்தனைப் பிடிவாதமும் தனக்குச் சற்றும் அதிகாரமில்லாத ஓர் எல்லையில்

நிகழ்ச்சி 18-12-2011 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் (பி.ஜே.பி) பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள் 17-12-2011 அன்று பொதுக் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

பொதுக் கூட்டத்திற்கும், அரங்க நிகழ்ச்சிக்கும் அறவே சம்மந்தமில்லை. அடுத்து பொதுக் கூட்டம் அரங்கத்திலிருந்து வெகு தூரத்திற்கப்பால் தான் நடைபெற்றது. பாரதீய ஜனதா கட்சியின் பொதுக் கூட்டம். நாம் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து அறிவிப்புகள் பதாகைகள், சுவரொட்டிகள், சிற்றேடுகள் இவற்றையெல்லாம் விநியோகித்தப் பின்னரே ஏற்பாடாகி இருக்கின்றது.

ஆனால் இந்தப் பொதுக் கூட்டத்தைக் காரணம் காட்டி அரங்கத்தில் நடக்கவிருந்த பெருநாள் நிகழ்ச்சியைத் தடைசெய்ய தம்மால் இயன்றதையெல்லாம் செய்தார் இன்ஸ்பெக்டர் சோமசுந்தரன். வேண்டுமானால் திங்கள்கிழமை நடத்திக் கொள்ளுங்கள் என ஏலம் போட்டார். மொத்தத்தில் தமிழக முதலமைச்சர் மேட்டுப்பாளையத்தின் மொத்த ஆட்சியையும் இவரிடம் ஒப்படைத்துவிட்டதைப் போல் அடாவடித் தனங்களில் ஈடுபட்டார்.

17-12-2011 அன்று, பாரதீய ஜனதா கட்சியினர் கூட்டம் முடிந்து கடைசி நபர் வரைக்கும் பிரிந்து சென்றபின், நமது அரங்கம் இருந்த இடத்திற்கு வேண்டுமென்றே சென்று அரங்க மேலாளரை மிரட்டி இருக்கின்றார். மொத்தத்தில் அரங்க மேலாளரை ஓர் உலுக்கு உலுக்கிவிட்டார்.

அரங்க மேலாளர் நமது சார்பில் விஷயங்களை விபரமாக எடுத்துச் சொல்லி இருக்கின்றார். அவர்கள் வருடந்தோறும் இதே அரங்கத்தில் பெருநாள் சந்திப்புகளை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஏராளமான இந்துக்களும் இதர சமயத்தவர்களும் கலந்து கொள்கின்றார்கள். நிகழ்ச்சிகள் விருந்துடன் இனிதே முடிவடைந்திருக்கின்றன. எந்தப் பிரச்சனையும் வந்ததில்லை எனக் கூறி இருக்கின்றார்.

அரங்க மேலாளர் தந்த விளக்கத்தைச் சற்றும் சட்டை செய்யாமல் அரங்கத்தில் காலையில் நிகழ்ச்சியை அனுமதித்தால் அரங்கத்தை "சீல்" வைத்துவிடுவேன் என மீண்டும் மூர்க்கத் தனமாக மிரட்டி இருக்கின்றார்.

நமது வழக்கறிஞர் கே. ஐ. பழனிச்சாமி அவர்கள் தான் நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர். அவர் 12-12-2011 அன்று சென்னையிலிருந்தார். ஆகவே அவர் மூலம் மூத்த வழக்கறிஞர் சங்கரன் அவர்கள் வழி உயர் நீதி மன்றத்தின் பார்வைக்கு மொத்த விவகாரத்தையும் கொண்டு செல்ல முயற்சி எடுத்தோம்.



இந்த முயற்சி பலன் தந்தது (அல்ஹம்ந்துலில்லாஹ்) அடுத்த நாள் காலை (18-12-2011) அன்று 9மணிக்கு அரங்கம் நம்மிடம் ஒப்படைக் கப்பட்டது. சரியாக 10:20 மணிக்கு நிகழ்ச்சிகள் தொடங்கின.

நிகழ்ச்சியில்

கலந்து கொள்கின்ற சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு விருந்து ஏற்பாடு செய்யவிடாமல் தடுத்தார் மேட்டுப்பாளையம் இன்ஸ்பெக்டர் சோமசுந்தரன். முந்திய இரவு மண்டபத்திற்கு வந்தார். நமக்கு மண்டபம் ஒப்பந்தப்படி மறுநாள் காலை 9 மணிக்குத்தான் தரவேண்டும் என்றார் ஆனால் மண்டபத்தில் மரபு வாடகைக்கு எடுப்பவர்களிடம் சமையற்ட்டை முந்தைய நாளே ஒப்படைத்து விடுவார்கள்.

ஆனால் காவல்துறை ஆய்வாளர் சோமசுந்தரனாரின் திருவிளையாட்டால் அவ்வாறு ஒப்படைக்கவில்லை அதையும் சோம சுந்தரனார் இதைப் பார்த்துவிட்டுப் போய்விட்டார்.

ஆனால் தாருல் இஸ்லாம், வைகறை வாசகர் வட்டம் நண்பர்கள் தனியாக தங்களுக்குச் சொந்தமான இடத்தில் வைத்து சமைத்து விட்டார்கள்.காலையில் நிகழ்ச்சி தொடங்கி நடந்து கொண்டிருக்கும் போதே உணவு அங்கே வந்துவிட்டது. கலந்து கொண்ட அனைவருக்கும் அழகியமுறையில் விருந்து வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியை தம்பி பைசல் திருக்குர்ஆனை ஓதி பொருள் படித்து தொடங்கி வைத்தார்.

சிறப்பு விருந்தினர் கே. ஐ. பழனிச்சாமி அவர்கள் தனது உரையை முதலில் நிகழ்த்தினார், அதில் வைகறை வெளிச்சம் ஆசிரியர் தந்த உற்சாகத்தால் தான் எழுதிய 'சட்டமும் நாமும்' தொடரை நினைவு கூர்ந்தார். அதன் மூலம் மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வையும், தனது பெயர் பிரபல்யமானதையும் நினைவு கூர்ந்தார் நன்றியுடன்.

இப்போது வைகறை வெளிச்சத்தில் வாசகர்கள் சட்டம் சம்மந்தமாக கேள்விகளைக் கேட்டால் தான் பதில் சொல்ல தயாராக இருப்பதாகவும் கூறினார். அதுபோல் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினால் தான், இதுபோன்ற காவல்துறை கெடுபிடிகளை எளிதில் சமாளிக்க முடியும் என்றார்.

## டி.எம். உமர் ஃபாரூக்:

அன்பு சகோதரர், தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் செயல் வீரர்களில் ஒருவர் டி.எம். உமர் ஃபாரூக். அவர்கள் அடுத்து உரை நிகழ்த்தினார்கள்.

அடுக்கடுக்கான ஆதாரங்களோடு, இஸ்லாம் எப்படி வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் வழிகாட்டுகின்றது என்பதை தெளிவுபடுத்தினார். பெரியாரையும் அம்பேத்காரையும் பேசிக் கொண்டிருப்பவர்கள், இனியும் காலந்தாழ்த்தாமல் இஸ்லாத்தை ஏற்று நிரந்தர விடுதலை அடைந்திட வேண்டும் என அன்பாக அனைவரையும் அழைத்தார்.

தொடர்ந்து வைகறை வெளிச்சம் ஆசிரியர் - இஸ்லாத்தை மிகவும் விளக்கமாகவும் விரிவாகவும் பேசினார்.

தொடர்ந்து கேள்விப்பதிலுக்கான நேரம் ஒதுக்கப்பட்டது. கேள்விகளுக்கும் அவரே பதில் சொன்னார். நிகழ்ச்சியின் முடிவில் நான்கு பேர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அல்ஹம்து லில்லாஹ். சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் பெருமளவில் கலந்து கொண்டார்கள்.

## மாலை நிகழ்ச்சி:

## குண்டுவெடிப்புகள் யாரால்.? யாரால்.........??

இந்தத் தலைப்பில் வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது உரை நிகழ்த்தினார்.

மாலை நிகழ்ச்சியின் தலைப்பால் அரண்டு போன காவல்துறையினர். மக்களிடையே மாலையில் நிகழ்ச்சி இல்லை என்றொரு பெரும் வதந்தியைப் பரப்பி இருந்தார்கள்.

அத்தோடு நமது அரங்கத்தின் வாசற்படியை அடைத்தாற் போல் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு பொது கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து தந்திருந்தார்கள்.

அனைத்துத் தடைகளையும் கடந்து மக்கள் பெருமளவில் கலந்து கொண்டார்கள். குறிப்பாகப் பெண்கள் பெருமளவில் கலந்து கொண்டார்கள்.

## மக்கள் சொன்ன செய்தி:

சிலபல ஆண்டுகளுக்கு முன்னால் திருச்சியில் விசுவ ஹிந்த் பரிஷத் தலைவர் தொகாடியா கலந்து கொண்ட மாநாட்டில் தொண்டர்களுக்கு திரிசூலங்கள் வழங்கப்பட்டன.

அதிலிருந்த மூன்று கூர்முனைகளுக்கும் விளக்கம் சொன்னவர்கள், ஒரு முனை முஸ்லிம்களைக் கொலைசெய்ய, இன்னொரு முனை கிருஸ்தவர்களை கொலைசெய்ய, மற்றொரு முனை இந்துத்துவாவை எதிர்க்கும் இந்துக்களை அழிக்க எனக் கூறினார்கள்.

ஆய்வாளர் சோமசுந்தரனார், திருச்சியில் நடைபெற்ற அந்த இந்துத்துவ மாநாட்டில், "பேண்ட்" மாஸ்டராக இருந்தவர் என்று மக்கள் பரவலாகப் பேசிக் கொண்டார்கள்.

இதுபோன்ற பாசிச சிந்தனை கொண்டவர்கள் அரசு துறையில் பணியாற்றிட சட்டத்தில் இடமில்லை.

தமிழக அரசு முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என எதிர்ப்பார்ப்போம்.

**மேட்டுப்பாளையத்தில் இருந்து நமது நிருபர்.**

# டாக்டர் அம்பேத்கர் கொள்கை விளக்கப் பேரவை.

# கடலூரில் நடத்திய "சாதி ஒழிந்தது" நூல் அறிமுக விழா

இந்நிகழ்ச்சி *28-11-2011* அன்று கடலூரிலுள்ள டவுன் ஹாலில் நடைபெற்றது.

இது சாதி ஒழிந்தது என்ற நூலின் *26* வது அறிமுக நிகழ்ச்சி.

நிகழ்ச்சிக்கு ஜே. பாலசுப்பிரமணியம் எம்.ஏ., பி.எட். அவர்கள் தலைமை தாங்கினார்கள். பாலசுப்பிரமணியம் அரசு துறையில் தலித் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு முறையாகப் பின்பற்றப்பட்டு வருகின்றதா? என்பதை கண்காணித்து வருபவர் இதற்காக அவர், மெத்த சிரமங்களோடு புள்ளிவிபரங்களைச் சேகரித்து வருகின்றார்.

பத்திரிகையாளர் தலித் விடுதலை இதழின் ஆசிரியர் அவர்கள் கருத்துரை நிகழ்த்தினார்கள்.

நூலையும் இஸ்லாத்தையும் அறிமுகப் படுத்திய வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

நூல் விமர்சனங்களை வழக்கறிஞர் ஓ. எஸ். மணிசேகரன், தொலை தொடர்பு அதிகாரி பொன்னுசாமி, முனைவர் தில்லை நாதன், புரட்சிமணி ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

நீதி அரசர் பா. குலாம் முஹம்மது அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள், டி.எம். உமர் ஃபாரூக், அவர்கள்தாம் நூலின் ஆசிரியர் அவர்கள் ஏற்புரை வழங்கினார்கள்.

மதியம் உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்ச்சி ஞாயிற்றுக் கிழமை அல்லாமல் திங்கள் கிழமை தான் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. என்றாலும் பெருவாரிகயாக அரசு அலுவலர்கள் இதில் கலந்துகொண்டார்கள்.

கலந்துகொண்டவர்கள் அனைவரும் மிகவும் பொறுப்பானவர்களாகவும், அரசு அதிகாரிகளாகவுமிருந்ததால் அவர்களிடம் நூலை விற்பனை செய்திட வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் வந்திடவில்லை. ஆகவே நூல்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியின் சிறப்பம்சம் என்னவெனில் கடலூரைச் சுற்றி பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த தலித் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்திடும் அளவில் அங்குள்ள முக்கியப் பிரமுகர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டதுதான்.

அந்த இடங்கள், வடலூர், பண்ருட்டி, பூண்டியம் குப்பம், தியாகவள்ளி, விருதாச்சலம், மான்தோப்பு, ஆலப்பாக்கம், கடலூர், பின்னலூர் ஆகியவையாகும்.

அதேபோல், பல தலித் அமைப்புகளும் கலந்து கொண்டன. அவை தலித்சேனா, தலித் அரசு ஊழியர்கள் பெடரேஷன், தலித் நீலப்புலிகள் இயக்கம், அம்பேத்கர் பேரவை, அம்பேத்கர் மக்கள் இயக்கம், ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

கலந்துகொண்டவர்கள் கேட்ட கேள்விகளுக்கு தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் இன் தலைவர் மு. குலாம் முஹம்மது அவர்கள் பதில் சொன்னார்கள்.

**கடலூரிலிருந்து நமது செய்தியாளர்.**


இப்போது பரபரப்பான
விற்பனையில்......

....யுவான்னி ரிட்லி எழுதிய....

**தாலிபானின் பிடியில்**

***9/11 பிறகு பின்லேடன் அவர்களை சந்தித்து விட வேண்டும். ஏன் இந்தத் தாக்குதலை நடத்தினீர்கள் என்று கேட்டுவிட வேண்டும் என ஆசைப்பட்ட ஒரு பத்திரிகையாளர்.***

***கள ஆய்விற்குப் பிறகு இந்த ஈனச் செயலை செய்யும் அளவிற்கு இவர்கள் ஈரமில்லாதவர்கள் அல்ல என்றுகூறி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட வரலாறு.***

**விலை 80**

**மு. குலாம் முஹம்மது அவர்களின் இனிய தமிழ் நடையில்....**

**வேர்கள் வெளியீட்டகம்**
**சென்னை.**

# அப்சல் குரு தூக்கிலிடப்படத்தான் வேண்டுமா..? 2.



இந்தியாவில் குண்டுவெடிப்புகள், தீவிரவாத தாக்குதல்கள் இவை வித்தியாசமான பல திருப்பங்களைச் சந்தித்து வருகின்றன.

காரணம், இந்துத்துவவாதிகள் பலர் கைது செய்யப்பட்டு வருகின்றார்கள்.

ஆனால், நமது அரசுக்கு இரகசிய ஆலோசனைகளை வழங்கிடுவோர் பல குண்டு வெடிப்புகளை நடத்தி அவற்றில் முஸ்லிம்களைச் சம்மந்தப்படுத்தி வருகின்றார்கள்.

டிசம்பர் 6 ஐ மையப்படுத்தி ஒரு பெரும் கபளீகரத்தை நடத்தி முடித்துவிட்டார்கள். முஸ்லிம்களை இன்னொரு முறை மூச்சுத்திணறவைத்து விட்டார்கள். ஆனால் டிசம்பா 6 நாடெங்கும் அமைதியாகவே கழிந்தது, உளவுத்துறையும் காவல்துறையும் ஏற்படுத்திய கபளீகரங்களைத் தவிர. ஏற்படுத்திய பரபரப்பைப் பயன்படுத்தி, பல அப்பாவி முஸ்லிம்களைக் கைதும் செய்துவிட்டார்கள்.

இந்நிலையில் மும்பைத் தாக்குதல், கஷ்மீரைச் சார்ந்த அப்பாவி அப்சல் குரு ஆகியோர் பற்றிய செய்திகளும் நமது ஊடகங்களை ஆக்கிரமித்துக் கொண்டன.

இதில் முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி கொலையில் தண்டனைப் பெற்ற பேரறிவாளன், சாந்தன், முருகன் இவர்களை தூக்கிலிருந்து காப்பாற்றிட பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களைப் காப்பாற்றிட முயற்சிகளை மேற்கொண்டவர்கள், அப்சல் குருவைப் பற்றியும் பேசினார்கள். இன்னும் ஒரு படிமேலே போய் தூக்குத்தண்டனைக்கு எதிராக ஒரு போர்க்கொடியைத் தூக்கினார்கள். இந்த இயக்கம் இன்றளவும் நடைபெற்றுவருகின்றது

ஏற்கனவே தூக்குத் தண்டனையை எதிர்த்துக் கொண்டிருந்தவர்களும் இதில் கலந்து கொண்டனர். அப்சல் குருவின் வழக்கு, இன்னும் விசித்திரம் நிறைந்தது. அப்சல் குருவை தூக்கில் போட்டிட நமது உச்ச நீதி மன்றம் எந்த உருப்படியான காரணத்தையும் சொல்லவில்லை. சொன்ன காரணம் இதோ !

"பெரும் (உயிர்)இழப்புகளுக்குக் காரணமான இச்சம்பவம் தேசம் முழுவதையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. குற்றவாளிக்கு மரணதண்டனை அழிப்பதன் மூலமே சமூகத்தின் கூட்டுமனசாட்சியைத் திருப்திப்படுத்த முடியும்" உச்ச நீதி மன்றத் தீர்ப்பின் மொழிபெயர்ப்பு.

நமது இந்திய தண்டனைச் சட்டத்தில், இப்படிக் காரணம் சொல்லி ஒருவரைத் தூக்கில் போடலாம் என்று எங்கேயும் சொல்லிடவில்லை. என்கின்றனர் சட்டமேதைகள்.

ஆனால் நம் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தாங்கள் சொல்வதெல்லாம் சட்டம், இதில் நாங்கள் எந்த நீதி நெறியையும் பின்பற்றிடத் தேவை இல்லை என்ற பாங்கிலேயே தீர்ப்புகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில் தான் பிரிதொரு விவகாரம் வெளிச்சத்திற்கு வந்தது.

# பாகிஸ்தானில் குண்டு வைத்த இந்தியர்.

அதாவது ஜேராப் சிங் என்பவர் இந்திய குடிமகன். பாகிஸ்தானில் வாழ்ந்து வந்தவர்.

இவர் 1990 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் ஒரு தொடர் குண்டுவெடிப்பை நிகழ்த்தினார். இந்தக் குண்டுகள் வெடிப்புகள் பாகிஸ்தானிலுள்ள முக்கிய நகரமாகிய லாகூர், முல்டான் ஆகிய இடங்களில் நடை பெற்றன 14பேர் உயிரிழந்தார்கள்.

'ஜேராப் சிங்' இன் இயற்பெயரை 'மிகச் சிலரே' அறிவார்கள். அவர் "ஜால்சித் சிங்" என்ற பெயரிலேயே பாகிஸ்தானில் உலவிவந்தார்.

குண்டு வெடிப்பு நடந்த பல நாள்களுக்குப் பின்னர்தான் இவரே குண்டுவெடிப்புகளின் மூளை என்பதும் இவருடைய இயற்பெயர் "ஜோராப்ஜித் சிங்" என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

வழக்கு கீழ் நீதிமன்றத்தில் நடைபெற்றது. இவர், தான், குண்டு வைக்க திட்டமிட்டதிலிருந்து அனைத்தையும் செய்தார் என்பது நிரூபிக்கப்பட்டது. 14 அப்பாவி பாகிஸ்தானிய குடிமக்கள் மரணத்திற்குக் காரணமான இவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.பின்னர் பாகிஸ்தானின் உச்ச நீதி மன்றமும் இந்த மரண தண்டனையை உறுதி செய்தது.

ஆனால் மரண தண்டனை நிறைவேற்றப் படவில்லை, காரணம் நமது இந்திய அரசு மனிதாபிமானத்தின் அடிப்படையில் அவரை விட்டுவிட வேண்டும் என பாகிஸ்தான் அரசைக் கேட்டுக் கொண்டதுதான்.

இரண்டு முறை "ஜோராப்ஜித் சிங்" ஐ தூக்கில் போட்டிட நாள் குறிப்பிடப்பட்டு இரண்டு முறையும் மனிதாபிமானத்தின அடிப்படையில் தள்ளிப் போடப்பட்டது. நமது இந்திய அரசின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால் "ஜேராப்ஜித் சிங்" இன் குடும்பத்தவர்கள் அவரை சிறையிலிருந்தே விடுவிக்க வேண்டும் எனக் கோரி வருகின்றார்கள்.

ஆனால்....!

அப்சல் குரு நம் நாட்டின் குடிமகன்தான்.

அவர் சட்டப்படி குற்றவாளி என்பது நிரூபிக்கப்படவில்லை. அவரைத் தூக்கிலிட நமது உச்ச நீதி மன்றம் கூறியுள்ள காரணத்தை நம் நாட்டில் யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. நம் நாட்டில், மக்களைத் திருப்திபடுத்திட ஒருவரை தூக்கிலிடுவது இதுதான் முதல் முறை. அவர் முஸ்லிமாக இருப்பதாலும் கஷ்மீரைச் சார்ந்தவராக இருப்பதாலும் தூக்கிலிட அவர் இரட்டிப்புத் தகுதிகளைப் பெற்றுவிடுகின்றார்.

இதில் வேதனை என்னவெனில் பாகிஸ்தானில் குண்டு வைத்த குடிமகனுக்கு மனிதாபிமானம் காட்டப்பட வேண்டும் எனக் கோரும்நாம் அப்சல் குருவை சட்டப்படி நடத்தவே தயங்குகின்றோம். நமது உச்ச நீதி மன்றத்தின் கூற்றுப்படி நம் சமுதாயத்தின் மனம் திருப்தியடைய அப்சல் குரு தூக்கில் போட வேண்டும்.

ஐந்தறிவு படைத்தவை கூட சமயத்தில் நீதியோடு நடந்திடும்போலும்.

அப்சல் குருவை சம்மந்தப்படுத்தியுள்ள நாடாளுமன்றத் தாக்குதல் குறித்து "PUDR" People's Union For Democratic Rights ஜனநாயக உரிமைகளுக்கான மக்கள் குழுமம் தந்த அறிக்கை நாடாளுமன்றத் தாக்குதல். கஷ்மீரில் இயங்கிக் கொண்டிருந்த அரசு சிறப்புப் படையின் கை வண்ணம் என்கின்றது. அந்த உண்மை இன்னும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதை மீண்டும் இங்கே தருகின்றோம்.

Finally, Parts of afsal's 313 When Conjoined and Interpreted, raise dark issues about the complicity of the security agencies in the conspiracy

அதாவது "அப்சல் குருவிடம் 313 (CRPC) இன் கீழ் வாங்கப்பட்ட வாக்குமூலத்தை இதர சாட்சியங்களோடு ஒப்பிடும் போது (நாடாளுமன்ற தாக்குதல்) சதியில் பாதுகாப்புப் படையினரும் உண்டு என்ற கசப்பான உண்மைப் புலப்படுகின்றது"

SOURCE : DECEMBER 13 TERROR OVER DEMOCRACY PAGE 47 A DOCUMENT BY PUDR .

இந்த வழக்கில் வாதிடும் போது தான் முன்னாள் சட்ட அமைச்சர் இராம் ஜெத்மலானி இப்படிப் பேசினார்.

This is case of no evidence. The Law of evidence has been Treated as non existent. The provisions of the code of Criminal procedure and Evidence act have been Flagrantly Violated..

எந்த அத்தாட்சியுமில்லாத வழக்கு இது. சாட்சியத்திற்கான சட்டம் ஒன்று இல்லை என்ற அளவுக்கு சாட்சியத்திற்கான சட்டங்கள் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளன. அதேபோல் குற்றத்தை நிரூபிக்கப் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகளும் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இத்தனைக்கும் பிறகும் அப்சல் குரு தூக்கிலிடப்படத்தான் வேண்டுமா....?

அவருக்கு அனுதாபம் காட்டச் சொல்லவில்லை மடிப்பிச்சைக் கேட்கவில்லை. மாறாக சட்டத்தின் படி நீதி வழங்ககோருகின்றார்கள் மக்கள்.

செய்தி ஆதாரம்....

THE HINDU SEPT 1,2011, NOV 12,2011.

மேலும் விபரங்களுக்குப் படியுங்கள். வேர்கள் வெளியீட்டகத்தின் வெளியீடான, "நாடாளுமன்றத் தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள்"

# பாகிஸ்தானின் தகிடுதத்தங்கள்.

பாகிஸ்தான் ஆட்சியாளர்களைப் போல் தன் சொந்த மக்களுக்குத் துரோகம் செய்தபர்கள் இந்த உலகில் வேறு எங்குமில்லை.

"பர்வேஷ் முஷ்ரப்" என்ற சர்வாதிகாரி ஆட்சி செய்தபோது, பாகிஸ்தானின் அப்பாவி இளைஞர்களைப் பிடித்து அமெரிக்காவிடம் தந்தார். அவர்களைத் தீவிரவாதிகள் என்றும், அல்காயிதா என்ற அமைப்பின் அங்கத்தினர்கள் என்றும் முத்திரைக் குத்தித்தான் அமெரிக்காவிடம் ஒப்படைத்தார்.

இவர்கள் கவுண்டனாமோ சிறைகளுக்கு அனுப்பப்பட்டு சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்டார்கள்.

அப்பாவிகளான அந்த இளைஞர்கள் தங்களைத் தீவிரவாதிகள் என ஒத்துக் கொண்டு வாக்கு மூலங்களைத் தந்திடும் வரை சித்திரவதைகள் தொடர்ந்தன. ஒவ்வொரு இளைஞனுக்கும் இத்தனை டாலர்கள் என லஞ்சம் பெற்றார் முஷ்ரப். தான் சொந்தமாக லஞ்சம் வாங்கியது அல்லாமல், பாகிஸ்தானுக்கும் பணம் பெற்றார்.

அமெரிக்காவும் பாகிஸ்தானுக்கு தாராளமாகப் பணத்தை அள்ளிக் கொட்டியது. அமெரிக்கா தனது மக்களிடமும், மகான்களிடமும் பாகிஸ்தானுக்குத் தாரை வாாக்கப்படும் பணம் தீவிரவாதத்திற்கு எதிரானப் போரில், பாகிஸ்தானை இணைத்திட தரப்படும் உதவிகள் என விளக்கம் சொன்னார்கள்.

அமெரிக்கா பாகிஸ்தானின் மதரஸாக்கள்தாம் ஆப்கானிஸ்தான் முஜாஹித்களை உருவாக்குகின்றது என்றார்கள். அந்த மதரசாக்களை அழிப்பதற்கு ஆவன செய்தார்கள் அமெரிக்கர்கள். தாராளமாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டு, தனது விமானத்தளங்களையும், போர் விமானங்களையும் அமெரிக்கர்களுக்குத் திறந்துவிட்டார் முஷாரஃப்.

பல பாகிஸ்தான் போர் விமானங்கள் பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் எல்லையோரத்திலுள்ள மதரசாக்களை நோக்கிப் பறந்தன. ஒரே இரவில் 800 மதரஸா மாணவர்களும் ஆசிரியர்களும் குண்டுவீச்சுக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள்.

இப்போது பாகிஸ்தானை ஆட்சி செய்து கொண்டிருப்பவர்கள், இந்த முஷாரஃப்புக்குச் சற்றும் இளைத்தவர்களல்ல.

## கேசாப்- ஐ தூக்கிலிடுங்கள்...

இப்போது இப்படியொரு கூப்பாட்டை போடுபவர்கள் பாகிஸ்தானின் ஆட்சியாளர்கள் தாம். அவர்கள் இப்படி ஒரு கூப்பாட்டைப் போடுவது கேசாப் குற்றவாளி என்பதால் அல்ல, மாறாக கேசாப் போன்றவர்களைத் தூக்கிலே போட்டால் ஜோராப்ஜித் சிங் போன்றவர்களைத் தூக்கிலே போடலாம் என்பதால்தான்.

ஆனால் கேசாப் மும்பை தாக்குதல் நடந்த 2008 க்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே 2006 முதலே நம்மவர்களின் கைகளில் இருக்கின்றார். அவருக்கும் மும்பைத் தாக்குதலுக்கும் எள் மூக்கின் முனை அளவு கூட தொடர்பில்லை. இந்த உண்மைகளை எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூலில் தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள். ஆனால் பாகிஸ்தான் வழக்கம் போல் தன் சொந்த குடிமக்களின் உயிரை தன் சுயநலத்திற்காக பகடைகாயாகப் பயன்படுத்துகின்றது.

உண்மையிலேயே பாகிஸ்தான் நகர்த்திய பல காய்கள் நமது இந்திய அரசுக்கும், தீவிரவாதத்தின் உண்மை முகமாகிய, சங்கப் பரிவாரத்திற்கும் பயங்கர நெருக்கடிகளைத் தந்து கொண்டிருக்கின்றன.

ஆமாம் ! நமது இந்திய அரசை நோக்கி நீங்கள் கேசாப் -ஐ தூக்கில் போடுங்கள் அதே வேகத்தில் 'ஷம்ஜோத்தா' ரயிலில் குண்டு வைத்த இந்துத்துவ வாதிகளையும் தூக்கில் போடுங்கள் எனக் கேட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால் இந்த அரசியல் நரித்தனங்களுக்கு இந்திய குடிமக்களாகிய நாமும், பாகிஸ்தான் மக்களும் எந்த ஆதரவையும் தந்திடவில்லை. காரணம் இரண்டு நாட்டுக் குடி மக்களும் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், எந்த நிலத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். அதேபோல் அப்பாவிகள் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் எந்த நிலத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் காப்பாற்றப் படவேண்டும் இதில் அரசியல் விளையாட்டுகள் அர்த்தமற்றவை.

நீதி நிலைக்கட்டும். அல்லாஹ் கூறுகின்றான்:

"அல்லாஹ்வை நம்பி ஏற்றுக் கொண்டவர்களே ! நீதியை நிலை நாட்டுவதற்காக, அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு, நீதி செய்யாமலிக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள் இதுவே அல்லாஹ்வை அஞ்சுகின்றீர்கள் என்பதற்கான அடையாளமாகும். அல்லாஹ் நீங்கள். செய்பவற்றையெல்லாம், நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்."

**(அல்குர்ஆன் 5:8)**

**- எம்.ஜி.எம்.**

## புதைக்கப்பட்ட மக்கள்: மறைக்கப்பட்ட வரலாறு :

# பெய்ரூத்திலிருந்து ஜெரூசலம் வரை !!!


### டாக்டர். ஆங்ச்சுவீ

### தமிழில் : மு. குலாம் முஹம்மது




டாக்டர். அங்சுவீ

'நான் காஸா' மருத்துவமனை வந்தபோது அங்கே ஓர்காட்சி. ஆமாம் அந்த மூன்று வீராங்கனைகளும் (அஜீசாஹாலித், ஹாட்லா, உம்முவாலித்) இன்னும் சில பெண்களுடன், அந்த காஸா மருத்துவமனையின் இடிபாடுகளோடு இடிபாடாய் நின்று அவற்றை ஒதுக்கிக் கொண்டிருந்தார்கள்.

'ஹாட்லா' "உம்முவாலித்" மங்கையர் திலகம் அஜீசா ஹாலித் ஆகியோர் நன்றாகத் தேர்ச்சிப் பெற்ற மருத்துவர்கள். ஆனால் சாதாரண சுகாதார சிப்பந்திகளைப் போல் அவர்கள் அங்கே இடிபாடுகளை அகற்றிக் கொண்டிருந்தார்கள்.

தூசும், துகள்களும் அவர்களின் தோற்றத்தை மறைத்து நின்றன.

இவர்கள், இங்கே என்ன சாதித்துக் கொண்டிருக்கின்றார்கள். முறையான இயந்திரங்கள் இல்லாமல் இவர்களால் மொத்த இடிபாடுகளையும் மாற்றிட இயலுமா? என்பன போன்ற கேள்விகள் என்னைத் துளாவின.

எதற்கும் சிந்திப்பதற்கோ, கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருப்பதற்கோ நேரமில்லை, இடிபாடுகளை அகற்றிடும் அந்தக் குறும்படையுடன் நாமும் இணைந்திட வேண்டியதுதான் என நான் களத்தில் குதித்தேன். என்னைத் தொடர்ந்து என்னோடு வந்த பெண்களும் களத்தில் குதித்தார்கள்.

அத்தனைபேரும் காஸா மருத்துமனையின் இடிபாடுகளை அகற்றிட ஆவன செய்தோம். ஒரு தளத்தை அல்லது அந்தத்தளத்தின் பாதியை செம்மையாக்கி விட்டால் அதனை தற்காலிக மருத்துவமனையாக மாற்றிடலாம் என்பது அஜீசா, ஹாட்லா, உம்முவாலித் ஆகிய புனித ஆத்மாக்களின் திட்டம்.

நானும் ஏனையோரும் உடன் உழைத்தோம். அத்தனையையும் நாங்கள் செய்து கொண்டிருக்கும் போது காஸா மருத்துவ மனையில் புகுந்து இஸ்ரேலிய இராணுவத்தினர் செய்த கபளீகரங்கள் பளிச்சென தெரிந்தன. அவை குரூரமானவை.

காஸா மருத்துவமனையில் பணியாற்றிக் கொண்டிருந்த பல தாதிப்பெண்களைக் கண்டுபிடித்துக் கற்பழித்துக் கொலை செய்து அந்தப் பிணங்களை இடிபாடுகளுக்குள்ளேயே.

நாங்கள் அவற்றை அகற்றினோம், அடக்கினோம். அக்கம் பக்கத்தில் வேடிக்கை பார்க்க வந்த சாதாரண மக்கள் எங்களோடு ஒத்துழைக்க மிகவும் தயங்கினார்கள். யாராவது வந்தால் அவர்களை இஸ்ரேலிய இராணுவம் கைது என்ற பெயரில் அழைத்துச் சென்று கொலையும் செய்து விடுவார்கள். இந்த அச்சம் அந்த மக்களை நிரந்தரமாகப் பீடித்துக் கொண்டிருந்தது.

ஆனால் அதனையும் கடந்து சிலர் வந்து அந்தப் பிணங்களை எடுத்து அடக்கிட உதவினார்கள் அத்தோடு அங்கிருந்து அகன்று விட்டனர். இஸ்ரேலிய இராணுவத்தைப் பற்றிய பயமும், பீதியும் அனைவரையும் தொற்றிக் கொண்டிருந்தது.

'காஸா' மருத்துவமனையைப் புனர்நிர்மானம் செய்திட ஒரு கூட்டம், இளைஞர்கள் களமிறங்கினால் ஓரிரு நாள்களுக்குள் அனைத்தையும் புனர்நிர்மானம் செய்துவிடலாம். ஆனால் இளைஞர்கள் நிச்சயமாக வரமாட்டார்கள். வந்தால், அவர்களைப் போராளிகள் எனக் கூறி அங்கேயே கொலைசெய்து விடுவார்கள். ஏற்கெனவே போராளிகள் எனக் கூறித்தான். ஷாப்ரா, ஷத்தீலா, அகதிகள் முகாம்களிலிருந்த அத்தனை ஆண்களையும் அகற்றினார்கள். இஃதோர் சர்வதேசிய ஏற்பாடு. ஆகவே இளம் பெண்கள்தாம் அந்த காஸா மருத்துவனையைப் புனரமைப்புச் செய்யும் பணிகளைச் செய்திட வேண்டியவர்களானார்கள். ஆனால் அவர்களில்

# இளைஞர்கள் நிச்சயமாக வரமாட்டார்கள். வந்தால், அவர்களைப் போராளிகள் எனக் கூறி அங்கேயே கொலை செய்துவிடுவார்கள்.

இஸ்ரேலிய இராணுவத்தினர் மூன்று நாட்கள் செய்த படு கொலைகளிலிருந்து தப்பித்தவர்கள் மிகவும் குறைவு.

நானும், நல்ல உள்ளங்கொண்ட வெளிநாட்டுப் பெண்கள் - டாக்டர்கள் (இவர்கெளெல்லாம், நிவாரண பணிகளுக்காக வந்தவர்கள்) இவர்கள்தாம், இப்போது காஸா மருத்துவமனையைப் புனரமைத்துக் கொண்டிருந்தோம்.

நான்கு முதல் ஐந்து மணிநேரம் ஓயாமல் உழைத்தபின் முதல் தளத்தின், ஒரு சிறுபகுதி சுத்தமானது. அந்தப் புழுதிக்கிடையேயும் இஸ்ரேலிய இராணுவத்தின் கழுகுப் பார்வையிலிருந்து தப்பித்த நொறுங்கிய பாலஸ்தீன மக்கள் ஏதாவது மருத்துவ நிவாரணம் கிடைக்காதா- என்ற நினைப்பில் 'காஸா' மருத்துவ மனை நோக்கி நகர தொடங்கிவிட்டார்கள்.

ஆமாம்! அவர்கள், நகர்ந்தும் உருண்டும், புரண்டுந்தான் வந்து கொண்டிருந்தார்கள்.

இதனை நான் நங்கை நல்லாள் அஜீசாஹாலித்-இன் பார்வைக்குக் கொண்டுவந்தேன், உடனேயே ஒரு சிறு கலந்தாலோசனை. உம்மு வாலித், ஹாட்லா, ஆகியோர் அதில் கலந்து கொண்டார்கள் . என்னையும் அவர்களுள் ஒருவராக எடுத்துக்கொண்டார்கள். இது எனக்கென்னவோ ஒரு பெரும் நாட்டின் அதிபராக என்னை ஆக்கிவிட்டது போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

மேலை நாட்டிலிருந்தும் இன்னும் இதர நாடுகளிலிருந்தும் வந்த டாக்டர்களும் ஒரு முழு மருத்துவ மனையாக 'காஸா' மருத்துவ மனை இயங்கிடத் தொடங்கிய பின்னரே பணி செய்வது என்றும், அதுவும் இஸ்ரேலிய இராணுவம் அனுமதித்த பின்னர் இயங்குவதே சிறந்தது என்றும், முடிவு செய்தார்கள். ஆனால், அஜீசா, ஹாட்லா, உம்முவாலித் ஆகியோர் அந்த நொறுங்கிய மக்களுக்கு உடனேயே நிவாரணம் தேவைப்படுவதால், அந்த மருத்துவ மனையை உடனேயே இயக்கிடுவது என முடிவுசெய்தார்கள். நான், பவுல்முர், அவரைப் போன்ற எண்ணங் கொண்டவர்கள் அனைவரும் இந்த மூன்று வீரமங்கைகளின் முடிவில் எங்களையும் இணைத்துக் கொண்டோம். அவர்களுடன் உறுதியாக நிற்பது என முடிவு செய்தோம்.

ஹாட்லாவும், அஜீசாவும், முழுமையாக இப்போது இடிபாடுகளை அகற்றிய பகுதியையே மருத்துவமனையாக ஆக்கிக் கொண்டிருந்தார்கள்.

ஹாட்லா மருந்துகளைக் கொண்டுவந்து சேர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள். செம்பிறைச் சங்கம், செஞ்சிலுவைச் சங்கம், இவற்றைத்தான் அணுகிட வேண்டும். இவை அல்லாமல், லெபனானைச்சார்ந்த முஸ்லிம் தனவந்தர்கள் தாராளமாக உதவிசெய்திட முன் வருவார்கள் என்றும் பேசிக் கொண்டார்கள்.

செஞ்சிலுவைச் சங்கத்தை உதவிக்காக அணுகியபோது அவர்கள் ஒருபெரும் அணுகுண்டை எடுத்துப் போட்டார்கள் அது, இப்போது காஸா மருத்துவமனை உள்ளிட்ட பகுதிகள் இஸ்ரேலிய இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றன.



அவர்கள் காஸா மருத்துவமனை இயங்குவதை அனுமதிப்பார்கள் எனச் சொல்லிடுவதற்கில்லை இதனால் செஞ்சிலுவை சங்கம் எந்த உதவியையும் செய்வதற்கில்லை. அஜீசா, ஹாட்லா, உம்முவாலித் இன்னும் வெளிநாடுகளிலிருந்து வந்த பெண்கள் இவர்கெளெல்லாம், எங்கள் பாதுகாப்பில் இருக்கின்றார்கள். இவர்கள் காஸா மருத்துவ மனையின் புனரமைப்பில் ஈடுபடுவதால் அவர்கள் எங்கள் பாதுகாப்பு வளையத்தை மீறிவிட்டார்கள். ஆதலால் நாங்கள் அவர்களைப் பாதுகாத்திட இயலாது.....!

இந்தச் செய்தியை செஞ்சிலுவைச் சங்கத்ததினரிடம் நான்தான் செவிமடுத்தேன் அதிர்ச்சியில் நான் நிலைகுலைந்து விடுவேன் போலிருந்தது. சற்றே சுதாரித்துக் கொண்டேன்.

அஜீசாவிடமோ, ஹாட்லாவிடமோ, உம்முவாலித்திடமோ இதை சொல்லிட வேண்டாம் என்றுதான் முதலில் நினைத்தேன்.

ஆனால் அவர்கள் தாங்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின பாதுகாப்பில் இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது. ஏதேனும் பிரச்சனைகள் வந்தால் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சார்ந்தவர்கள் காலைவாரிடத் தயாராக இருக்கின்றார்கள் இதை இந்த பெண்களிடம் சொல்லியாக வேண்டும். அது என் கடமை என்று நினைத்தேன். ஆகவே முதல் வாய்ப்பிலேயே இதை அவர்களிடம் சொல்லிவிட்டேன். ஆனால், வீரமங்கை அஜீசா ஹாலித் அவர்களின் சார்பில் எனக்குப் பதில் சொன்னாள்.

அந்தப் பதில்.,

"நாங்கள் தனித்து இயங்குவதால் செஞ்சிலுவை சங்கத்திற்கு ஏதேனும் பிரச்சனை வந்தால் அவர்கள், நாங்கள் எங்களைத் நாங்களாக செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பிலிருந்து விடுவித்துக் கொண்டோம்" என்று செல்லிடச் சொல் என்றாள்.

என் உயிர் உள்ளளவும் இந்தச் சொற்றொடர்களை நான் மறந்திட இயலாது.அதிசயப்பிறவிகள் இவர்கள்? என மலைத்து நின்றேன்.

அவர்களின் நட்பு, உறவு இவை எனக்குக் கிடைத்த அருள்கொடை என எண்ணிப் பெருமைப்பட்டேன்.

ஏனோ என்னையுமறியாமல் என் கண்கள்பனிந்தன என் பக்கத்திலிருந்த பவுல் மூர், என் கண்ணீருக்குக் காரணம் கேட்டார்.

நான் நடந்ததைச் சொன்னேன்.

'பெண்ணினத்தின் சுடர்கள் இவர்கள்' எனச் சொன்ன அவருடைய கண்களும் நீரால் நிரம்பிற்று. காஸா மருத்துவமனை இந்தப் பெண்கள் காட்டிய வீரத்தாலும், வைராக்கியத்தாலும், புத்துயிர் பெற்றுக் கொண்டிருந்தது.

சற்று நேரத்திற்கெல்லாம் நொடிந்தும், நெறுங்கியும் போன அந்த மக்கள் அதாவது நோயாளிகள், உள்ளே வரத்தொடங்கினார்கள். நாங்கள் தூய்மைப்படுத்திய பகுதிகள், மருத்துவமனையாக இயங்கிடத் தொடங்கியது. எங்களது நிம்மதி அதிக நேரம் நிலைக்கவில்லை.

நாங்கள் சற்றும் எதிர்பாரத விதத்தில் பல புதிய ஊர்திகள் காஸா மருத்துவமனையின் முன் வந்து நின்றன.

**தொடரும்.......**
**இன்ஷா அல்லாஹ்...**

# மேற்கு வங்க முதல்வர்.

## மம்தா ஆட்சியின் மாட்சி..! கல்கத்தாவில் ஒரு காட்சி...!!

அவன் ஓர் இளைஞன்!

அன்றாடங்காட்சிகளின் குடும்பத்தைச் சார்ந்தவன்.அன்று வேலைக்குச் செல்வதற்கு ரெயிலுக்காகக் காத்து நின்றான்.

ரயில் வந்தது.

ஆனால் உள்ளே நுழைய முடியாத அளவுக்கு, கூட்டம் ரயில் நகர்ந்து ஓடிச் சென்று ஒரு பெட்டியின் படிக்கட்டில் காலை வைத்தான். கால் சறுக்கிற்று படிக்கட்டின் பக்கத்திலுள்ள கைப்பிடிகளில் கையை வைத்தான் வழுக்கிற்று. அவ்வளவு தான் படிக்கட்டிலிருந்து நேரே ரயிலுக்குக் கீழேப்போய் விட்டான்

கால்கள் இரண்டும் துண்டாயிற்று.

உடலை சற்றுத் தூரத்தில் இழுத்துக் கொண்டு போய் போட்டது ரயில்.

ரயில் முற்றாக நகர்ந்தவுடன் இந்தக் கோரக் காட்சியைக் கண்டார்கள் எஞ்சியோர். ரயில் பாதுகாப்புப் படையினர் கால்களையும் உடலையும் ஒன்றாக சேர்த்தார்கள். "மால்டா" மருத்துவ மனையில் கொண்டு போய் சேர்த்தார்கள். இது மேற்குவங்க அரசின் பராமரிப்பில் இயங்கிக் கொண்டிருக்கும் மருத்துவமனை.

அரசு மருத்துவ மனை என்பதால் நோயாளிகளுக்கு உரிய படுக்கைகள் இல்லை. ஆகவே வழக்கம் போல் ஓர் துணியை விரித்து தரையில் படுக்க வைத்தார்கள்.

தலையனை இல்லை ! அப்போது மால்டா மருத்துவமனை தாதிப் பெண்களுக்குச் சிறந்ததொரு "உத்தி" உதித்தது.

துண்டிக்கப்பட்ட அந்த இளைஞனின் இரண்டு கால்களையுமே தலையணையாக்கி அவனுக்குப் படுக்கைத் தயார் செய்து தந்திருக்கின்றார்கள்.

அக்கம் பக்கத்திலுள்ள நோயாளிகள் இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்கள், ஆத்திரப்பட்டார்கள் தங்கள் ஆத்திரத்தைப் போராட்டங்களாக மாற்றிக் காட்டினார்கள்.

விவகாரம் மனித உரிமைக் குழுக்களின் பார்வைக்குச் சென்றது. தேசிய மனித உரிமை ஆணையம் அந்த மருத்துவமனையின் தலைமை மருத்துவ அதிகாரிக்கு ஒரு தாக்கீதை அனுப்பியுள்ளது.

இப்படி அல்லல்படும் அன்றாடங்காய்சிகளை வாழ வைக்கின்றார்கள் மேற்கு வங்கத்தில்.

அங்கேதான் அண்மையில் குழந்தைகள் மருத்துவமனை தக்கப் பராமரிப்பின்றி பல குழந்தைகள் இறந்தார்கள். அவை பத்திரிகைகளுக்குச் சிறந்த தீனியாகின. ஆனாலும் அந்த ஏழைப் பாழைகளுக்கு எள்ளளவும் நிவாரணம் கிடைக்கவில்லை.

இதுதான் இந்தியா.....?

செய்தி ஆதாரம்.

THE NEW INDIAN EXPRESS 31 DECEMBER 2011

# மயிலாடுதுறை மன்சூர் கைலி சென்டரில்... நடந்தது என்ன?

## கள ஆய்வு

### கர்கரேயைக் கொலை செய்தது யார்?..

என்ற நூலைத் தமிழில் கொண்டு வந்திட வேண்டும் என முடிவு செய்தபோது நூலாசியர் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்களும் வெளியீட்டாளர் பெரோஸ் மீடியாவும் ஆர்வமுடன் அனுமதி தந்தார்கள்.

மிக வேகமாக மொழிபெயர்த்து அதைத் தமிழில் கொண்டு வந்தோம். மதுரையில் வெளியிட்டோம். அதன் பிறகு அதனை மாவட்டந்தோறும் வெளியிடும் ஒரு மகத்தான இயக்கத்தையும் நடத்தினோம். உண்மையைச் சொன்னால் இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகத்தை வெளியே கொண்டு வந்தோம்.

அதனை கும்பகோணத்தில் வெளியிடும் பணியை அண்ணன் டி.எம். உமர் ஃபாரூக் மேற்கொண்டார்கள். மயிலாடுதுறையில் வெளியிடும் பணியை தம்பி அப்துல் ரவூஃப் அவர்கள் மேற்கொண்டார்கள்.

ஆனால் நிகழ்ச்சியை தடுக்க, உளவுத்துறையும், அதன் கடைக்கண் அசைப்பில் இயங்கிய காவல் துறையும் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டது. உள்ளூரிலுள்ள காவல்துறையினர் தன் கைப்பாவையினரையும் முடுக்கிவிட்டார்கள்.

தம்பி அப்துல் ரவூஃப் ஆடிட்டர் அப்துல்லாஹ் உள்ளிட்ட குழுவினர் பம்பரமாகச் செயல்பட்டார்கள். இந்த நிகழ்ச்சியில் மக்கள் கலந்து கொள்வதைத் தடுக்க உளவுத் துறை மேற்கொண்ட முயற்சியில், பல முஸ்லிம் முஹல்லாக்களில் துண்டுப்பிரசுரங்கள் கொடுப்பதைத் தடுத்தார்கள். இதனை அவர்கள் நேரடியாகச் செய்திட வில்லை.

உள்ளூரிலுள்ள தங்களது கைக் கூலிகளையே பயன்படுத்தினார்கள்.எப்போதும், முஸ்லிம்களோடு மோதுவதில்லை, என்ற நமது முடிவை குலைத்திட தங்களால் இயன்றதையெல்லாம் செய்தார்கள். நாம் உறுதியாக நின்றோம் நமது முடிவில்.

நாம் ஒட்டிய சுவரொட்டிகளின் மேல் சுவரோட்டிகளை ஒட்டிட தங்களால் இயன்றதையெல்லாம் செய்தார்கள். இதில் இந்துத்துவ சக்திகள் உளவுத்துறைக்குப் பல்வேறு பகுதிகளிலும் உதவிசெய்தன. ஆகவே மயிலாடுதுறையில் அவர்கள் துணை நின்றதில் நமக்கொன்றும் ஆச்சரியம் இல்லை.

இதனிடையே தம்பி அப்துல் ரவூஃப் மீது மொட்டைப் பெட்டிஷன்கள் பறந்துகொண்டிருந்தன. இது நமக்குத் தெரியாது தெரிய வாய்ப்பில்லை.

எல்லா தடைகளையும் தாண்டி நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் வேகமாக நடந்து கொண்டிருந்தன.

நமது கர்கரேயைக் கொலை செய்தது யார்?. என்ற நூலின் மகத்துவம் என்னவெனில், அதில் பொதிந்துகிடக்கும் உண்மைகள் முஸ்லிம்களையே சுற்றிக் கொண்டிருப்பதில் எந்தப் பயனுமில்லை. மாறாக அஃது. சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களைச் சென்றடைந்திட வேண்டும். ஆகவே சகோதர சமுதாயத்தவர்களிடம் இதனைக் கொண்டு சேர்ப்பதில் நாம் முழுமையாகக் கவனம் செலுத்தினோம்.

முஸ்லிம்களிடையே கைக்கூலிகளைக் கண்டுபிடித்த உளவுத்துறையினருக்கு சகோதர சமுதாயத்தில் ஊடுருவுவதில் அதிக சிரமம் இருக்கவில்லை.

ஆனால் உண்மையை விரும்புகின்றவர்கள் எல்லா இடமும் இருக்கின்றார்கள். அந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் நிரம்பவே வந்தார்கள் ஆனாலும் பலரை காவல்துறையினர் வரவிடாமல் தடுத்துவிட்டார்கள். இதற்கு அவர்கள் ஒரு தனியுக்தியைக் கடைப்பிடித்தார்கள்.

நிகழ்ச்சி நடந்த மண்டபத்திற்கு வெளியே நின்றுகொண்டார்கள். வந்துகொண்டிருந்த சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களை பல கேள்விகளைக் கேட்டுத் துழைத்தெடுத்தார்கள். நீங்கள் எங்கே போகின்றீர்கள் என்பதே முதல் கேள்வி. அவர்கள் நாங்கள் நிகழ்ச்சிக்குப் போகின்றோம் எனச் சொன்னால், அஃது முஸ்லிம்கள் நிகழ்ச்சி நீங்கள் ஏன் அங்கே போகின்றீர்கள், கலகம் விளைவிக்கவா? என்ற கேள்விக்கனைகளைத் தொடுத்தார்கள். இந்த கேள்விகளுக்குப் பின், சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் நிச்சயமாக நிகழ்ச்சிக்கு வரமாட்டார்கள்

உளவுத்துறையின் இந்த வினாவையும் விஞ்சி. சிலர் நிகழ்ச்சி எல்லோருக்குந்தான் முஸ்லிம்களுக்கு மட்டும் அல்ல, எங்களையும் அழைத்தார்கள் என்று சொன்னால். அழைப்பிதழ் கையிலுக்கின்றதா? எனக் கேட்டார்கள்.

உண்மையில் நாம் நோட்டீஸ் என்ற கையேடுகளை விநியோகித்தோம் தம்பி ரவூஃவும், மற்றவர்களும் அனைவரையும் அழைத்தார்கள்.

ஆகவே யார் கையிலும் அழைப்பிதழ் இல்லை. இதையே காரணம் காட்டி அவர்களை உள்ளே வரவிடாமல் தடுத்துவிட்டார்கள்,

இத்தனைக்கும் பிறகும் சிலர் உளவுத்துறையின் கண்களுக்கு அகப்படாமல் அரங்கத்திற்கு வந்துவிட்டார்கள்.

அரங்கத்தில் சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் கலந்துகொண்டது உளவுத்துறைக்கு ஓர் அதிர்ச்சியாகவே இருந்தது. அத்தனை கோபமும் தம்பி அப்துல் ரவூஃப் அவர்கள் மீதே பாய்ந்தது.

தங்களை உளவுத்துறையினர் எப்படி யெல்லாம் தடுத்தார்கள், என்பதை, சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் எங்களிடம் விரிவாக எடுத்துச் சொன்னார்கள்.

அதில் முத்தாய்ப்பாக அமைந்தது மயிலாடுதுறை பேருந்து நிலையத்தில் அவர்கள் வைத்திருந்த அறிவுப்புப்பதாகை(பிளக்ஸ்) ஏறத்தாழ ஐந்து நாட்கள் அப்படியே நின்றது.

'அபிநவ் பாரத்' என்ற இந்துத்துவ தீவிரவாத அமைப்பு அதன் பின்னணியில், நமது மத்திய உளவுத்துறை இவைதான் நேர்மையான அதிகாரி கர்கரேயைக் கொலை செய்தது என்ற செய்தி பட்டி தொட்டியெங்கும் பரவின.

நிகழ்ச்சியைத் தடுக்க மேற்கொண்ட எல்லா முயற்சிகளும் தோற்றுப்போகவே, வேறு வழியின்றி தம்பி அப்துல் ரவூஃப்- ஐ குறிவைத்தார்கள் காவல்துறையினர்.

இந்துத்தீவிரவாதிகளைக் கொண்டு மொட்டைப் பெட்டிஷன்களைப் போட வைத்தார்கள். அப்துல் ரவூஃப் கட்டிக் கொண்டிருந்த கட்டிடத்தைக் குறிவைத்தார்கள்.

நகராட்சியைக் கொண்டு அவருக்கோர் தாக்கீது அனுப்பினார்கள். கட்டிடத்தின் மாடிகள் அனுமதி இல்லாமல் கட்டப்படுவதாகவும், அதனை இடிக்கத் தயாராக இருப்பதாகவும், அறிக்கை விட்டார்கள். பட்டாங்கமாக அதனை வெளியிட்டன பத்திரிகைகள்.

பத்திரிகைகளில் வந்தனவற்றைச் சுட்டிக் காட்டி லட்சக்கணக்கில் கேட்டார்கள். ஐந்து பைசா கூட தந்திட இயலாது எனக்கூறி சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள் ரவூஃபும், ஆடிட்டர் அப்துல்லாஹ்வும் வெற்றியும் பெற்றனர்.

அதனை பொறுத்துக் கொள்ள மாட்டாமல் வேறு உபாயங்களைக் கையாண்டார்கள் காவல்துறையினர் தொடர்ந்தன மொட்டைப் பெட்டிஷன்கள்.

அதுவும் வெற்றி பெறாமல் போனதால் தருணம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இந்நிலையில்தான், ஜூலை மாத நிகழ்வுகள் இடம் பெற்றன. மன்சூர் கைலி சென்டர் அப்துல் ரவூஃப் அவருடைய நண்பர்கள் எல்லோரையும் பழிதீர்க்க களமிறங்கினர்.

## காவல்துறையினர் பின்னணியில் உளவுத்துறையினர்.

"கூடாஒழுக்கமுள்ள" சிலர் தங்கள் கேளிக்கைக்குப் பயன்பட்ட பெண்கள் மாட்டிக் கொண்டால் தங்கள் கீர்த்தியும் கித்தாப்பும் தரையிலே விழும் என்பதால் அலறிஅடித்துக் கொண்டு களமிறங்கினர். பணத்தைத் தண்ணீராய் கொட்டினார்கள்.

அவர்களுக்கு மானமா? மரணமா? என்பதே வினா?

தங்கள் கைகளிலிருந்த சங்கப் பரிவாரக் கும்பலை, உசுப்பிவிட்டார்கள். ஒழுக்கக் கேடான ஒரு விஷயத்தை வகுப்புவாதப் பிரச்சனைபோல் சித்தரித்தாகள். காவல்துறையினர் போதிய அளவில் உதவி செய்தார்கள். ஏனெனில் அவர்களுக்கு இதுதான் நேரம். மட்டுமல்ல பணம் தாராளமாகப் புழக்கத்தில் விடப்பட்டது.

நடந்தது என்ன? என்பதைப் பற்றிச் சற்றும் கவலைப்படாமல், கர்கரே நிகழ்ச்சியை நடத்தியது நீதானா எனக் கேட்பதிலேயே குறியாக இருந்தார்கள். இதைக்கொண்டே தம்பி அப்துல் ரவூஃப் அவர்களையும் ஏனையயோரையும் சித்திரவரைச் செய்தார்கள்.

அத்தனை பேரையும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கியது மட்டுமல்லாமல், மின்சாரத்தை தலையிலே பாய்ச்சி சித்திரவதை செய்தார்கள்.

இதனிடையே முஸ்லிம்கள் பெருமளவில் காவல் நிலையத்தின் முன் குழுமினார்கள். சமுதாய சேவகன் ஒருவனை எப்படி இப்படி சித்திரவதை செய்யலாம். போலிப் புகார்களைக் கொண்டு எப்படி அவர்களை இப்படி அல்லல்களுக்குள் ளாக்கலாம் என்றெல்லாம் வினாக்கள் பறந்தன. எதற்கும் பதில் சொல்லிடாத அதிகாரிகள் ஒரு சில போலிவழக்குகளைச் ஜோடித்தார்கள்.

சிறையிலடைக்க வேண்டும் என்ற தங்கள் விருப்பத்தை நிறைவேற்றினார்கள்.

அதன் பின்னர் அவர்கள் விட்ட புருடாக்களும், பத்திரிகைகளை அவர்கள் பயன்படுத்திய விதமும்.

**இன்ஷா அல்லாஹ்...**

**அடுத்த இதழில்.......**

owned and Published by M. Gulam Mohamed From 52/1, Mannady Street, Mannady, Chenni - 600 001. Editor : M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street Chennai - 600 002.